விலை
ரூபா
20.00



திரும்புகிறது படைகள்

பக்கம் 09



தினமும் கங்கையில் 290 கோடி லீற். கழிவு

பக்கம் 10



இலங்கையால் நிராகரிக்க முடியாது

பக்கம் 18



மானிப்பாயை வீழ்த்தியது சுதுமலை

பக்கம் 22

www.onlineuthayan.com

பக்கங்கள்: 34

★

# உதயன்

சுடர் 27
கதிர் 145

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 07 வியாழக்கிழமை (19/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஈழத் தமிழர் மீது கொண்ட அக்கறையினாலேயே ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தது இந்தியா

## யாழ்ப்பாணத்தில் சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஏப்ரல் 19*

***இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்தும் அதற்கு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற அக்கறையினாலுமே ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தது என்று தெரிவித்தார் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மா சுவராஜ்.***

***தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தலைவர்கள், உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகள், முக்கிய ஆலயங்களது பாதிரிமார்கள், இந்துக் குருமார்கள் உட்பட சிவில் சமூகத்தினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.***

04



யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வந்திறங்கிய 'இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இந்திய த் தூதரக அதிகாரிகளால் வரவேற்கப்பட்ட போது.

## எஞ்சியுள்ளோர் சொந்த இடம் திரும்ப இந்திய அரசு அழுத்தம் தர வேண்டும்

### மனிக்பாம் மக்கள் சுஷ்மாவிடம் நேரில் வலியுறுத்து

வவுனியா, ஏப்.19

நலன்புரி நிலையங்களில் தொடர்ந்து வசிப்பதால் நாங்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். எமக்கு இப்போது முக்கியமானது எமது சொந்த இடங்களில் மீளக் குடியமர வேண்டும் என்பது தான். எனவே எம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நேற்றுக் காலை வவுனியா செட்டிக்குளம் மனிக்பாம் கதிர்காமர் நலன்புரி நிலையத்துக்குச் சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அங்கு தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் முறையிட்டனர்.

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று முற்பகல் 10 மணிக்கு மனிக்பாம் கதிர்காமர் முகாமுக்குச் சென்றது. அங்கு அவர்களை வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் வரவேற்றார். அதன் பின்னர் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அவர் இந்தியக் குழுவினருக்கு விளக்கமளித்தார்.

இந்தக் கூட்

04

## சந்திரிகா – மன்மோகன் டில்லியின் திடீர் சந்திப்பு

புதுடில்லி, ஏப்.19

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குமிடையிலான முக்கியமான சந்திப்பொன்று புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஈழத் தமிழர்களின் பிரச்சினை உட்பட இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்திரிகாவின் விருப்பத்தைக் கேட்டதாகவும் அதற்கு அவர் பச்சைக் கொடி காட்டியதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசியல் விவகாரங்கள்

04

## பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவும்

### மனிக்பாமில் இந்தியக் குழு உறுதி

வவுனியா, ஏப்.19

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்திய அரசு தொடர்ந்தும் தனது உதவிகளை வழங்கும். இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது. மக்களின் தேவைகளை நேரில் ஆராய்வதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

இவ்வாறு நேற்று மனிக்பாம் கதிர்காமர் முகாமில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த இந்திய

04

## யாழ். மேதின நிகழ்வை ஐ.தே.க. கைவிடுமாம்

கொழும்பு,ஏப். 19

யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள மேதினக் கூட்டத்தை கைவிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாக அந்தக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தாம் ஏற்பாடு செய்துள்ள மேதினக் கூட்டத்தைச் சீர்குலைக்க அரசு தீர்மானித்துள்ளதென எதிர்க்கட்சி பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க ஊடகங்களுக்குக் கூறியுள்ளதாகவும் அதனை நம்பத் தாம் தயார் இல்லை எனவும்

04

## வடமராட்சியில் காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ். வடமராட்சிப் பகுதியில் காணாமற்போன இளைஞர் ஒருவர் பற்றை ஒன்றிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று மாலை 6 மணிக்குத் தனது உறவினர் ஒருவருடைய வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற குறித்த இளைஞர் மறுநாள் வரை வீடு திரும்பாமையை அடுத்து அவரைக் காணவில்லை என வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் அவரது தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், குறித்த இளைஞர், நேற்றுக்காலை அவரது வீட்டிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர்

04

## ஜூன் மாதத்துடன் வன்னியில் மீளக்குடியமர்வு பூர்த்தியாகும்

### சுஷ்மாவிடம் உறுதியளித்தார் மீள்குடியேற்ற அமைச்சர்

வவுனியா, ஏப்.19

எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் பணி முற்றாக முடிவடையும் என மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜிடம் உறுதியளித்தார். அதற்கான நடவடிக்கை

04

## திமுத்து கடத்தல் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஏப். 19

மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர் திமுத்து ஆட்டிகல கடத்தப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட மர்மச் சம்பவத்தின் பின்னணியில் புதைந்து கிடக்கும் உண்மைகளை அம்பலப்படுத்துவதற்காக விசாரணை நடவடிக்கைகளில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி திமுத்து ஆட்டிகல கடத்தப்பட்டார் எனக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடும், 10ஆம்

04

### அரசு வசம் எண்ணெய்க் குதங்கள்

*திருகோணமலை சீனன்குடாவில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களை வரி ஒப்பந்த அடிப்படையில் கனிய எண்ணெய்வளக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச வட்டாரங்களிலிருந்து செய்தி வெளியாகியுள்ளது. இவ்வாறு வரி ஒப்பந்த அடிப்படையில் கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள எண்ணெய்த் தாங்கி தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

### பொலிஸ் பரிசோதகர் கைதானார்

*கஞ்சா வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவிருந்த சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றிய கஞ்சாவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதில்லையெனக் கூறி, சந்தேக நபரிடம் பத்தாயிரம் ரூபா லஞ்சம் கோரினார் என்ற சந்தேகத்தின் பேரில் அம்பேகமுவைப் பொலிஸ்நிலைய உப பரிசோதகரை லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக் குழுவினர் கைதுசெய்துள்ளனர். வெள்ளவாய நீதிமன்றத்தின் முன்னால் உள்ள தேநீர்க் கடையொன்றில் வைத்து கஞ்சா வழக்கில் சம்பந்தப்பட்ட சந்தேகநபரிடம் பத்தாயிரம் ரூபாவை லஞ்சமாக அவர் கோரியுள்ளார்.*

### கிழக்கை மீண்டும் கைப்பற்றுவோம்: முதல்வர் நம்பிக்கை

*கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டால் புதிய வியூகங்களை வகுத்து சபையை மீண்டும் தாமே கைப்பற்றுவோம் என்று கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒரு வருடம் இருக்கின்ற நிலையில் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலை இப்போதே நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார் எனக் கூறப்படும் நிலையில் அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார். அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்திவிடாது, தொடர்வதற்கு மாகாணசபையை மீண்டும் கைப்பற்ற வேண்டிய தேவையுள்ளது என்றார் அவர்.*

### புனர்வாழ்வு பெறுபவர்களின் புத்தாண்டு விழா

*புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலி உறுப்பினர்களின் புத்தாண்டு விழா இன்று வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ரீ.பி. ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்.*

### மாவட்ட நீதிவானாகவும் கணேசராஜா

*யாழ். மாவட்ட நீதிமன்றுக்கு நிரந்தர நீதிபதி ஒருவர் நியமிக்கப்படும் வரை, யாழ். நீதிவான் நீதிமன்றக் கடமைகளுக்கு மேலதிகமாக யாழ். மாவட்ட நீதிமன்றக் கடமைகளையும் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்கொள்வார். நீதிச்சேவைகள் ஆணைக்குழு, இந்தக் கடமையையும் மேற்கொள்ளுமாறு அவரைப் பணித்துள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூருக்கு நேரடியாகச் சென்று பார்க்கவேண்டும் இந்தியக் குழு

## திருமலை நகர சபை உறுப்பினர் கோரிக்கை

திருகோணமலை, ஏப்.19

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழு சம்பூரை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அகதி முகாம்களில் வாழும் மக்களின் துயரங்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

திருகோணமலை மாவட்டம், சம்பூர் கிராமத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த வளமிக்க பூமி அனல் மின் நிலையம் என்ற போர்வையில் பறிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை,சம்பூர் கிராமத்தில் இந்திய அரசின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத் திட்டத்தாலும், போரினாலும் பாதிக்கப் பட்டு, போர் முடிவடைந்த பின்னரும் தமது பூர்வீக நிலங்களில் குடியமர முடி யாதுள்ளனர் சம்பூர் மக்கள்.

மூதூர் கிழக்கில் 1,486 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர், அவர்களில் பெரும்பாலான தமிழ் மக்கள் பல வருடங்களாக அகதி முகாம்களில் சொல்லணாத் துயரங்களுடன் வாழ்கின்றனர்.

இன்றும் இந்த மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியமர முடியாமைக்கு இந்திய அரசும் ஒருவகையில் காரணம். இதனால் இந்த மக்களைச் சந்தித்து பதில் கூற வேண்டிய கடமைப் பாடு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு உண்டு.

இந்த மக்களின் பிரச்சினையை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்திக்கும் அனைத்து அரசியல் தலைவர்களும் வலியுறுத்த வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

### கடும் வெப்பத்தால் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமம்

திருகோணமலை,ஏப்.19

கிழக்கில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் சில பகுதிகளில் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட பாட்டாளிபுரம், நல்லூர், வீரமாநகர், பள்ளிக்குடியிருப்பு, சித்திக்குளம், கிளிவெட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் அவதிக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று பகுதியில் கால்நடைகளும், காட்டு விலங்குகளும் குடிதண்ணீர் இன்றி அலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது. (ச-40)

### இன்று மின்வெட்டு

எருவில்,ஏப்.19

இலங்கை மின்சார சபையின் மட்டக் களப்பு அலுவலகத்தின் திருத்த வேலைகள் காரணமாக இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் 19 இடங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. செங்கல்டி, கொடு வாமடு, தம்பானம் வெளி, பங்குடா வெளி, இலுப்படிச்சேனை, கரடியனாறு, மரப்பாலம், இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, தும்பாலஞ்சோலை, பெரிய புல்லுமலை, ஆயித்தியமலை, உன்னிச்சை மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேசங்களிலேயே இந்த மின்வெட்டு இருக்கும். (ச)



முல்லைத்தீவுக்கு பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு அங்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டது. இதன்போது தண்ணீரூற்று இ.த.க. பாடசாலையில் 35 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 2 கட்டடங்களைக் கையளித்தனர். (435)

### திருமலை முத்துமாரி பெருந் திருவிழா

திருகோணமலை, ஏப்.19

கிழக்கு மாகாணத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க திருகோணமலை, மடத்தடி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச- 40)

## கலைப் பொருள்களை விற்க வவுனியாவில் புதிய நிலையம்

வவுனியா,ஏப்.19

தேசிய அருங்கலைகள் செயலகத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை, விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையம் ஒன்று வவுனியாவில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஓமந்தை தபாலக வளாகத்திலுள்ள காணியிலேயே இந்த விற்பனை நிலையம் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அருங்கலைகள் செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர் கே.பொன்கரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் சுய தொழில் முயற்சியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் முகமாக தேசிய அருங்கலைகள் செயலகத்தால் பல்வேறு வகையான சுயதொழில் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் முதற்கட்டமாக ஓமந்தையில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் 15 இளைஞர், யுவதிகளுக்கு பனம் பொருள்சார் கைப் பணிப் பயிற்சியும், தேக்கவத்தைப் பகுதியில் சீட் நிறுவனத்திலுள்ள வலுவிழந்தோருக்கு மரம் செதுக்குதல், சிற்ப வேலைப்பாடுகள் பற்றிய பயிற்சி நெறிகளும் இடம்பெற்று வருகின்றன.

> முதற்கட்டமாக ஓம்ந்தையில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில்பனம் பொருள்சார் கைப் பணிப் பயிற்சி

ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யும் இளைஞர், யுவதிகளுக்கு பெறுமதியான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இதேபோல வவுனியா மாவட்டத்திலுள்ள ஏனைய இடங்களிலும் இந்தப் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்யும் நோக்குடனேயே, இந்தத் தேசிய அருங்காட்சியக விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை

திருகோணமலை, ஏப்.19

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வளத் தட்டுப்பாடு ஆகியவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரம சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

அண்மையில் வடக்கு கல்வி வலயத்துக்கு நேரில் சென்று அங்குள்ள பாடசாலைகளைப் பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

அங்குள்ள பாடசாலைகளில் காணப்படும் வளப் பற்றாக்குறை, கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கும் ஆளணிப் பற்றாக்குறை குறித்து வடக்கு வலய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனை அடுத்தே ஆளுநர் மேற்கண்ட உத்தரவை அதிகாரிகளுக்கு விடுத் துள்ளார்.

ஆளுநருடன் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.எம். எம்.புஷ்ப குமார, வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.விமல சேன உட்படப் பலர் சென்றிருந்தனர். (ச-40)

### அன்னை பூபதி நினைவு தினம் இன்று புலத்தில்



இந்தியப்படைகளின் அநீதிகளுக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு இன்று புலம்பெயர் தேசமெங்கும் உணர் வெழிச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். அன்னைபூபதி.

தியாகியின் 24ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

புலம்பெயர் நாடுகளில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் ஒன்றுகூடி அன்னைக்கு மலர்தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தவுள்ளனர் (உ-15)

## ஊழியர் சேமலாப நிதியை செலுத்தாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

### கூறுகிறார் வவுனியா உதவித் தொழில் ஆணையாளர்

வவுனியா, ஏப்.19

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தொழில் தருநர்கள் தம்மை ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைத்துக் கொள்ளாமை தொடர்பாக தொழில் தருநருக்கு எதிராக முறைப்பாடு செய்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வவுனியா மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி லீலாவதி ஆனந்தநடராஜா.

வவுனியா மாவட்டத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன இயங்கி வருகின்றன. இவற்றில் பல தமது நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலனில் அக்கறை இன்றிச் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஊழியர்களின் எதிர்கால நலன்கருதி அவர்களை ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைத்து அதற்கு மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தத் தவறுகின்றனர். இதனால் நிறுவனங்களில் புணிபுரியும் ஊழியர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. பல நிறுவனங்கள் இதுவரை ஊழியர்களை சேமலாப நிதியத்தில் இணைக்கவும் இல்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது தொழில் தருநர்களுக்கு எதிராகத் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அந்த நிறுவனத் தலைவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதோடு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அவர்களால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வழங்கப்படும் உதவு தொகையையும், ஊழியர்களால் செலுத்தப்படும் தொகையையும் சேர்த்து மொத்தம் 20 வீதத் தொகை அவர்கள் பணி புரிந்த காலம் முழுவதற்கும் அறவிடப்பட்டு ஊழியர்களிடம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை தமது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைத்துள்ள பலர் அவர்களுக்கான கொடுப்பனவுகளைக் குறித்த திணைக்களத்துக்குச் செலுத்தாமையால் மத்திய வங்கியானது குறித்த ஒரு தொகையைத் தண்டப் பணமாக அறவிட்டு வருகின்றது.

எனவே இந்த நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பை ஒழுங்காகச் செலுத்துவதன் மூலம் சிரமங்களைத் தவிர்க்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-400)

### 4 பிள்ளைகளின் தாயை காணவில்லை

நான்கு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணைக் காணவில்லை என்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அவரது கணவர் முறைப்பாடு செய்துள்ளார். மஞ்சந்தொடுவாயை வசிப்பிடமாகக் கொண்ட ஜனான் சித்திவஜீஹா என்பவரே காணாமற்போயுள்ளார்.

"கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் காத்தான்குடியிலிருந்து சென்றோம். இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் முன்பக்க ஆசனத்தில் அமர்ந்திருந்தார். நான் பஸ்சின் பின்பக்க ஆசனத்தில் அமர்ந்து பயணம்செய்தேன். மனநோயாளியான எனது மனைவி எனக்குத் தெரியாமல் இடையில் இறங்கிவிட்டார்" என கணவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லிப்ற்' அமைப்பதற்கு வழங்கிய நிதி எங்கே?

## போதனா வைத்தியசாலை நிர்வாகம் விசனம்; தயாராகிக்கொண்டிருக்கிறோம் என்கிறது மின்சார சபை

யாழ்ப்பாணம், ஏப்.19

*யாழ்.போதனா வைத்தியசாலையின் நான்கு மாடிக் கட்டடத்துக்கு 'லிப்ற்' அமைக்கவென மின்சார சபையிடம் வழங்கப்பட்ட 81 லட்சம் ரூபா நிதி எங்கே என்று வைத்திய அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். மின்சார சபையோ 'லிப்ற்' செய்து கொண்டிருக்கிறோம் முடிந்ததும் பொருத்துவோம் என்று பதில் கூறுகின்றோம்.*

'லிப்ற்' அமைப்பதற்கு மின்சார சபை அதிகாரிகள் ஏன் பின் நிற்கின்றனர். அந்த நிதி வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவிட்டதா எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2011 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இதற்கான நிதி வைத்தியசாலை நிர்வாகத்தால் மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஒரு வருடம் நிறைவடையவுள்ள இந்த நிலையில் இதற்கான உபகரணக் கொள்வனவுகூட இதுவரை இடம்பெறவில்லை.

வைத்தியசாலை நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்ட 81 லட்சம் ரூபா பணமும் வேறு தேவைக்கு இலங்கை மின்சார சபையால் பயன்படுத்தப்பட்டுவிட்டதா என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது என்று மற்றும் சில அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

6 மாதங்களுக்குள் 'லிப்ற்' அமைப்பதாகக் கூறிவிட்டு ஒரு வருடமாகியும் மின்சார சபையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

நோயாளர்களைச் சுமந்து கொண்டு மாடிப் படிகளில் ஏறி இறங்கும் சிற்றூழியர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் உட்பட அனைவருமே சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பார்வையாளர் நேரங்களில் மாடிப் படிகளில் பார்வையாளர்களின் நெருக்கடிக்கு மத்தியில் நோயாளர்களைக் காவிச் செல்வதும் வைத்தியர்கள், தாதியர்கள் கூட அவசரத்துக்கு மருத்துவ விடுதிகளுக்குச் சென்று வருவதில் இடையூறுகளை எதிர்கொள்வதும் தொடர்கதையாகவே உள்ளன.

மின்சார சபையினர் அசமந்தப் போக்கைக் கைவிட்டு இந்த விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டும் என்று வைத்திய அதிகாரிகள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கேட்டபோது:

மின்சார சபை அதிகாரிகளிடம் பல தடவைகள் இது தொடர்பாகக் கேட்டுள்ளோம். விரைவில் அமைத்துத் தருவதாகவே அவர்களது பதில் உள்ளது. செயற்பாட்டளவில் எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

'லிப்ற்' அமைப்பதற்குரிய விவரங்கள் தாய்லாந்து நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போது 'லிப்ற்' உபகரணங்கள் உற்பத்தி செய்யப்படுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவை எப்போது நிறைவுபெறும், இங்கு அனுப்பப்படும் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4)

## முந்திரிகைச் செய்கை தீவகத்தில் வெற்றி



*யாழ்ப்பாணம், ஏப்.19*

*வேலணை பிரதேச செயலகப் பிரிவில் மண்கும்பான் பகுதியில் கொடி முந்திரிகைச் செய்கை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.*

*மண்கும்பானைச் சேர்ந்த விவசாயியான எஸ்.விவேகானந்த ராசா தனது தோட்டத்தில் கொடி முந்திரிகைச் செய்கையை பரீட்சார்த்தமாக மேற்கொண்டிருந்தார். பத்துப் பரப்பு நிலத்தில் அவர் இந்தச் செய்கையை மேற்கொண்டிருந்த நிலையில் கூடுதலான அளவில் பழங்கள் உற்பத்தியாகி உள்ளன. இதன் மூலம் கணிசமான வருமானம் பெறக் கூடியதாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.*

*உற்பத்தி செய்யப்பட்ட முந்திரிகைப் பழங்களை யாழ். நகரில் விற்பனை செய்ததாகவும் முந்திரிகைச் செய்கை வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்தால் பிரதேச மக்கள் கணிசமான வருமானத்தைப் பெறமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ம-7)*

# காவலரண்களை அகற்ற காசு கேட்கும் படையினர்

## மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் நிலைமை

யாழ்ப்பாணம், ஏப்.19

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட நாகர்கோவில் கிழக்குப் பகுதிகளில் கைவிடப்பட்ட இராணுவக் காவல் அரண்களை அகற்றுவதற்கு மீளக்குடியமர்ந்த மக்களிடம் இராணுவம் பணம் கேட்பதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆனால் அதுபோன்ற முறைப்பாடுகள் எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று மருதங்கேணி உதவி அரச அதிபர் கூறுகிறார். மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ளடங்கும் நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அங்குள்ள மக்களின் வீடுகள் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவல் அரண்கள், பாதுகாப்பு அரண்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு இராணுவம் மக்களிடமிருந்து பணம் வசூலிப்பதாகத் தெரிய வருகிறது.

இராணுவத்தினர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபா கொடுத்தால் காவல் அரண்கள் அகற்றித் தரப்படும் என்று கூறுவதாகவும் மக்கள் உதயனிடம் தெரிவித்தனர். மிதிவெடி அபாயம் மற்றும் ஆளணி வளம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணத்தைக் கொடுத்தாவது இராணுவத்தின் உதவியைப் பெற வேண்டி இருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்த மக்கள் மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்கள். இதனால் காவல் அரண்களை அகற்றுவதில் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மருதங்கேணி உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதனைத் தொடர்புகொண்டு கேட்டபோது:-

கடந்த ஆறாம் திகதி மக்களை மீளக்குடியமர்த்தும்போது 15 நாள்களுக்குள் பாதுகாப்பு அரண்களை அகற்றித் தருவோம் என்று தெளிவாக அறிவித்திருந்தோம்.

மக்கள் மீளக்குடியமர்ந்த மறுநாளே பாதுகாப்பு அரண்களை அகற்றுவதற்கான முயற்சிகளை எமது உதவி அரச அதிபர் பணிமனை மேற்கொண்டது.

எனினும் ஏற்ற கனரக வாகனம் கிடைக்காததன் காரணமாக உடனடியாக முடியவில்லை. இருந்தும் நேற்று (18/4) தொடக்கம் அவற்றை அகற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இராணுவம் பணம் பெறுவது தொடர்பாக எனக்கு எதுவும் தெரியவரவில்லை. மக்களுக்கு நாம் வழங்கிய 15 நாள்கள் கால அவகாசத்தினுள் அவர்கள் தாமாக பாதுகாப்பு அரணை அகற்றுவதற்கு ஆர்வம் காட்டியுள்ளனர்.- என்றார். (ம-3)

# மாநாட்டு மண்டபம் அமைக்க பொதுநூலகக் கட்டடம் உடைப்பு

## பொது மக்கள் பெரும் எதிர்ப்பு; அமைச்சர் டக்ளஸ் மும்முரம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.பொதுநூலகக் கட்டடத்தின் ஒரு பகுதியை உடைத்து மாநாட்டு மண்டபம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கு மக்கள் பெரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள போதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளார்.

யாழ். மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர்கள், நூலக ஆலோசனைக் குழு, நூலக உத்தியோகத்தர் ஆகியோரை நூலக கேட்போர் கூடத்துக்கு அழைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நூலகத்தின் ஒரு பகுதியை மாற்றியமைப்பதற்கான ஒப்புதலைப் பெற்றுள்ளார்.

நூலகத்தின் கேட்போர் கூடம், கணினிக் கூடம் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்து பெரியதொரு மாநாட்டு மண்டபமாக மாற்றி அமைப்பதே அமைச்சரின் திட்டமாகும்.

தற்போது கணினிக் கூடத்துக்கு மேலேயுள்ள அறையைக் கணினிக் கூடமாக மாற்றுவதும், மாற்றியமைக்கும் மண்டபத்துக்கு அருகில் மலசலக் கூடத் தொகுதி ஒன்று அமைப்பதும் இந்தத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளன என்று அமைச்சர் தனது திட்டம் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இதற்கென வடக்கு மாகாண சபையின் நிதியிலிருந்து 10 மில்லியன் ரூபாவை ஒதுக்க வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் பொது நூலகத்தில் நடந்த கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.விஜயகாந் கருத்துக் கூறும்போது;

"நூலகப் பாவனையாளர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும், குழப்பமும் இல்லாதவாறு இந்தத் திட்டம் அமைய வேண்டும்"- என்றார்.

மாநாட்டு மண்டபத்துக்கு வருபவர்கள் நூலகத்துக்குள் நுழைய முடியாத வகையில் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நூலக கேட்போர் கூடத்தை மாநாட்டு மண்டபமாக மாற்றியமைக்கும்போது எதிர்காலத் திட்டங்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்று எதிர்க் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.

எனினும் இந்தத் திட்டத்துக்கு பெரும்பாலானோரின் ஆதரவு கிடைக்காத நிலையில் அமைச்சரும் ஆளுநரும் தன்னிச்சையாகச் செயற்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-3-13)

# தெற்கில் இருந்து திருநெல்வேலிக்கு தினமும் 20 ஆயிரம் கிலோ மரக்கறி

## பிரதேச சபைக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

திருநெல்வேலிச் சந்தைக்கு தினமும் தம்புள்ள பகுதியில் இருந்து 20 ஆயிரம் கிலோ மரக்கறி வகைகள் விற்பனைக்காக எடுத்துவரப்படுகின்றன என்று நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மரக்கறிகளின் வருகையால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் சந்தை வாய்ப்பு பெரும் வீழ்ச்சியை எட்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**தெற்கு மரக்கறிகளின் வருகையால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் சந்தை வாய்ப்பு பெரும் வீழ்ச்சியை எட்டியுள்ளது.**

கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

சந்தைப் பகுதியின் சுகாதார நிலைமை என்பது மிகவும் மோசமாகவே உள்ளது. இது சீர்செய்யப்பட வேண்டும். மரக்கறி வகைகளின் கழிவுகள் ஆங்காங்கே போடப்பட்டுள்ளன. படிக்கட்டுகளில் செல்லும் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கைபிடிகள் அமைக்கப்பட வேண்டும்.

இதேவேளை வாகனங்களுக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களுக்கு 5 ரூபாவும் பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்படுகிறது. இந்த நிலைமையும் மாற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# பொது நூலகத்தில் புதிய மண்டபம் சந்தேகத்தை தோற்றுவிக்கிறது

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.மாநகர சபை உறுப்பினர்களதும் சமூகத்திலுள்ள கல்விமான்கள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் ஆகியோரதும் அங்கீகாரம் பெறப்படாமல் பொது நூலகத்தின் ஒரு பகுதியை மாற்றியமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆளுநர் சந்திரசிறியும் முயற்சிப்பது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

யாழ்.மாநகர சபை எதிர்க் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பொது நூலகத்தில் கேட்போர் கூடம் உள்ள நிலையில் தற்போது மாநாட்டு மண்டபம் அமைக்க வேண்டிய தேவை என்ன?

ஏற்கனவே நூலகத்தின் சிற்றுண்டிச் சாலையின் ஒரு பகுதி வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடமாக அபகரிக்கப்பட்டு விட்டது.

தற்போது பொது நூலகத்தின் ஒரு பகுதியில் மாநாட்டு மண்டபம் அமைத்து அங்கு அரசியல் கூட்டம் நடத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயன்று வருகிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## நிகழ்வுகள் இன்று

**கருத்தரங்கு**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் இயற்கைப் பண்ணை திறவுநர் நடத்தும் இயற்கை விவசாயம் தொடர்பாக விவசாயிகளுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் காலை 9 மணிக்கு உடுவில் மாற்றுத்திறன் பணியகத்தில் நடைபெறவுள்ளது. (ம-8)

**ஒன்றுகூடல்**

அமலமரித்தியாகிகள் நிறுவுனர் தூய யூஜின் டிமசனட்டின் விண்ணகப் பிறப்பின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் நடத்தும் ஒன்றுகூடல் காலை 9 மணிக்கு யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-14)

**சுகாதார நிகழ்வு**

சாந்தை மற்றும் சில்லாலை வடக்கு சிறுவர் கழகம் நடத்தும் உலக சுகாதார தினம் காலை 9.30 மணிக்கு சில்லாலை கதிரை மாதா தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் திருட்டு

வவுனியா, ஏப் 19

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் கடந்த இரண்டு நாள்களுக்குள் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பல லட்சம்ரூபாபெறுமதியானபொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தெரியவருவதாவது;

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் சிவராம் என்பவருக்குச் சொந்தமான கடையின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல லட்சம் ரூபா பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கைரேகை பதியாத வண்ணம் சாதுரியமான முறையில் திருட்டு இடம்பெற்றுள்ளது என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

காலை வேளை கடைக்குச் சென்ற உரிமையாளர் கடை உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் தடயங்களையும் சேகரித்தனர். இதேவேளை நேற்றுமுன்தினம் இரவும் இ.எஸ்.ஆர் என்ற பலசரக்கு கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

(த-15-400)

# மலையகத்து மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்காதீர்கள்

## இந்தியக் குழுவிடம் கோரியது இ.தொ.கா.

கொழும்பு, ஏப்.19

மலையகத்தின் இந்திய வம்சாவளி மக்களை இந்தியா மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்கக்கூடாது என்று இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், மத்திய மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் ஆகியோர் உட்பட முக்கிய உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து மத்திய மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் 'உதய'னிடம் தெரிவித்தவை வருமாறு:-

மலையகத்திலுள்ள இந்திய வம்சாவளி மக்கள் இந்திய பூர்வீகத்தைக்கொண்டவர்கள் என்றபோதிலும் அவர்கள் தொடர்பில் இந்திய அரசு முழுமையான கவனத்தைச் செலுத்தாதிருப்பது குறித்து நாம் எமது கவலையை அவர்களிடம் தெரிவித்தோம். மலையகத்தில் வைத்திய சாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு இந்தியா செய்யும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தோம்.

மலையகத்தின் கல்வி மற்றும் வீடமைப்பு ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்கு இந்தியா முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தினோம். இரு தசாப்தகால யுத்தத்தால் வடக்கு, கிழக்கு மக்கள் பாதிக்கப்பட்டனர் என்பது உண்மை. ஆனால், அதன் பாதிப்பு மலையகத்திலும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினோம். - என்றார்.

## திமுத்து கடத்தல் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை

01 திகதி அவர் விடுவிக்கப்பட்டார் எனக் கிடைத்துள்ள தகவல்களின் தொடர்பில் அவரது முழுமையான கருத்துகளை பெற்றுக்கொள்வதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதுவரையில் அவரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில், கடத்தலில் ஈடுபட்டவர்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்று ஆய்வுகளில் ஈடுபட்டுவருகின்றது. அத்துடன், அவரது கருத்துகளுக்கமைய கடத்தியவர்கள், அவரைத் தாக்கியமை மற்றும் கைகளில் விலங்கிட்டிருந்தமை தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். மேதின நிகழ்வை ஐ.தே.க. கைவிடுமாம்

01 வைத்தால் அது வெற்றியளிக்காது என அறிந்து கொண்டுள்ள ஐ.தே.க. தற்போது கூட்டத்தை அங்கிருந்து மீளப்பெற திட்டமிட்டுள்ளதாக மைத்திரி குணரத்ன கூறினார். அரசின் சட்டவிரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்கச் சிறந்த எதிர்க்கட்சி அவசியம் எனவும் ஆனால் தற்போதுள்ள எதிர்க்கட்சி வீழ்ச்சியடைந்து செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(த)

## ஜூன் மாதத்துடன் வன்னியில் மீள்குடியமர்வு பூர்த்தியாகும்

01 அனைத்தும் எடுக்கப்பட்டு விட்டதாகவும் ஜூன் மாதத்துக்குப் பின்னர் மீளக்குடியமர்த்துவதற்கு எவருமே இருக்கமாட்டார்கள் எனவும் அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

நேற்று மனிக்பாம் நலன்புரி நிலையத்தை இந்தியக் குழு பார்வையிட்ட பின்னர் குழுவின் தலைவியான சுஷ்மாவுடன்மீள்குடியேற்றஅமைச்சர் உரையாடினார். அதன்போதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

''இன்னும் 6000 பேரே மீளக்குடியமர்த்துவதற்காக எஞ்சியுள்ளனர். அவர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் சொந்த இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது நடைபெறுகின்றன. அதனாலேயே மீள்குடியமர்வு தாமதமடைகிறது. எனினும் எதிர்வரும் ஜூன் மாதத்துடன் எல்லாம் முடிவடைந்து விடும். அதற்குப் பின்னர் முகாம்களில் எவரும் இருக்கமாட்டார்கள்'' என்று அமைச்சர் குணரட்ன வீரக்கோன் இந்தியக் குழுவிடம் கூறினார்.

(த)

## ஈழத் தமிழர் மீது கொண்ட அக்கறையினாலேயே ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தது இந்தியா

01 யாழ்ப்பாணத்தில் அளவுக்கு மீறிக் காணப்படும் இராணுவப் பிரசன்னம், விகாரைகளின் ஆக்கிரமிப்பு சட்டம் ஒழுங்கு நிலைமை என்பன குறித்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் இந்தியக் குழுவினருக்கு விளக்கினர்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதில் காலத்துக்கு ஏற்ற போதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதன்போது, வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தமது சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள நெருக்கடிகள் தொடர்பாக இந்தியக் குழுவினரிடம் மனு ஒன்றைச் சமர்ப்பித்தார். அந்த மனுவில், இலங்கை அரசு 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் பற்றியே அதிக கவனம் செலுத்தி வருகின்றது. 1990 இல் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு பற்றி எதுவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாக இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகளாக வலி.வடக்கில் 28 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதேவேளை, குறித்த சந்திப்பில் கலந்துகொள்வதற்காக யாழ்.அரச அதிபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அவர் அதில் கலந்துகொள்ளவில்லை.

(உ-10-5-3)

# எஞ்சியுள்ளோர் சொந்த இடம் திரும்ப இந்திய அரசு அழுத்தம் தர வேண்டும்

01 டத்தில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், வவுனியா கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முகாமில் தங்கியுள்ள மக்களை நேரடியாகத் தனித்தனியே சந்தித்து உரையாடினார்கள். இதன்போதே அந்த மக்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.



மனிக்பாம் முகாமில் இந்திய குழுவினருக்கு தமக்கு கிடைக்கும் அரிசியின் தரத்தை காண்பிக்கும் தாய் ஒருவர்.

இந்தியக் குழுவிடம் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதும் நாம் சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

எனவே நாம் இப்போது கேட்பது எம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்பதையே. அதற்காக நீங்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள். எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியும் எமக்குத் தேவைப்படுகிறது. முகாம்களில் எமக்குப் போதிய வசதிகள் இல்லை. தரமற்ற நிவாரணமே கிடைக்கிறது. பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வசதிகள் இல்லை. குடிசைகளுக்குள் மழை வெள்ளம் புகுவதால் பெரும் சிரமப்படுகிறோம். அடிப்படை சுகாதார வசதிகள் கூட இல்லை.

காணாமற்போதல்களும் நாளுக்கு நாள் இடம்பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் இந்தியா தலையிட்டு எமக்கு உதவவேண்டும் - என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மக்களின் குடிசைகளுக்குள் சென்று அவர்களின் வசதிகள் பற்றி ஆராய்ந்தனர். அவர்கள் அங்கு சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (த-400-402)

## வடமராட்சியில் காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்பு

01 தூரத்தில் உள்ள பற்றைக் காணியில் சடலமாகக் மீட்கப்பட்டுள்ளார்.

கெருடாவில் தொண்டமானாறைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகுமார் (வயது 18) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தப் பகுதிக்கு தேங்காய் பறிக்கச் சென்றிருந்த நபரொருவர், துர்நாற்றத்தை உணர்ந்து அங்கு நோட்டமிட்டபோது உருக்குலைந்த நிலையில் சடலமொன்று இருப்பதை கண்டுள்ளார். இதனையடுத்து பொது மக்களுக்கு விடயம் தெரிவிக்கப்பட்டு, பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. சடலம் விலங்குகளால் சிதைக்கப்பட்டு உருக்குலைந்து காணப்பட்டது.

குறித்த சடலம் தொடர்பில், வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

வைத்திய பரிசோதனைகளை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் மேற்கொண்டார். மரண விசாரணை அறிக்கையில் இளைஞர் தற்கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-3-5-8-15-253)

## பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவும்

01 நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார். முகாமில் தங்கியுள்ள மக்கள் இந்தியக் குழுவிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்கள். இதன் பின்னர் அங்கு நின்ற மக்கள் மத்தியில் சுதர்சன நாச்சியப்பன் உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்தியாவின் உதவி தொடரும். அதில் எவ்வித மாற்றமும் கிடையாது. கல்வி அபிவிருத்தி, வீடமைப்பு உட்படப் பல்வேறு வசதிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும். இது பற்றி ஆராய்வதே எமது பயணத்தின் நோக்கம்.

இந்திய மத்திய அரசுடன் இங்குள்ள நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முகாம்களில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அவர்களை மீளக் குடியமர்த்த இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு இந்திய அரசு தனது பங்களிப்பை வழங்கும் என நினைக்கிறேன் - என்றார்.

இதன்போது அங்கு கருத்து வெளியிட்ட மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் வவுனியா அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் ஆகியோர், மக்களை எதிர்வரும் ஜூன் மாதமளவில் முழுமையாக மீளக்குடியமர்த்தி விடுவோம். அவர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. தரமான உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று கூறினார்கள்.

தற்போது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றமையாலேயே மீளக்குடியமர்வு தாமதமடைவதாக வவுனியா கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இந்தியக் குழுவிடம் தெரிவித்தார்.

இதன் பின்னர் புளியங்குளம் வடக்குக் கிராமத்துக்குச் சென்ற இந்தியக் குழுவினர் அங்கு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களைச் சந்தித்ததுடன் அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள இந்திய வீடுகளையும் பார்வையிட்டனர்.

இந்தியாவின் உதவியுடன் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் ரயில் பாதைப் புனரமைப்புக் குறித்தும் இந்தியக் குழுவினருக்கு ஒப்பந்தகாரரால் விளக்கமளிக்கப்பட்டது.

(த-400-402)

# சந்திரிகா - மன்மோகன் டில்லியின் திடீர் சந்திப்பு

01 உட்பட முக்கிய பல விடயங்கள் குறித்து இந்தியப் பிரதமருக்குச் சந்திரிகா விரிவான விளக்கமொன்றை வழங்கியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், இந்தியப் பிரதமரும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியிடம் முக்கிய பல விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியுடன் இந்தியப் பிரதமர் அவசரப் பேச்சில் ஈடுபட்டமை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இராப்போசன விருந்துடன் இந்த முக்கியச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அரசியல் தீர்வு குறித்து, இலங்கை அரசின் பிரதானக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு இந்தியா உள்ளூரத் தயாராகி வருகிறது எனத் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இந்தப் பேச்சு இடம்பெற்றிருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருப்பதாகக் கூறப்படுகிறது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு



நிகழும் சர்வ மங்களகரமான கர வருடம் தைத் திங்கள் 15 ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை [29.01.2012] முற்பகல் 10.15 மணி முதல்
12.05 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும், மீன லக்கினமும்,
அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்
எமது புதல்வி திருநிறைச்செல்வி

**பைரவி** அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு
"எமது இல்லத்தில்"
பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து, செல்வியை
ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



**தவிர்க்க முடியாத காரணத்தால்(22.04.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.**
**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

பழைய தபாற்கந்தோர் வீதி,
இருபாலை, கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

திரு. திருமதி ஜெகநாதன் லலிதாம்பிகை.
ஜெகன் போட்டோ. T.P.0777666746

(17123)(2-9-7)


# யுவதி வன்புணர்வு வழக்கு; ஜூன் மாதத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

புங்குடுதீவில் யுவதி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்தார் என்று கூறப்படும் ஓட்டோச் சாரதியான சந்தேகநபர் மீதான வழக்கு ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் புங்குடுதீவில் பஸ்ஸிலிருந்து இறங்கி இருள் சூழ்ந்து விட்டதால் அங்கிருந்து ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி தனது வீட்டுக்குச் சென்றபோதே, அந்த ஓட்டோ சாரதியான அதே இடத்தைச் சேர்ந்த குமாரமூர்த்தி திலீப்குமார் என்ற சந்தேகநபர் தன்னைக் காட்டுக்குள் கொண்டு சென்று வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றார் என்று பிரஸ்தாப யுவதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனையடுத்தே சந்தேகநபரான ஓட்டோச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நீதிமன்ற விளக்கம் முடிவடையாது இருக்கும் நிலையில் பிணையில் விடப்பட்ட எதிரி முறைப்பாட்டாளருக்கும், நீதியான விசாரணைக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் எதிரி, சாட்சிகளுடனோ, முறைப்பாட்டாளர்களுடனோ தலையீடு செய்யும் பட்சத்தில் அவரின் பிணை ரத்துச் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார் எனக் கடுமையாக எச்சரித்தார்.

எதிரி அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் அது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும் எனவும் தவறின் நீதிமன்றுக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும் எனவும் எச்சரித்து வழக்கை ஒத்திவைத்தார். (ம-4)


## சாவகச்சேரி பிரதேசசபை
## 01.05.2012 முதல் 31.12.2012 வரை சந்தைகள், வண்டி வாகன தரிப்பிடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி

# அறிவித்தல் - 2012

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 19.04.2012 - 23.04.2012
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி' :- 24.04.2012 பி.ப 1.00மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 24.04.2012 பி.ப 2.00மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரங்கள் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (Vat,Nbt தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (Vat, Nbt தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை தேங்காய்ச்சந்தை உட்பட) | 3,457,800.00 | 10,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் சந்தை மீன்சந்தை | 788,500.00 | 5,000.00 | 500.00 |
| 3 | கொடிகாமம் வண்டி வாகனத் தரிப்பிட நிலையம் (கிழக்கு, மேற்கு இருவாயில்) | 303,000.00 | 3,000.00 | 500.00 |

**நிபந்தனைகள்**

1 கேள்வித்தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பவற்றுடன் 12% Vat, 2% Nbt செலுத்துதல் வேண்டும்.
2 வண்டித்தரிப்பிட நிலையத்தில் துவிச்சக்கர வண்டி ரூபா 4.00, மோட்டார் சைக்கிள் ரூபா 5.00, மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதத்தில் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.
3 சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் எந்தவித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
4 தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் ஒருவாரகாலத்தில் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப்பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
5 கேள்விப் படிவத்தின் தபால்உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
6 கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
7 மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமைப் பணிமனையில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சிற்றம்பலம் துரைராஜா
தவிசாளர்
சாவகச்சேரி பிரதேசசபை
கொடிகாமம்
19.04.2012.

(சி/2976) (45.7.9)



# IELTS

http://edu.kugroup.info/ielts

Knowledge Universe Sri Lanka

June/30th -Exam in Jaffna
KU's IELTS hotline : 0777302882
புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்
Authorized IELTS registration & Training Centre
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna



## கிருஸ்ணா இரும்பு வேலை தொழில் அகம்

எமது தொழிற்சாலைக்கு பூட்டு, கம்மாலை, உலைமுக வேலைகள், சகல இரும்புவேலைகள், மின்ஒட்டுவேலைகள் புரிவதற்கு நாள் ஊதியம் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு கூலி வேலையாள்கள் உடன் தேவை

முக்கிய குறிப்பு: தங்குமிட வசதி இலவசம்
நேர்மை, நிதானம் முக்கியம்

★ இத் தொழிற்சாலை நடத்துபவர்கள் பரம்பரை இரும்பு வேலை செய்பவர்கள்

கிருஸ்ணா இரும்பு வேலை தொழிலகம்
பிரதான வீதி, சங்கானை
செ. கோபாலகிருஷ்ணன்
T.P : 077 1051234



## உடனடி வேலைவாய்ப்பு

பின்வரும் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ படவரைஞர் (Draughtsman) - தொழில் நுட்பக் கல்லூரி தகைமைச்சான்றிதழ் மற்றும் கட்டுமானத் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.

★ AUDO CAD தெரிந்திருத்தல் அவசியம்.

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 27.04.2012 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தாபன பிரிவு
யூரோவில்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
euroville@dialognet.lk

(இ/972) (2-7-9)



## கண்ணீர் அஞ்சலி



இராமநாதன் அரசரட்ணம்
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்,
யாகொக்குவில் இந்துக்கல்லூரி)

எமது கல்லூரியில் நீண்டகாலமாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.இ.அரசரட்ணம் அவர்களின் மறைவையொட்டி துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/கோக்குவில் இந்துக் கல்லூரி.

(இ/971) (2-7-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியப் பாதுகாப்பு மாநாடு மலேசியாவில்

கோலாலம்பூர்,ஏப் 19

மலேசியாவின் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பமான 13ஆவது ஆசியப் பாதுகாப்பு சேவைகள் மாநாடு மற்றும் கண்காட்சியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ,இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்டி அபேவிக்ரம ஆகியோர் கலந்துகொண் டுள்ளனர்.

இந்த மாநாட்டில் 45 நாடுகளைச் சேர்ந்த தளபதிகள் மற்றும் பாதுகாப்புத் துறை முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்கின்றனர். மேற்கு மற்றும் கீழைத்தேய நாடுகளின் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் பங்கு கொண்ட இலங்கை இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய மலேசிய இராணுவத் தளபதி ஜெனரல் தத்துக்ஹாஜி சுல்கிப்ளி ஹாஜி செய்னுல் அப்டீனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இரு நாட்டு தளபதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த நல்லெண்ணச் சந்திப்பின் போது இரு தளபதிகளும் ஞாபகச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இதேவேளை இந்த மாநாட்டில் பங்கு கொண்ட ஆஸ்திரேலிய இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் டேவிட் மொரிஷனையும் இலங்கை இராணுவத் தளபதி சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

## 64 ஆவது பிறந்ததின நினைவும் 18 ஆம் மாத நினைவஞ்சலியும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 | | 25 |
| 04 | | 09 |
| 1948 | | 2010 |



எமது குடும்ப முதல்வர்

அமரர் சின்னப்பொடியன் இரத்தினம்

எங்கள் குடும்பத்தின் முதல்வா,
நீங்கள் எம்மைப் பிரிந்து
18 மாதங்கள் கடந்துவிட்டாலும்
உங்கள் 64 ஆம் ஜனன நாளாம் இன்றும்
உங்கள் நினைவுகள் எம்முடன் தொடர்கின்றன.

கைதடி வடக்கு,
கைதடி.
19.04.2012

குடும்பத்தினர்

## 17 ஆயிரம் அபராதம்


வல்வெட்டித்துறையில் சட்ட விரோதமாக அரச சாராயம் வைத்திருந்த இருவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் 17 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பதில் நீதிவான் அ.க.நடராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது இவர்களில் ஒருவருக்கு 10 ஆயிரமும் மற்றவருக்கு 7 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்பட்டது. (10-15)

# காணவில்லை

## Lion. தியாகராஜா பூபாலசிங்கம்

17.04.2012 இலிருந்து காணவில்லை. அதிகளவு ஞாபக மறதியால் பாதிக்கப்பட்டுள்ளமையால் உடனடி சிகிச்சை அவசியமாகவுள்ளது. தயவு செய்து அவரை காண்போர் அவரது மனைவியின் உடையை (தயா) கூறி ஞாபகப்படுத்தி பாதுகாப்பாக பொலிஸ் நிலையம் அல்லது கீழ் காணும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். கடும்நிற நீள்காற்சட்டை மென் மஞ்சள் அரைக்கைச்சட்டை Belt, கைக்கடிகாரம் மற்றும் கண்ணாடி அணிந்திருந்தார்.



## சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :

தயா 0770412010
அருள் 0772090500
சுந்தா (விஸ்வா) 0777360353
[illegible] 0714180874

# வாகன விபத்தில் அறுவர் காயம்

விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக தாளையடிக்குச் சென்று கொண்டிருந்த படி வாகனம் உடுத்துறைப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. காயமடைந்த 6 பேரும் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் உடுத்துறையைச் சேர்ந்தவர்களான தவராசா சுதர்சன் (வயது- 27), வ.நவரத்தினம் (வயது- 37), ந.ரூபரமேஸ் (வயது - 32) ஆகியோர் யாழ்.போதனா வைத்திய சாலையிலும் மருதங்கேணியைச் சேர்ந்தவர்களான சி.சிவதாஸ் (வயது - 27), ம.டினேஷன் (வயது - 16) மாசேரி வரணியைச் சேர்ந்த வ. யோகநாதன் (வயது - 27) ஆகியோர் சாவகச்சேரி வைத்திய சாலையில் கிகிச்சை பெற்று வருகின்றனர்.

கயிறிழுத்தல் போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்காக குறித்த வாகனத்தில் சென்றபோது அதன் முன் சில் காற்றுப் போனதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (10-9-4)


### தேவை

வீட்டில் நடத்தப்படும் பெண்களுக்கான தையல் நிலையத்திற்கு ஆடைகள் தைப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.

தொடர்பு: 0721328478

### காளை மாடு விற்பனைக்குண்டு

வளர்ப்புக்குரிய இரண்டு வயது நிரம்பிய காளை மாடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 57, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
T.P. : 077 3087795

### Personal Class

தரம் 3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் (No Age Limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : பருத்தித்துறை வீதி, நல்லூர், T.P : 077 2741431
(பிரபல ஆசிரியர்)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திற்குள் இருக்கும் சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2012

*சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திற்குள் இருக்கும் சிற்றுண்டி சாலைய்யை 2012-05-01ஆம் திகதி தொடக்கம் 2012-12-31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி கள் யாழ் மாநகர சபையினால் கோரப்படுகின்றது.*

| | |
|---|---|
| கேள்விப் படிவக்கட்டணம் | - 500.00 (வற் வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | - 20.04.2012 தொடக்கம் 27.04.2012 மு.ப. 10.30 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 27.04.2012 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - 27.04.2012 பி.ப 2.30 |

*விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.*

*தபாலில் அனுப்ப விரும்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 27.04.2012 திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமுகமளிக்கலாம்.*

### நிபந்தனைகள்

1. சிற்றுண்டிச்சாலை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
2. சிற்றுண்டிச் சாலைக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும். மின்சாரக் கட்டணத்துக்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15,000 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.
3. சித்தி பெற்ற கேள்விக்காரர் கேள்வித் தொகையின் ½ பங்கு தொகையை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதி தொகையை 4 மாதங்களில் சம தவணைக்கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் நிழற் படப்பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் மாநகரசபைக்கே உரியது.
6. கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் மாநகரசபையின் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

| குத்தகையின் தன்மை | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| சுப்பிரமணிம் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 3000.00 | 40,000.00 |

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.04.17.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(17110) (6,7,10)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## நாகலிங்கம் பரம்சோதி

(முன்னாள் உப்புக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

தோற்றம்: 03.08.1931

மறைவு: 26.04.2006

திதி: சதுர்த்தசி

ஆதவனாய் வாழ்ந்தீரே!
நிலைமாறும் உலகில் நிலையான உறவென்று
நாம் கண்ட தாத்தாவே! நீங்காது எம் நெஞ்சில்
மலை போல உருவெடுத்து வாழுகின்ற அன்பானவரே
மழைக்கால காளான்களாய் தோன்றி மறையும்
நிலையற்ற சொந்தங்கள் வாழுமிந்த கலியுகத்தில்
நீங்கள் ஒருவரே ஆதவனாய் வாழ்ந்தீரே!
கலையாத நினைவுகளாய் ஆறாண்டு ஆனாலும்
காலத்தால் அழியாத கண்கண்ட தெய்வமே!

பறிஜின் டிசைன் குறூப்,
100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

மனைவி, மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்
நர்மதா, மிதுன் பரிசித், நர்மதா, மேருஜன் பரதன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குறைந்தளவு உதவியேனும் வலுச் சேர்க்கும் என்ற நம்பிக்கையில்...

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்நாட்டின் அரச பிரதானிகளிடம் கேள்விக்குமேல் கேள்விகளைக் கேட்டு அவர்களைத் திக்குமுக்காடச் செய்திருக்கின்றனர். நாட்டுக்கு வரும் ஏனைய தூதுக்குழுக்கள் அல்லது இங்குள்ள நிலைமைகளைக் கண்டறியும் குழுக்கள் போலன்றி, அவர்கள் இலங்கையின் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் பிய்த்து வாங்கினார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி, இப்போதைய கட்டத்தில் எந்தெந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது குறித்துப் ''புத்திமதி'' களும் கூறிச் சென்றுள்ளனர்!

இந் நாட்டை உலுப்பி வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் அக்கறை கொள்ளாது, அதனைப் புறந்தள்ளி விட்டு, வெறுமனே அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்பது அர்த்தமற்றது; அதனால் எந்தவிதப் பயனும் இல்லை என்று இந்திய நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதே நிலையான வெற்றியைக் காண முடியுமென்று புத்தி புகட்டியுள்ளார் சுஷ்மா. அவர் எதிர்க்கட்சித் தலைவர் என்பதனால் இங்குள்ள யதார்த்தத்தை இலங்கையின் அரச பிரதானிகளிடம் புட்டு வைத்திருக்கிறார்.

எந்த நாட்டுக்கும், அதன் எல்லாப் பிரதேசங்களுக்கும் அபிவிருத்தி மிகப் பிரதானம் என்பது மறுக்கமுடியாத, மறைக்கமுடியாத உண்மை. சகல மட்டங்களையும் சேர்ந்த மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்துக்கு அபிவிருத்தி அத்தியாவசியம்.

இலங்கையில் நீண்டகாலமாகப் புரையோடி, உரிமைகள் மறுக்கப்பட்டு, இரண்டாந்தரப் பிரசைகளாக, கீழே தள்ளி விழுத்தப்பட்டுள்ள தமிழர்களுக்குச் சேரவேண்டிய அரசியல் உரிமைகளை அவர்களுக்கு வழங்காமல், ஏய்க்காட்டும் பாணியில், வரிசையில் செயற்படுவதற்கு இலங்கை அரசு முனைவதை இந்தியக் குழு முகத்தில் அறைந்தது போன்று வெளிப்படுத்தி உள்ளது. தூதுக்குழுவுக்கு அந் நாட்டு அரச தரப்பு அமைச்சர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்து வந்திருப்பின், வெறும் கூசாத் தூக்கித்தனமாக, இலங்கை அரசின் போக்கைத் தலையில் வைத்து ஆடியிருப்பார்.

இங்கு வந்த தூதுக்குழு முன்னுரிமை வழங்கக் கோரிய இனப்பிரச்சினைக்கான தீர்வை, இலங்கை அரச தரப்போ தனது ''வீட்டின்'' பின்கோடியில் தள்ளிவிட்டு, இந்தியா உட்பட எல்லா நாடுகளையும் ஏமாற்றிவரும் இரகசியம் இப்போது மெது மெதுவாக பரகசியமாகி வருகிறது!

தமிழர் தரப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குகொள்ள மறுப்பதாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தடங்கலுற்றுள்ளது என்ற அரசாங்கத்தின் அனைத்துலகத்துக்கான வேடம் பூணுதலை -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் இந்தியத் தூதுக்குழுவின் முன்னால் உடைத்து எறிந்தமையும் அம்பலப்படுத்தியமையும் அக்குழுவின் விஜயத்தால் கிடைத்த மற்றொரு சாதகமான பெறுபேறு (Plus point) ஆகும்.

ஜெனிவாத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட முக்கிய அம்சங்களில் ஒன்றான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் இலங்கை அரசு இன்னமும் தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை, தூசி தட்டித்தானும் பார்க்கவில்லை என்ற நிலையும் இந்திய நாடாளுமன்றக் குழுவினரின் விஜயத்தால் வெளிப்பட்டுள்ளது.

மேலும், ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்ததால், இலங்கை அரச தரப்புக்கு உண்டான வெப்பியாரத்தைக் தணிப்பதற்காகவே, புதுடில்லி அரசு நாடாளுமன்றத் தூதுக்குழுவைக் கொழும்புக்கு அனுப்பியது என்பது அரசியல் நோக்கர்கள் பலரின் பொதுவான கருத்தாகும். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததால், கொழும்பு மனம் நொடிந்து போனதைக் கருத்தில் கொண்டே இத்தகைய ஒரு தூதுக்குழுவை கொழும்புக்கு அனுப்புவதற்குப் புதுடில்லி அவசரப்பட்டது என்பதும் தெரிந்ததே.

இன்னொரு பக்கத்தில் நோக்கினால், ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததால், இலங்கை அரசுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவும் நெருக்கமும் இறுக்கமாகி, இணைந்துவிடும் ஆபத்தைக் கணக்கில் கொண்டுமே, சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவின் விஜயம் அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்பது அடுத்தபக்கமாகும்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது 1954ஆம் ஆண்டின் நேரு - கொத்தலாவலை ஒப்பந்தத்தில் இருந்து ஆரம்பமாகியது. மலையகத் தமிழர்களைக் கப்பலேற்றி அனுப்பி மொத்தத் தமிழ் மக்களின் சனத்தொகையை நாட்டில் குறைத்துவிடும் கபடநோக்கத்தை இலங்கை அரசுகள் அப்போதிருந்தே கையில் எடுத்தன.

அதே வரிசையில், ஆண்டாண்டு காலமாக மலையகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களில் ஐந்தே கால் லட்சம் பேரை நாடு கடத்துவதற்கு சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் வகை செய்தது.

மொத்தத்தில், இந்திய மத்திய அரசுகள், புதுடில்லி அரசுகள், தமது நலன்களை முன்னிறுத்திச் செயற்பட்டனவே அன்றி ஈழத் தமிழர்களின் நலன்களில் உண்மையான அக்கறையோ, பரிவு பாசமோ கொண்டிருக்கவில்லை.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் நசுக்கப்படுவது முதற்கொண்டு அவர்களின் பிரதேசங்கள், பல வழிகளாலும், வகைகளாலும் அதிகாரப் பலம் கொண்டு கபளீகரம் செய்யப்படுவது வரையான ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எல்லையின்றி அகலித்துச் செல்வது குறித்து தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் இலங்கை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், மற்றும் கண்டனச் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டு வருவதும் மத்திய அரசுக்கு ஒருவகை அழுத்தங்களாக மாறியுள்ளன.

அவற்றைக் கருத்தில் வைத்தே இந்திய மத்திய அரசு, இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை வைத்துள்ளதாகக் காட்டிக்கொள்கிறது என்பதே உண்மை நிலை.

அந் நாட்டின் உளமார்ந்த அரசியல் உதவி எந்தளவு குறைவாக இருப்பினும், அது தமக்கு வலுச்சேர்க்கும் என்பதனை உய்த்து உணர்ந்து, சர்வதேச அரசியல் சமன்பாடுகளுக்கும், உள்நோக்கங்களுக்கும் வளைந்து கொடுக்கும் தவிர்க்கமுடியாத ஒரு சூழவுக்குள் ஈழத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதுவே இன்றைய யதார்த்தமாகிவிட்டது!

# வடக்கில் ஆசிரியர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு அவசியம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

கல்வி அதிகாரிகள் வாக்குறுதிகள் பணிப்புரைகளை மட்டும் வழங்குவதுடன் நின்றுவிடாது, ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதா என்ற விடயத்திலும் அக்கறையாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

> தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ளக இடமாற்றம் இடம் பெறவில்லை. தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேலாக சேவை யாற்றியவர்களுக்கு உள்ளக இடமாற் றம் வழங்கப்பட வேண்டும். கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிலைமை உள்ளது.

வடக்கு மாகாண கல்விப் புலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டியுள்ளது. ஆசிரியர் இடமாற்ற விடயம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லையேல் வடக்கின் கல்வி மேலும் மோசமாகும்.

வன்னிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான ஆசிரியர் இடமாற்றத்தின் போது வன்னிப் பகுதி ஆசிரியர்களின் சேவைக்காலம் முழுமையாகக் கணிக்கப்படவில்லை. இதன் காரணமாக அந்த ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாத நிலையில் உள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு ஒன்றரை வருட காலமாகத் தீர்வு கிடைக்கவில்லை.

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ளக இடமாற்றம் இடம் பெறவில்லை. தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியவர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிலைமை உள்ளது.

ஆசிரியர் உள்ளக இடமாற்றத்தின் போதும் ஆசிரியர் இடமாற்ற சபையில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பங்குபற்றுவது அவசியம். இடமாற்ற சுற்றறிக்கை இதனையே வலியுறுத்துகிறது. தென்மராட்சி கல்வி வலயத்தில் 30 ஆசிரியர்கள் இந்த வருடம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இன்றியே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் அதிபர் நியமனம், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நியமனத்தின்போது பகிரங்க விண்ணப்பம் கோரப்பட வேண்டும். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக கல்வி அமைச்சின் மாகாண கல்விச் செயலாளர் விண்ணப்பங்களைக் கோரவேண்டும். ஆனால் வலயக் கல்விப் பணிப்பாளர்களே விண்ணப்பத்தைக் கோருவதுடன் வலயத்துக்குள்ளே சேவையில் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக பொருத்தமான அதிபர், அதிகாரிகளைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியை நிர்ணயம் செய்வது கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்க வேண்டும். சுற்றறிக்கைக்கு முரணாக நிர்ணயம் செய்வதன் காரணமாக சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் ஆளணி நிர்ணயத்தின் போது ஆசிரியருக்கு முதல் நியமனத்தின்போது வழங்கப்பட்ட பாடம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களைப் போலவே பாடசாலைகளிலுள்ள பகுதித் தலைவர்களும் உள்ளக இடமாற்றத்தின் போது உள்ளடக்கப்படவேண்டும்.

இவ்வாறு பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளருடனான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும்போது, இந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# உளநலம் பாதித்தோருக்கு கைதடியில் காப்பகம்

யாழ்ப்பாணம், ஏப்.19

உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்பகம் ஒன்றை கைதடியில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை சமுக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் காப்பகத்தை அமைப்பதற்கு முன்னேற்பாடாக அதற்கான நிதி வளத்தை ஒதுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தில் உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்பகத்தை அமைக்கவும் சமுகசேவைகள் திணைக்களம் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் பெரும் எண்ணிக்கையான மக்கள் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உளரீதியாக பாதிக்கப்பட்ட மக்களை வைத்து பராமரிக்கவும் அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் இந்த காப்பகம் அமைக்கப்படவுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனை விட கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களையும் இந்தக் காப்பகத்தில் வைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

(ம-17)

# முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் உதவிக்கடன்

### நேர்முகத் தேர்வு யாழ்.செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.19

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் மேலும் ஒரு தொகுதியினருக்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச் சால் சுயதொழில் உதவிக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

கடன் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நடத்தவுள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

(ம-9)

# பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி ,ஏப்.19

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளில் மேற்கொள்ளவேண்டிய கற்றல் மேம்பாடு மற்றும் பௌதிகவள அபிவிருத்தி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் நிறுவன திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி நி.அபிராமி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் மற்றும் 15 பாடசாலைகளின் அதிபர்களும் பொறுப்பான ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா ம.வி, கைதடி குருசாமி வித்தி, கைதடி விக்னேஸ்வரா வித்தி, கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி-நாவற்குழி அ.த.க. பாடசாலை, கச்சாய் அ.த.க பாடசாலை, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, மட்டுவில் கமலாசனி, மட்டுவில் சந்திர மௌலீச வித்தி, விடத்தற்பளை கமலாசனி வித்தி, மட்டுவில் சாந்தநாயகி வித்தி, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி, மட்டுவில் சரஸ்வதி வித்தி ஆகியவற்றில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ரூ.82.51 மில்லியன் 'நிக்கொட்' ஒதுக்கீடு

வவுனியா, ஏப்.19
வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கென 'நிக்கொட்'டினால் இந்த வருடம் 82.51 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா, வவுனியா தெற்கு, செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மருத்துவ வசதிகள் கல்வி அபிவிருத்தி, வீதிப் புனரமைப்பு, ஆசிரியர் விடுதிகள், பொது நோக்கு மண்டபங்கள், பலநோக்கு கூட்டுறவு கட்டடங்கள் என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதாக வவுனியா மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளரும் 'நிக்கொட்' திட்டப் பிரதிப் பணிப்பாளருமான எம்.கிருபாசுதன் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைக்கென ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நெடுங்கேணி, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் விவசாயத் திணைக்களங்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

வீதி அபிவிருத்திக்கென 2.636 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் 225 கி.மீ. நீளமான வைரவபுளியங்குளம் வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

கல்வி அபிவிருத்திக்கென 17.727 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நெடுங்கேணி, சேமமடு சண்முகானந்தா வித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கான ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் விருத்திக்கென 11.102 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகங்களுக்குமான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு, கண்ணாடி பொது நோக்கு மண்டபம், பட்டிக்குடியிருப்பு பொது நோக்கு மண்டபம், ஓமந்தை பொதுநோக்கு மண்டபம், வேலங்குளம் பொது நோக்கு மண்டபம், ஈரற்பெரியகுளம் பொது நோக்கு மண்டபம் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு கிராமிய அபிவிருத்தி நிலையத்துக்கான அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதியின் மூலம் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா, வவுனியா தெற்கு, செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதாக வவுனியா மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரும் 'நிக்கொட்' திட்டப் பிரதிப் பணிப்பாளருமான எம்.கிருபாசுதன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அபிவிருத்திக்கென 27.630 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5.330 மில்லியன் ரூபா செலவில் வவுனியா பொது வைத்தியசாலைக்கான 'லிப்ற்' பொருத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

புளியங்குளம் பொதுச் சுகாதார அதிகாரி அலுவலகம், விடுதிகள், தண்ணீர் தாங்கி அமைத்தல் என்பனவும் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு இந்த நிதியின் மூலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு 'ஸ்கானர்' வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன விருத்திக்கென ஒதுக்கப்பட்ட 16.165 மில்லியன் ரூபாவில் கனகராயன்குளம் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பூவரசங்குளத்திலுள்ள ஆனந்த புளியங்குளம் நீர்த்தாங்கியின் புனரமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக கிராமிய அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள 6.25 மில்லியன் ரூபாவில் பன்றிக்கெய்தகுளம் அசதபிற்றிய ஆகியபகுதிகளில் கிராமிய அபிவிருத்தி அலுவலகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், செட்டிக்குளம் பொது மண்டபம், பெரியகுளம் பொதுமண்டபம், கந்தசாமி நகர் பொது மண்டபம் என்பன அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

## படையினருக்கே முதலில் மின்சாரம்

*அக்கராயன், ஏப். 19*
*கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களை விடப் படைத்தரப்பினரை இலக்கு வைத்தே மின்சாரம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*அநேக பிரதேசங்களில் மக்கள் அதிகமாக வாழுகின்ற இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. மக்களில்லாத, படையினரின் முகாம்கள் உள்ள இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*தற்போது திருமுறிகண்டியிலிருந்து வன்னேரிக்குளம் வரை மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இங்கு திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் வரை அமதிபுரம் தவிர ஏனைய இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் இல்லை. படைமுகாம்களே அதிகளவில் உள்ளன.*

*இதேவேளை மக்கள் அதிகமாக வசிக்கும் கோணாவில், யூனியன்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.*

*இதனால் வன்னியில் மக்களுக்கா, படையினருக்கா மின்சாரம் வழங்கப்படுகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது. (க-18)*

## வவுனிக்குளத்தின் கீழான சிறுபோகம் துரிதம்

முல்லைத்தீவு, ஏப்.19
முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள வவுனிக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதால், நன்கு திட்டமிடப்பட்ட வகையில் சிறுபோக நெற்செய்கையும் ஆரம்பமாகியுள்ளது.

வவுனிக் குளத்தின் இடது கரை, மத்திய துலுசு ஆகிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அடங்கும் விவசாயச் செய்கைகள் வலதுகரை நீர்ப்பாசனத் திட்டத்துடன் இணைத்து மேற்கொள்ளப்படுகின்றன.

மூன்று நீர்ப்பாசனத் திட்டங்களிலும் ஆயிரத்து 215 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்த மாதம் 29ஆம் திகதிக்கு முன்னதாக சகல விதைப்புக்களும் நிறைவடைய வேண்டுமென வவுனிக் குளம் சிறுபோகச் செய்கைக்கான பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)



பூநகரி முக்கொம்பனில் கொள்கலனினுள் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையம் இப்படிக் காட்சி தருகின்றது. (18)

## 6 குளங்களின் புனரமைப்பு நிறைவடையும் நிலையில்

முல்லைத்தீவு, ஏப்.19
முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள ஆறு சிறியகுளங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவுபெறும் நிலையிலுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள மல்லாவிக்குளம், தேறாங்கண்டல்குளம், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டிக்குளம், அம்பலப் பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய குளங்கள் உலக வங்கியின் நிதியுதவியுடன், என்றிப் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் மல்லாவிக்குளம், தேறாங்கண்டல்குளம், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டிக்குளம் ஆகிய குளங்களின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாத மளவில் நிறைவு பெற்றுவிடும் எனவும் ஏனைய இரு குளங்களின் புனரமைப்புப் பணிகள் செப்ரெம்பர் மாத மளவில் நிறைவடையும் எனவும் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

## வெடிபொருள்களுடன் ஒருவர் கைது

மன்னார் - உப்புக்குளம் பிரதேசத்தில் வெடிப் பொருள்கள் சிலவற்றுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 15 ஜெலிக்னைட் குச்சிகளும், 20 டெட்டனேட்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவரிடம் மன்னார்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

## 18.4 மில்லியன் ரூபா செலவில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஏப்.19
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள இரு கிராமங்களின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்குரிய வேலைத் திட்டங்கள் 18.4 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் கீழ் உள்ள அதிகமான விவசாயக் கிராமங்களில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் மேட்டு நிலச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் காரணமாக இதன் கட்டுமானப் பணிகள் அழிவடைந்தன.

இந்த நிலையில் தற்போது மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட செல்வபுரம் கிராமத்தின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளும், துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புகழேந்தி நகர் கிராமத்துக்குரிய ஏற்று நீர்ப்பாசனத் திட்ட கட்டுமானப் பணிகளும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 18.4 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் நிக்கொட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் கட்டுமானப் பணிகள் ஏப்ரல் மாத இறுதியுடன் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

இதன் கட்டுமானப் பணிகள் ஏப்ரல் மாத இறுதியுடன் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத மதுபான விநியோகம்; பெண்கள் உட்பட ஐவருக்கு தண்டம்

கிளிநொச்சி, ஏப்.19
கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு மற்றும் அளவுக்கு அதிகமான கள் என்பவற்றை வைத்திருந்த பெண்கள் இருவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 200 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த பெண் ஒருவர் கிளிநொச்சி மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை இராமநாதபுரம் புதுக்காட்டுப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட அளவிலும் அதிகமான கள்ளைத் தனது உடைமையில் வைத்திருந்த வேறொரு பெண்ணை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர். இவருக்கு நீதிமன்றம் ஐநூறு ரூபா தண்டம் விதித்ததுடன் எச்சரிக்கையும் விடுத்தது.

தர்மபுரம் பகுதியில் சுமார் 13 போத்தல் கசிப்பை சைக்கிளில் எடுத்துச் சென்ற வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி தருமபுரம், கல்லாறு ஆகிய பகுதிகளில் கசிப்புடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு சுமார் 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் தண்டப்பணம் கட்டத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரம் பகுதியில் சுமார் 13 போத்தல் கசிப்பை சைக்கிளில் எடுத்துச் சென்ற வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டப் பணம் செலுத்தத் தவறின் ஐந்து மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஆஸ்பத்திரியில் நிரந்தர வைத்தியர் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.19
நயினாதீவு அரசினர் வைத்தியசாலை யில் நிரந்தர வைத்தியர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் மக்கள் வைத்திய வசதிபெற பெரும் அவலம் அடைந்து வருகின்றனர்.

நயினாதீவு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேலணை பிரதேச சபை செயலாளர் சி. சிவராசாவுக்கு வழங்கியுள்ள மனுவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல மாதங்களாக கடல் கடந்த பிரதேசமான நயினாதீவு மக்கள் வைத்திய சேவையைப் பெறுவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிரந்தர வைத்தியரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் அங்குள்ள அவசர சிகிச்சை நோயாளர், குழந்தைப்பேறு தொடர்பான பெண்கள் மற்றும் விஷகடிக்கு இலக்கானவர்கள் எனப் பலரும் அந்தரிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நிரந்த வைத்தியரை நியமிக்க வேண்டிய தேவை எமக்கு உடன் உள்ளது. கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் புதிய வைத்தியரை நியமிப்பதற்கான சிபார்சை வழங்கியிருந்தார். இந்த நிலையில் இதுவரை நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை. பதில் சேவை- இரு மணிநேர சேவை என எவரையும் எமது பகுதிக்கு நியமிக்கவேண்டாம்.

புதிய ஆளணியை எமக்கு வழங்கி எமக்கு நிரந்தர வைத்திய சேவையை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.- என்றுள்ளது. (ம)

## விளையாட்டு நிகழ்வு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சன சமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை, மாதர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் வைரவிழா நிகழ்வின் விளையாட்டு நிகழ்வுகள் இன்று மாலை 4மணிக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.


நிலையத் தலைவர் தெ. சுகிர்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (ம-14)

## அச்சுவேலியில் நூல் வெளியீடு

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய ஸ்தாபகர் சிவ ஆகம ஞானபாணு சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அவர் எழுதிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் வாழ்நாள் பேராசிரியர் கோபால கிருஸ்ண ஐயர் தலைமையில் இடம்பெற உள்ளது. இந்த நிகழ்வில் 5 நூல்கள் வெளியிடப்படவுள்ளன. (ஙு-15-11)

# காணி அபகரிப்பைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், ஈ.சரவணபவன் கூட்டாகத் தெரிவிப்பு



வலி.வடக்கில் புத்த விகாரைக்கு அருகில் புதிதாக அமைக்கப்படும் யாத்திரிகர் மடத்துக்கான கட்டுமான வேலைகள் மும்முரமாக நடைபெறுவதையும், உறுதியுடைய தனியார் காணி ஒன்றில் நிரந்தரமாக இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

யாழ்ப்பாணம், ஏப்.19
வலிகாமம் வடக்கு மற்றும் தென்மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தனியார் காணி அபகரிப்பு மற்றும் தனியார் காணிகளில் அத்துமீறி மேற்கொள்ளப்பட்டு வரும் மண் அகழ்வு தொடர்பாகச்சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தனும், ஈ.சரவணபவனும் பாதிக்கப்பட்ட மக்களிடம் உறுதியளித்தனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் வலி.வடக்கு மற்றும் தென்மேற்குக் கரையோரப் பகுதிகளுக்குச் சென்று அந்தப் பிரதேச மக்களின் குறைநிறைகளை நேற்றுக் கேட்டறிந்தனர்.

இவர்கள் வலி.வடக்கு தெல்லிப்பழை தொடக்கம் இளவாலை, போயிட்டி, சேந்தன் குளம், மாதகல், திருவடிநிலை, பொன்னாலை ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தனர்.

வலி. வடக்கில் பெருமளவிலான தனியார் காணிகளைப் படையினர் மொத்தமாக ஆக்கிரமித்துள்ளனர்.

தனியார் காணிகளில் படையினர் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர். அந்த இடங்கள் இப்பொழுதும் பெரும் பள்ளங்களாகக் காணப்படுகின்றன.

மாதகலில் உள்ள பௌத்த விகாரைக்கு அருகில் உள்ள தனியார் காணிகள் விகாரை விஸ்தரிப்புக்கு என்று கடற்படையினரால் பலவந்தமாக அபகரிக்கப்பட்டுள்ளன. இவை குறித்துப் பொதுமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறைப்பாடு தெரிவித்தனர்.

அதேவேளை பொன்னாலை தீர்த்தக் கேணியைப் பார்வையிடுவதற்குக்கூட இந்தப் பிரதேச மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும் சுட்டிக்காட்டினர். ஆனால் தென்பகுதியில் இருந்து வரும் பெரும்பான்மை இன சுற்றுலாப் பயணிகள் இந்தப் பகுதிகளுக்குச் வர எவ்வித தடையும் இல்லை என இந்தப் பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் குமுறினர்.

இவற்றை அரசின் கவனத்துக்கு கொண்டுவந்து தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-2)

## மோட்டார் திணைக்களத்துக்கு 5 பட்டதாரிகள்

யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு 5 பட்டதாரிகள் அபிவிருத்தி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் மூலம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் 50 பட்டதாரிகள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 தமிழ் பட்டதாரிகள் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஐவரும் அபிவிருத்தி உதவியாளர்களாக பணியாற்றவுள்ளனர். இவர்கள் இந்த மாத ஆரம்பத்திலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். (ம-5)

## முதியோருக்கு உடுபுடைவை

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு சித்திரை புத்தாண்டு தினத்தன்று உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி உதவியுடன் இந்த உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.என்று கூறப்பட்டது.

அதனைவிட புத்தாண்டு தினத்தன்று முதியோர்களுக்கு விசேடமான மதிய உணவு வழங்கப்பட்டதோடு சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன என்று கூறப்பட்டது. (ம-17)

## வேலணைப் பிரதேச உற்பத்திக்கே அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.19
வேலணைப் பிரதேசத்தில் அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பாண் மட்டுமே விற்பனை செய்யப்படவேண்டும்.

இதர பேக்கரிகளுக்கான உற்பத்திப் பொருள்களையும் அங்கேயே தயாரித்து வழங்குவது என்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் பேக்கரி உரிமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர்கள் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்து பாண் மற்றும் பேக்கரிகளில் உற்பத்தியாகும் பொருள்களை எடுத்து வந்து வேலணைப் பகுதியில் விற்பதைத் தடைசெய்ய வேண்டும் எனப் பேக்கரி உரிமையாளர்கள் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்மானம் எட்டப்பட்டதாகக் கூறப்பட்டது.(ம-2)

## வேலணையில் எரிபொருளுக்கு 3 நாள்களாகத் தட்டுப்பாடு

வேலணை பல.நோ.கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த மூன்று நாள்களாக பெற்றோல், மண்ணெண்ணெய் என்பவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அந்தப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாது சிரமப்படுகின்றனர். நேற்று வேலணை பல.நோ. கூ.சங்க எரிபொருள் விற்பனை நிலையம் மூடப்பட்டிருந்தது.

எரிபொருள்கள் இல்லை என்பதற்கான அறிவிப்பும் போடப்பட்டிருந்தது. இதனால் அரச ஊழியர்கள் உட்பட அனைவருமே பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

எரிபொருள் நிலைய முகாமையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் எரிபொருளை வழங்க முடியாதிருந்தது. இன்று தொடக்கம் விநியோகம் இடம்பெறும்.- என்று கூறினார். (ம-7)

# யாழ். பல்கலை உணவகத்தில் தரமற்ற வகையில் உணவுகள்

### சீர்செய்ய ஒரு வார கால அவகாசம் விதித்தது சுகாதாரப் பிரிவு

**உணவு தரமற்றதாகவும், போசாக்கு இன்றியும், சுகாதாரமற்ற முறையிலும், உள்ளதாக மாணவர்கள் குறைப்படுகின்றனர்.**

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள உணவகத்தில் சுகாதாரச் சீர் கேடான உணவு வகைகள் விற்பனை செய்யப்படுவதாக மாணவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து அங்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அங்குள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சீர்செய்யுமாறு ஒரு வார கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

ஒரு வார காலத்தினுள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் உணவகத்துக்குச் சென்ற பல்கலைக்கழக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அங்கு தரமற்ற 50 வடைகளை இனங்கண்டு அழித்துள்ளனர்.

அத்துடன் நேற்றுமுன்தினம் அங்கு விற்பனை செய்யப்பட்ட சோற்றுப்பொதி ஒன்றில் புழு இருந்ததையும் மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதுகுறித்து பல்கலைக்கழக சுகாதாரப் பகுதியினருக்கு முறையிடப்பட்டது. ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று தமக்கு இங்கு தரமான உணவு கிடைக்க வழி ஏற்படுத்துமாறும் மாணவர்கள் அப்போது கோரிக்கை விடுத்தனர்.

''இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பல தடவை முறையிட்ட போதும் அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்றும் மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்ட போதும் இரண்டு தடவைகள் உணவகம் மாணவர்களால் இழுத்து மூடப்பட்டது.

பின்னர் வேறு ஒப்பந்தக்காரர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் உணவு தரமற்றதாகவும், போசாக்கு இன்றியும், சுகாதாரமற்ற முறையிலும், உள்ளதாக மாணவர்கள் குறைப்படுகின்றனர்.

மாணவர்களின் முறைப்பாட்டை அடுத்து பல்கலைக்கழக பதிவாளர் நேற்று உணவகத்துக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டார்.

நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் எல்.எஸ்.ஜெபராசா மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஜி.மதன்குமார் ஆகியோரும் நேற்று உணவகத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

நேற்றைய தினமும், சுகாதாரத்துக்குக் கேடான வகையில் அச்சுப்பதிக்கப்பட்ட கடதாசிகளில் வைக்கப்பட்டிருந்த 5 கிலோ கிராம் றொட்டிகளும் அழிக்கப்பட்டன.


உணவகத்தில் வேலை செய்பவர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கை பெற வேண்டும்.

அங்குள்ள தேவையற்ற பொருள்கள் அகற்றப்பட வேண்டும். தூசி படிந்துள்ள பகுதிகள் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

உணவின் தராதரம் பேணப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டு ஒரு வார கால அவகாசமும் வழங்கப்பட்டது'' என்று சுகாதார அதிகாரிகள் கூறினர். (ம-4-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி
## செல்லையா ஐயர்
## கலாசார மண்டபத் திறப்பு விழா



**காலம்** :- 21.04.2012 சனிக்கிழமை பி.பகல் 2.30 மணி

**இடம்** :- செல்லையா ஐயர் மடம், ஸ்ரீசெல்வச்சந்நிதி, தொண்டைமானாறு

**பிரதம விருந்தினர்**:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்.நல்லை ஆதீனம்

**ஆசியுரை** :- ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம பூசகர்கள்

**வாழ்த்துரை** :- ஆறு. திருமுருகன் (தலைவர், துர்க்கை அம்மன் தேவஸ்தானம்)
செல்வேந்திரா (பட்டயக் கணக்காளர்)

**சிறப்புரை** :- த.ஜெயசீலன் (பிரதேச செயலாளர், வடமராட்சி)
வ.குமாரசாமி ஐயர்

**கலைநிகழ்வுகள்**:- போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்கள்
யாழ். பட்டிமன்றக்குழு வழங்கும் பொன்.சுகந்தனின் தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறும்.

**சிறப்புமலர் வெளியீட்டுரை**:-
இ.ஸ்ரீ நடராசா (அதிபர், யா/ தொண்டைமானாறு வீ.ம.வித்)

**மலர் மதிப்பீட்டுரை**:-
ந.அனந்தராஜ், நகரபிதா, வல்வெட்டித்துறை

**சிறப்புச் சொற்பொழிவு**:- அ.குமாரவேல்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். கல்லூரி, வட்டுக்கோட்டை)
சிவ.மகாலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

**சிறப்பு நாட்டிய நிகழ்வுகள்**

அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி பொன் புவனேந்திரன் ஐயர் குடும்பம்.**
**ஸ்ரீ செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடி அபாய எச்சரிக்கையை அலட்சியம் செய்ய வேண்டாம்

## யாழ். மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.19

நாகர்கோவில், முகமாலை, கிளாலி முன்னரங்க நிலைகளுக்கு அண்மையில் உள்ள 'மிதிவெடி அபாய' எச்சரிக்கைகளை அலட்சியம் செய்ய வேண்டாம். அந்தப் பகுதிகளில் செயழிலக்கச் செய்யும் பொறிமுறை இல்லாத மிதிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிக்குப் பொதுமக்களைச் செல்ல வேண்டாம் என்று யாழ். மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் கேட்டுள்ளார்.

கிளாலியில் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை மிதிவெடியில் சிக்கி இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் கேட்டபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

காயமடைந்த இளைஞர்களிடம் நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டோம்.

அதன்போது அவர்கள் மிதிவெடி அபாய அறிவிப்பு பலகையை தாண்டிச் சென்றதாகவும் இதற்கு முன்னரும் இவ்வாறு சென்றதாகவும் தெரிவித்தனர்.

நாகர்கோவில், முகமாலை, கிளாலி முன்னரங்கப் பகுதிகளில் 8 லட்சம் மிதிவெடிகள் வரையில் புதைக்கப்பட்டுள்ளன. அந்த மிதிவெடிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டவையல்ல. செயலிழக்கச் செய்யும் பொறிமுறை இல்லாத மிதிவெடிகளே அங்கு விதைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிக்குள் செல்வதாயின் உயிரைப் பணயம் வைத்தே செல்ல வேண்டும். மிதிவெடி அகற்றும் பணியார்களே இந்தப் பகுதியில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலையில் நாம் குறித்த முன்னரங்கப் பகுதிகளுக்கு மிதிவெடி அபாய அறிவிப்புப் பலகைகள் நட்டுள்ளோம்.

எனவே பொதுமக்கள் அந்தப் பகுதிக்குள் கண்ணிவெடி அகற்றி முடியும் வரையில் செல்ல வேண்டாம்.- என்றார். (ம-5)

# பாடசாலைச் சேவை இல்லை 5 கி.மீ. நடக்கும் மாணவர்கள்

தென்மராட்சி, ஏப்.19

சாவகச்சேரி நகர்ப் பகுதி கல்லூரிகளில் கல்வி பயிலும் தென்மராட்சி தெற்குப் பிரதேச மாணவர்களுக்கு பாடசாலை பஸ் சேவை நடத்தப்படாததால் மாணவர் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு நடந்து பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

கைதடி- நாவற்குழி, கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு பகுதிகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள கல்லூரிகளில் உயர் கல்வி உட்பட பல்வேறு வகுப்புக்களில் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்த மாணவர்களின் நலன்கருதி நாவற்குழியிலிருந்து தனங்களப்பு ஊடாக பாடசாலை பஸ் சேவை நடத்துமாறு உரிய தரப்புகளுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லை.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் நடந்தே பாடசாலைகளுக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை சேவைக்கென நடத்தப்படும் மினி பஸ் கோவிலாக்கண்டிப் பகுதியில் பொதுமக்களால் நிறைந்த நிலையில் வருவதால் மாணவர்களால் இந்த மினிபஸ் சேவையை பயன்படுத்த முடியவில்லை. (ம-9)

# மண் மகிமை புதுவருட சந்தை எதிர்பார்த்த வெற்றி தந்தது

## யாழ்.செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப்.19

சமுர்த்திப் பயனாளிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட மண்ணின் மகிமை புதுவருடச் சந்தை எதிர்பார்த்தளவு வெற்றியைத் தந்தது. எனினும் உற்பத்தியாளர்களால் நுகர்வோரின் கொள்வனவுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் இ.சிவசிறீ இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக புத்தாண்டை முன்னிட்டு இரண்டு தினங்கள் மண்ணின் மகிகை புது வருட சந்தை' சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்திப் பயனாளிகளால் நடத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் புத்தாண்டுச் சந்தை வெற்றிகரமாக இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான சமுர்த்திப் பயனாளிகள் இதில் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர்.

பெரும்பாலான பிரதேச செயலகங்களில் முதல் நாளுடனேயே பொருள்கள் முடிந்துவிட்டன. உற்பத்தியாளர்கள் சந்தையில் கேள்வி இருக்குமா என்ற சந்தேகத்தில் குறிப்பிட்ட அளவிலேயே பொருள்களை உற்பத்தி செய்திருந்தனர்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததைவிட மக்கள் வரவேற்பு அதிகமாக இருந்தமையால் அவர்களது பொருள்கள் நேர காலத்துடனேயே விற்பனை செய்யப்பட்டுவிட்டன.

அத்துடன் மக்கள் மிகக் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்றுக் கொண்டதுடன் உற்பத்தியாளர்களும் இடைத் தரகர்கள் இன்மையால் நியாய விலையில் விற்று பெருமளவு இலாபத்தை அடைய முடிந்தது.

சமுர்த்திப் பயனாளிகள் தாம் சார்ந்த பிரதேசத்தின் பொருள்களைத் தமது பிரதேச செயலர் பிரிவுகளில் காட்சிப்படுத்தியமையால் மக்களிடம் அதற்கான கேள்வி குறைவாக இருந்தது. ஆனால் வேறு பிரதேச பொருள்களுக்குச் சிறப்பாக வரவேற்பு கிடைத்தது.

எதிர்வரும் காலங்களில் இவற்றைக் கருத்தில் கொண்டு ஏனைய விசேட தினங்களுக்கு இவ்வாறான சந்தைகளை அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்- என்றார். (ம-5)



உடுவிலில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், சிவமாதா ஆலயம் என்பவற்றை அண்மித்த பகுதியில் ஆசிரியர் விடுதிக்கு முன்பாகவும் பல மாதங்களாகப் பொலித்தின் வெற்றுப் போத்தல்கள் உட்பட குப்பை கூழங்கள் நிறைந்துள்ளன. அவற்றை அகற்றி சுகாதாரத்தைப் பேணுமாறு உரியவர்களிடம் கேட்கின்றனர் மக்கள். (ம-4)

# அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஏப்.19

அனுமதிப் பத்திரமின்றி சிறிய வடி வாகனத்தில் தீராந்தி மரங்கள் ஏற்றி வந்த சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் கொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் அ.அ.ஆனந்தராஜா எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-9)

# நாவற்குழி-கேரதீவு வீதி புனரமைப்பு ஆரம்பம்

தென்மராட்சி, ஏப்.19

நாவற்குழி-கேரதீவு பிரதான வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்து காணப்பட்ட இந்த வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்த வீதி சேதமுற்றிருந்தமையால் கேரதீவு-சங்குப்பிட்டி வீதி ஊடான போக்குவரத்து அண்மைக்காலமாகக் குறைந்திருந்தது.

அனேகமான பஸ்கள் மற்றும் வாகனங்கள் ஏ-9 வீதியூடாகவே பயணத்தை மேற்கொள்கின்றன.

மன்னார் மாவட்டத்துக்குச் செல்லும் வாகனங்கள் கூட ஏ-9 வீதியூடாகவே பயணிக்கின்றன.

தற்போது இந்த வீதி புனரமைக்கப்படுவதை அடுத்து மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகளுக்கான போக்குவரத்து இந்த வீதியூடாக இலகுவாக இடம்பெறும் எனவும் இதனால் ஏ-9 வீதியில் போக்குவரத்து நெருக்கடி குறையும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-17)

# இப்படியும் திருட்டு

தோட்டக் கிணறுகளில் இருந்த நீர் இறைக்கும் குழாய்களை வெளியே எடுத்து அவற்றை வெட்டி அதில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்பினாலான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். அத்துடன் வாழைத் தோட்டங்களிலிருந்து வாழைக்குலைகளும் வெட்டிச் செல்லப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி மேற்கு ராச வீதியை அண்மித்துள்ள விவசாய வீதியிலுள்ள தோட்டங்களிலேயே நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தோட்டங்களில் இருந்த 18 தண்ணீர்க் குழாய்கள் வெட்டப்பட்டு அவற்றிலிருந்த இரும்பினாலான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இரண்டு வாழைத்தோட்டங்களிலிருந்து 7 வாழைக் குலைகளும் வெட்டிச் செல்லப்பட்டுள்ளன என்று அவற்றின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். இரவு என்பதால் தோட்டங்களில் எவரும் இல்லை. மறுநாள் விவசாயிகள் சென்று பார்த்தபோதே இந்தச் செயல்கள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்தது. விவசாயக் கிராமமான அங்கு ஏக்கர் கணக்கில் விவசாய உற்பத்திகள் நடைபெறும். பயிர்களுக்கான இறைப்பு தவணை அடிப்படையில் இடம்பெறும். அதனால் கிணற்றிலிருந்து நீர்ப் பம்பி மூலமாக நீரை இறைக்கும் தண்ணீர்க் குழாய்களை விவசாயிகள் தினமும் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில்லை. கிணற்றிலேயே விட்டுச் செல்வது வழமை.

இந்த நிலையிலேயே 18 தண்ணீர் இறைக்கும் குழாய்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. தற்போது அதிகரித்துள்ள இரும்பு வியாபாரமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ம-4)

# உலக உணவுத்திட்ட அதிகாரிகள் நாகர்கோவிலுக்கு வருகை

வடமராட்சி,ஏப்.19

மீள்குடியமர்வு நடைபெற்று வரும் நாகர்கோவில் கிழக்குப் பகுதிக்கு உலக உணவுத்திட்ட அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் சென்றுள்ளது.

இடப்பெயர்வால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்து வரும் இந்தப் பகுதி மக்களுக்கு உதவிகள் வழங்கும் நோக்குடன் அது குறித்து ஆராயவே இந்தக் குழுவினர் அந்தப் பகுதிக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாகர்கோவில் கிழக்கில் 113 குடும்பங்கள் மீள்குடியமர்வுக்காக அந்தப் பகுதி கிராமசேவையாளர் ந.பாலசுந்தரத்திடம் பதிவுகளை மேற்கொண்டிருந்த போதிலும், அவர்களில் 30 குடும்பங்கள் கொட்டில்களை அமைத்து மீள்குடியமர்ந்துள்ளன.

மீள்குடியமரும் மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஒன்றை ஆரம்பிக்குமாறு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (ம-8)

# வீட்டுத் திட்டக் கடனுக்கு 74 பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் பெறுபவர்களில் வீட்டுத்திட்டக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களில் இருந்து முதற் கட்டமாக 74 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் தோயல் ஜெயச்சந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில்தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை மக்கள் வங்கியுடன் இணைந்து 31.7 மில்லியன் ரூபாவை வீட்டுத் திட்டக் கடனாக வழங்கவுள்ளது. இந்த வகையில் முதற் கட்டத் தெரிவு இடம்பெற்றுள்ளது.


தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர், விவரப் பட்டியல் யாழ்.பிராந்திய முகாமையாளருக்கு சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. நிரந்தர வருமானம் பெறும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் உச்சக் கட்ட கடன் தொகையாக 5 லட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயனாளிகளுக்கு விரைவில் இந்தக் கடன் உதவி வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிரந்தர வருமானம் அற்றவர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை 23.2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இவற்றில் 28 புதிய வீடுகளும், 180 தம் உயர்த்தல் வீடுகளும் உள்ளடங்குகின்றன. புதிய வீட்டுக் கடனுக்கு 2 லட்சம் ரூபாவும் தரம் உயர்த்தல் வீட்டுக்கு ஒரு லட்சம் ரூபா வரையும் கடன்தொகை வழங்கப்பட்டுள்ளதும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-13)

# வடகொரியா மீது இறுகுகிறது தடை

வடகொரியா மீதான தனது பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இறுக்க உள்ளது.



**ஏனைய நாடுகளில் குற்றச்சாட்டுக்களை மீறி ஏவுகணைப் பரிசோதனையில் ஈடுபட்டதால் ஐ.நா. இந்த முடிவை எடுக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.**

அணு ஆயுதங்கள் தயாரிப்பதாக வடகொரியா மீது ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் குற்றம் சுமத்தி வருகின்ற நிலையில், ஏவுகணைச் சோதனை நடத்த மாட்டோம் என்று வடகொரிய தலைவர்கள் உறுதி அளித்தனர். ஆனால், அதை மீறிச் சமீபத்தில் ஏவுகணை சோதனை நடத்தியது. ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்தாலும், ஐ.நா. இப்போது, வடகொரியா மீதான பொருளாதாரத் தடையை விரிவுபடுத்தி உள்ளது. இது குறித்து, 15 நாடுகள் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. ''ஏற்கனவே பல்வேறு பொருள்கள், வடகொரிய நிறுவனங்கள் மீது ஐ.நா. பொருளாதார தடை விதித்துள்ளது. இந்தநிலையில் ஏவுகணை சோதனை நடத்தியதால், மேலும் பல பொருள்கள், வடகொரிய கம்பெனிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுகிறது. அந்த கம்பெனிகளுடன் மற்றைய நாடுகள் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள கூடாது. அதேபோல் தடைப் பட்டியலில் கூடுதலாக இடம் பெறும் பொருள்கள், தொழில் நுட்பங்களை வடகொரியாவுக்கு ஏற்றுமதி செய்ய கூடாது'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறப்புத் தூதரானார் அஞ்சலினா



ஜெனீவா,ஏப்.19

அகதிகள் மேம்பாட்டுக்கான ஐ.நா.வின் சிறப்பு தூதுவராக பிரபல ஹொலிவுட் நடிகை அஞ்சலினா ஜூலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டுப் போர், கலவரம், அடக்குமுறைகள், பஞ்சம், பட்டினி போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்கள் அயல் நாடுகளில் குடியேறுகின்றனர். சிலர், உள்நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர். இதுபோன்று உலக நாடுகளில் அகதிகளாக இருக்கும் மக்களின் மேம்பாட்டுக்காக ஐ.நா வில் ஒரு அமைப்பு தொடங்கப்பட்டது. அகதிகள் மேம்பாட்டுக்கான இந்த அமைப்பின் முதல் சிறப்பு தூதராக அஞ்சலினா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இதன் உறுப்பினர்களாக அரசு தூதர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மட்டுமே இடம் பெற்று வந்திருக்கின்றனர்.

## இணையங்களில் போதை வர்த்தகம்

நியூயோர்க்,ஏப்.19

சர்வதேச ரீதியில் இணையத்தளங்கள் மூலம் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பலரை அமெரிக்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இரகசியமான முறையில் இந்த போதைப்பொருள் வர்த்தகம் நடத்தப்பட்டுவந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் உலகளாவிய ரீதியில் உள்ளவர்கள் போதைப்பொருள்களை இலகுவில் கொள்வனவு செய்வதற்கு முடிவதாகவும் குறிப்படப்பட்டுள்ளது.

நெதர்லாந்து, அமெரிக்கா, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அமெரிக்காவின் அனைத்து மாநிலங்கள் மற்றும் 34 நாடுகளில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புகள் இருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

## பிரி.இளவரசரின் மைத்துனி மீது பிரான்ஸில் விசாரணை

லண்டன்,ஏப் 19

பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி கேத் மிடில்டனின் தங்கை பப்பா மிடில்டன், பாரிஸில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து பிரான்ஸ் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் நடந்த நிகழ்வு ஒன்றுக்காக பப்பா சென்றுள்ளார். அங்கு 3 ஆண் நண்பர்களுடன் காரில் பாரிஸை சுற்றி பார்த்துள்ளார். இதை அறிந்து புகைப்படப் பிடிப்பாளர்கள் அவர்களை படம் எடுத்தனர்.

அப்போது கார் சாரதி திடீரென கைத்துப்பாக்கியை எடுத்து ஒரு புகைப்படப் பிடிப்பாளர்களை மிரட்டி உள்ளார். இதை காரில் இருந்த பப்பா மற்றும் 3 ஆண் நண்பர்கள ரசித்து சிரித்துள்ளனர். இதனால் புகைப்படப் பிடிப்பாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனடிப்படையில் பப்பாவிடம் பிரான்ஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மரண அறிவித்தல்



### இராமநாதன் அரசரட்ணம்

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)

மலேசியா, சிறம்பானைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் அரசரட்ணம் (16.04.2012) அன்று திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா-இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் பராலக்சுமியின் அன்புக் கணவரும், அமிர்தவர்சினி (ஆசிரியை முத்துஐயன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலை), அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷன் (நில அளவையாளர், கொழும்பு) அவர்களின் அன்பு மாமனும் சீதாலட்சுமியின் அன்பு சகோதரரும் (ஓய்வு பெற்ற ஆசிரியை யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)காலஞ்சென்ற செல்வவிநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை) மற்றும் பரமேஸ்வரி, பராசக்தி, பத்மநாவதி, காலஞ்சென்ற பஞ்சரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுருஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.


### ஆறு கடைகள் வாடகைக்கு விடப்படும்

கைதடிச் சந்திக்கு அருகில் A- 9 வீதியில் உள்ள கட்டடத்தில் ஆறு கடைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- பொ.சுப்பையா
021 321 2593, 0754169276

### கடை வாடகைக்கு உண்டு

A- 9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0776184485


### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு திகதி மாற்றம்

செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்

14.04.2012 நடைபெறவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 27.05.2012 திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே அனைவரும் 27.05.2012 எமது கழகத்துக்கு வருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.16/2, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம். (17195) (2-9-6)

R.O.O.D.
தலைவர்.


### Vacancies

எமது சாவகச்சேரி, நெல்லியடி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Assist. Centre Manager - Male/ Female
- Faculty for Tally & Multimedia Courses - Male/ Female
- Faculty for Web design & Development - Male/ Female

Applicant Age Limit 18-24

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net

Jewel Plaza

தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை






தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை (24.04.2012) நாளன்று விசேட விலைக்கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசுகளும் அள்ளி வழங்கப்படும்.



கண்கவரும் டிசைன்களில் தரம், நாணயம், சரியான நிறையுடன் ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும் மற்றும் அசல் சிங்கப்பூர் நகைகளை தரம், நிறை விலைகளில் பங்கம் ஏற்படாத வண்ணம் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3124

ஜுவல் பிளாசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிலிருந்து ஆஸி; திருப்புகிறது படைகளை

ஆப்கானிஸ்தானில் உள்ள தமது படையை திருப்பி அழைக்கும் நடவடிக்கையை முன்கூட்டியே ஆஸ்திரேலியா ஆரம்பிக்க உள்ளது.

ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தானில் உள்ள தமது நாட்டுப் படையினரை இந்த வருடத்திலிருந்தே விலக்கிக்கொள்ள ஆரம்பிக்கப் போவதாக தற்போது முடிவெடுத்துள்ளது. முன்பு திட்டமிட்டிருந்த கால அட்டவணைக்கு ஒரு வருடம் முன்பாகவே துருப்பினரை விலக்கிக்கொள்வதாக அதன் தற்போதைய முடிவு அமைந்துள்ளது.

அடுத்த வருடத்தின் கடைசியில் ஆஸ்திரேலியப் படையினரின் பெரும்பான்மையானோர் ஆப்கானிஸ் தானிலிருந்து நாடு



திரும்பியிருப்பார்கள் என்பதாக தற்போதைய முடிவு அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு பணிகளுக்கு அந்நாட்டின் துருப்புகளே முழு பொறுப்பேற்கும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

2013 நடுப்பகுதி அளவில் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புக்கு பொறுப்பு வகிப்பவர்களாக அல்லாமல் அனுசரணை வழங்குபவர்களாக சர்வதேச துருப்பினரின் பங்கு மாறிவிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலியா 1,500இற்கும் சற்றுக் கூடுதலான படையினரைக் கொண்டுள்ளது. முப்பதுக்கும் அதிகமான படையினரை அது இழந்தும் உள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ தலைமையிலான சர்வதேசப் படைகளில் பெரும் பங்கினர் அமெரிக்கர்கள். 2014ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஆப்கானில் உள்ள தமது படையினரின் பெரும்பான்மையானோரை விலக்கிக் கொள்ள அமெரிக்காவும் திட்டமிட்டுள்ளது.

**ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணிகளுக்கு அந்த நாட்டின் துருப்புகளே இனி முழு பொறுப்பேற்கும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.**

# அரசியல் கைதுக்கு இனி மலேசியாவில் இடமில்லை




கோலாலம்பூர்,ஏப். 19

மலேசியாவில் சந்தேக நபர்களை அதிக காலம் வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவதையும், நபர்கள் அரசியல்சார்புக்காகக் கைது செய்யப்படுவதையும் ஒழிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட சட்டம் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

1960 முதல் மலேசியாவில் நடைமுறையில் இருந்து வரும் துஷ்பிரயோகங்களுக்கு பேர்போன உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தை நீக்குவதாக நிறைவேறியுள்ள புதிய சட்டம் அமைந்துள்ளது.

மலேசியாவில் எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்களையும் அரச விமர்சகர்களையும் வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்க இந்தச் சட்டம் பயன்பட்டு வந்தது.

தற்போது நடை முறைக்கு வந்துள்ள புதிய சட்டத்தின் கீழ் ஒருவரையும் அவருடைய அரசியல் சார்பு, அரசியல் செயற்பாடு மற்றும் நம்பிக்கைகளைக் காரணம் காட்டி கைதுசெய்ய முடியாது, எந்தக் காரணத்துக்காகவும் ஒருவரை 28 நாள்களுக்கு மேல் வழக்கு விசாரணையின்றி தடுத்துவைக்க முடியாது.

கடந்த மாதம் மலேசிய நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு மாதத்துக்குப் பின்னரே நடைமுறைக்கு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### பெண் கல்வியை எதிர்த்து

# குடிதண்ணீரில் நஞ்சு கலந்த தீவிரவாதிகள்



காபூல்,ஏப்.19

ஆப்கானிஸ்தான் பாடசாலையொன்றில் நச்சுத் தன்மையான நீரை அருந்திய சுமார் 150 மாணவிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பெண் கள் கல்வி கற்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் குழுவினரே இந்த நீரில் நஞ்சு கலந்திருக்கலாம் என ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் வட பிர்ரந்தியத்திலுள்ள மகளிர் உயர் பாடசாலையொன்றில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சுமார் 150 மாணவிகள் தலைவலி, வாந்தி முதலானவற்றால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும் ஏனையோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்ப உள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் 1996ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையான தலிபான்களின் ஆட்சிக்காலத்தில் மகளிர் அங்கு கல்வி கற்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

2001ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், பெண்கள் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தனர். குறிப்பாக தலைநகர் காபூலில் மாணவிகளின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. எனினும் மாணவிகள், ஆசிரியைகள், மகளிர் பாடசாலைகள் மீது அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

''இந்த மாணவிகள் தமது வகுப்பறைகளில் அருந்திய நீர் நஞ்சாகியிருக்கும் என்பதில் நாம் 100 சதவீதம் உறுதியாகவுள்ளோம்.

இது பெண்கள் கல்வி கற்பதற்கு எதிரானவர்கள் அல்லது ஆயுதமேந்திய பொறுப்பற்ற தனிநபர்களின் வேலையாக இருக்கும்'' என தாகார் மாகாண கல்வித் திணைக்கள பேச்சாளர் மொஹமட் நபிஸதா கூறுகின்றார்.

# சிலியில் நில அதிர்வு

சண்டியாகோ,ஏப்.19

தென் அமெரிக்க நாடான சிலியில் 6.7 ரிச்டர் அளவிலான பெரிய நில அதிர்வு ஒன்று ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 12.50 மணியளவில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு தலைநகர் சாண்டியாகோவிலிருந்து 112 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டிருந்தது.

இந்த நில அதிர்வால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. சிலியின் கரையோரப் பகுதிகள் சிலவற்றிலிருந்து மக்களை இடம்பெயருமாறு தேசிய அவசரகால அலுவலகம் கோரியது. எனினும் ஆழிப்பேரலை அச்சுறுத்தல் இல்லையென அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நில அதிர்வால் சில இடங்களில் மின்சாரம் மற்றும் தொலைபேசி சேவைகள் செயலிழந்தன.

கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் சிலிக்கு வந்துள்ள நிலையில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரதமர் ஹார்பர், அவரின் மனைவி மற்றும் கனேடியத் தூதுக் குழுவினர் அனைவரும் நலமாக இருக்கின்றனர் என்று பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் தொடர்பாடல் பணிப்பாளர் அன்ட்ரூ மெக் டோகல் தெரிவித்துள்ளார்.

சண்டியாகோ நகரில் ஹோட்டலில் தங்கியிருந்த கனேடிய பிரதமரும் அவரின் மனைவியும் நில அதிர் வால் விழிப்படைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒபாமாவின் தலைக்கு ரூ.80 கோடி

லண்டன்,ஏப்.19

பாகிஸ்தான் தீவிரவாதியான ஹபீஸ் சயீத் தலைக்கு அமெரிக்கா ரூ.50 கோடி பரிசு தொகையை அறிவித்தது. இதற்கு போட்டியாக பிரிட்டனில் வசிக்கும் பாகிஸ்தான் வம்சாவளியான அகமது என்பவர் ஒரு பரபரப்பான தகவலை வெளியிட்டார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆகியோரை பிடித்துக் கொடுத்தால் ரூ.80 கோடி (10 மில்லியன் பவுண்ட்ஸ்) பரிசுத் தொகை வழங்குவேன் என அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், சயீத் தலைக்கு அமெரிக்கா ரூ.50 கோடி பரிசுத் தொகை அறிவித்து இருப்பதால் நானும் இந்த ரூ.80 கோடி பரிசை அறிவிக்கிறேன் என்று கூறினார். இவர் பிரிட்டனில் வசிக்கும் கோடீஸ்வரர் ஆவார்.

முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியை சேர்ந்தவர். இந்தப் பரிசுத் தொகை அறிவிப்பை தொடர்ந்து கோடீஸ்வரர் அகமதுவை கட்சியில் இருந்து நீக்க தொழிலாளர் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.



யப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் அமெரிக்க வெளியுறவுச் செயலர் கிளாரி கிளிண்டனின் உரையை யப்பானிய மொழியில் மொழி பெயர்க்கிறார் அந்தநாட்டு வெளிநாட்டுச் செயலாளர் ஹொய்ஸ் சிரோ ஜூம்பா.

### 16 ஆவது பாப்பரசரின் 85 ஆவது பிறந்த நாள்

பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப்பர் தனது 85ஆவது பிறந்த நாளை வத்திக்கான் நகரத்தில் கொண்டாடினார். முன்னதாக அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பிரார்த்தனை நடந்தது. அதில் பங்கேற்ற பாப்பரசர் ஆசிர்வாதப்பர் கூடியிருந்த மக்கள் மத்தியில் பேசினார்.

அவர் பேசும் போது, ''நான் எனது வாழ்க்கையில் இறுதிப் பயணம் மேற் கொள்கிறேன். அதில் என்ன நடக்கும் என எனக்குத் தெரியாது. ஆனால் கடவுள் என்னை வழி நடத்துகிறார். அவர் வெளிச்சமாக இருந்து வாழ்வின் இருளை அகற்றி வருகிறார்'' என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து வத்திக் கானில் உள்ள பிரஸ் கோட்கிளமென்டைன் மண்டபத்தில் பிறந்தநாள் விழா நடந்தது. அதில் ஜேர்மனியைச் சேர்ந்த மதகுருமார் மற்றும் முக்கிய அதிகாரிகள் உள்பட 150 ஜேர்மனியர்கள் கலந்து கொண்டனர்.

# கனேடியருக்குத் தூக்கு குறித்து அதிருப்தி

கனேடியர் ஒருவருக்கு ஈரான் விதித்துள்ள தூக்குத் தண்டனை மிகவும் கொடூரமானது என்றும் முறையற்ற ஈரானின் தீர்ப்பை உலகமே உற்று நோக்கிக் கொண்டிருப்பதால் இந்தப் போக்கை உடனடியாக ஈரான் மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானில் பிறந்த கனேடியர் ஒருவருக்கு உடனடியாகத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட இருப்பதாக அறிய வந்துள்ளதால் ஈரான் அரசுடன் பேசி இதனை தடுத்து நிறுத்தும் பணிகளில் கனேடிய அதி காரிகள் செயல்பட்டு வரு கின்றனர்.

உடல் சுகவீனத்துடன் போராடி வந்த தன் தாயைப் பார்க்க 2008 ஆம் ஆண்டு ஹமித் காசெமி -ஷால் என்ற கனேடியர் ஈரானுக்குச் சென்றிருந்தார்.

[illegible] தனர் எனக் கூறி அந்தநாட்டு அதிகாரிகள் ஹமித் காசெமியை சிறையிலடைத்தனர். உடனடியாக அவருக்குத் தூக்குத் தண்டனை நிறை வேற்றப்படும் என்ற நீதிமன்ற தீர்ப்பும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதை [illegible] நிறுத்து [illegible] அனைத்து முயற்சிகளையும் கனேடிய வெளியுறவுத் துறை மேற்கொண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்கிறது டில்லி



டில்லி, ஏப்.19

இந்திய எல்லைப் பகுதியில் சீனா மற்றும் பாகிஸ்தானால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் இந்திய ராணுவத்துக்கு ஆயுதங்களை விரைவாகக் கொள்முதல் செய்யவும், எல்லைப் பகுதியில் இந்தியப் படைகள் மற்றும் ஆயுதங்கள் இடம் நகர்த்தக் கூடிய வகையில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் எல்லைப் பகுதியில் 14 ரயில்வே திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் வழங்க மத்திய திட்டக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

26,155 கோடி ரூபா மதிப்பில் வடக்கு எல்லைப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து இந்திய இராணுவம் சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்கு மத்திய பாதுகாப்புத் துறைச் செயலாளர் சசிகாந்த் சர்மா தலைமையில் அதிகாரம் பெற்ற குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இந்தத்திட்டம் 2020-2021ஆம் ஆண்டில் நிறைவடையும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது. ஏற்கனவே கிழக்கு எல்லைப் பகுதியில் 9,243 கோடி ரூபா செலவில் வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத்திட்டம் 2016-1017 ஆம் ஆண்டில் நிறைவடைய உள்ளது.

சிறப்பு இராணுவப்படையினருக்கு துப்பாக்கிகள், சிறு துப்பாக் கிகள், வாகனங்கள், லேசர் கருவிகள், நீரில் செல்லும் வாகனங்கள், பரசூட்டுகள் உள்ளிட்ட பல பொருள்களை வாங்குவது குறித்து துணை இராணுவத்தளபதி தலைமையில் குழு ஒன்றை அமைக்கவும் திட்ட மிடப் பட்டுள்ளது.

ராணுவத்துக்கு ஆயுதங்கள் கொள்முதல் செய்வது குறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அந்தோணி, ராணுவத்தளபதி விகே சிங் மற்றும் ராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டுள்ளது. இந்தக் கூட்டம் மூன்றாவதாக நடந்த ஆலோசனை கூட்டமாகும். இந்த கூட்டத்தில் அமெரிக்காவிடமிருந்து 647 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் வாங்க உள்ள 144 எம்-177 ரக பீரங்கிகள் குறித்தும் ஆலோசனை செய்யப் பட்டுள்ளது.

எல்லைப் பகுதியில் கடந்த 30 நாள்களில் சுமார் 15 ஆயிரம் ராணுவ வீரர்களை சீனா நிலை நிறுத்தியுள்ளது. சுமார் 4,057 கிலோ மீற்றர், தூரமுள்ள எல்லைப் பகுதியில் உள் கட்டமைப்புகளை மேம்படுத்தியுள்ளது. குயிங்காய்- திபெத் பகுதியில் சீனா விமானப் படை மற்றும் ராணுவமும் மிகப்பெரிய அளவில் பயற்சியை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனைத் தொடர்ந்து இந்திய அரசு தனது நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தியுள்ளது. (வ)

## தினமும் கங்கையில் கலப்பு 290 கோடி லீற்றர் கழிவு

### மன்மோகன் சிங் அதிர்ச்சித் தகவல்



உலகிலுள்ள இந்துக்களால் புனித நதியாகக் கொண்டாடப்படும் கங்கை நதியில் தினமும் 290 கோடி லீற்றர் கழிவு நீர் கலப்பதாக அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த தேசிய கங்கை நதி ஆணையத்தின் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கங்கை நதியில் கழிவுகள் கலப்பது அதிகரித்து வருகிறது. சுத்திகரிக்கப் படாத கழிவு நீர், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் போன்றவை கங்கையில் கலக்கிறது. தினமும் 290 கோடி லீற்றர் கழிவுநீர் கலக்கிறது என்ற தகவல் கவலை அளிக்கிறது. இதைத் தடுக்க மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கங்கை கரையோரம் புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பது அவசியம். இதற்கான திட்டத்தை மாநில அரசுகள் வகுக்க வேண்டும். இதற்குத் தேவையான நிதியை ஒதுக்க அரசு தயாராக உள்ளது. கங்கையில் கழிவு நீரை கலக்கும் தொழிற்சாலைகள் மீது மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கங்கையைச் சுத்தப் படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை தர 7 ஐ.ஐ.டிகளை சேர்ந்த நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் 5 பூர்வாங்க அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர். இதன் அடிப்படையில் சுத்தப்படுத்தும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்- என்றார் அவர். (வ)

## சிறையில் கலவரம்

### ஐந்து பேர் காயம்

மீரட், ஏப்.18

உத்தரப்பிரதேசம் மீரட் மாவட்டச் சிறையில் கைதிகளுக்கும், சிறைத்துறை நிர்வாகத்தினருக்கும் இடையே நேற்றுக் காலை கடும் மோதல் ஏற்பட்டது.

மோதலைத் தொடர்ந்து சிறையினுள் துப்பாக்கியால் சுடும் சப்தம் கேட்ட தாகவும், சிறையில் இருந்து அதிக அளவில் புகை வெளியேறிய தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் சம்பவத்தில் சிறையின் துணை சிறைக் காவலர் உள்ளிட்ட 5 பேர் காயம் அடைந்துள்ளனர்.

விசாரணைக் கைதி ஒருவரிடம் இருந்து சிகரெட் லைட்டர் கண்டு பிடிக்கப் பட்டதையடுத்து கைதிகளுக்கும் பாதுகாவலர்களுக்கும் மோதல் ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு கைதிகளில் ஒரு பிரிவினர் தீ வைத்தனர். மேலும் சிறைப் பாதுகாவலர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இதனிடையே கைதிகளை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடப் பட்டதாக சிறைத்துறை அதிகாரி உறுதிப்படுத் தியுள்ளார்.

மோதல் சம்பவங்களையடுத்து உயர் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.(வ)

## சுற்றுச்சூழல் பரப்புரையில் அசத்தும் இந்தியச் சிறுவன்



ஐக்கிய அரபு எமிரேட்டில் 10 வயது இந்தியச் சிறுவன் ஒருவன் 'பேப்பர் பாக்' தயாரிப்பதன் மூலம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளான்.

தினமும் காகிதப் பைகள் தயாரித்து அவற்றை அருகில் உள்ள நவீன கடைத் தொகுதிகளில் கொடுப்பதை தனது அன்றாடப் பணியாக மேற்கொள்கின்றான்.

சிறு வயதில் சமூக அக்கறையுடன் அப்துல் முகீத் செயற்படுவது, மக்கள் மத்தியிலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து அப்துல் முகீத் தெரிவித்ததாவது:-

''பேப்பர் பாக்'' செய்து கடைகளுக்கு கொடுக்கும் வேலையை 8 வயதில் இருந்தே செய்து வருகிறேன். அப்பா எனக்கு கதைகள் சொல்வது போல சுற்றுப்புற தூய்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து சின்ன வயதிலேயே அடிக்கடி விளக்கிக் கூறுவார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற உணர்வு சிறு வயதிலேயே வந்தது. பள்ளி முடிந்து வீடு திரும்பியதும் பழைய பேப்பர்களை சேகரிப்பேன்.

பல்வேறு அளவுகளில் 10 - 15 பைகள் செய்வேன். அதை அருகில் உள்ள கடைகளில் கொடுத்து விடுவேன். 2 ஆண்டுகளில் இதுவரை 4 ஆயிரத்து 500 பைகள் தயாரித்து கொடுத்துள்ளேன்.

நான்தயாரிக்கும் பைகளை 'அப்துல் முகீத் பாக்' என்று அழைக்கிறார்கள்.

ஒரு தொன் பேப்பரை மறுசுழற்சி செய்வதன் மூலம் 17 மரங்கள் பாதுகாக் கப்படுகிறது என்பதை பார்க்கும் எல்லோரிடமும் உணர்த்தி பைகளை கொடுப்பேன்'' -என்கிறான் அந்தச்சிறுவன். (வ)

## 'டொப் – 50' பட்டியலில் ரஜினி



'இந்தியா டுடே' பத்திரிகையின் செல்வாக்கு உள்ளவர்களின் 'டொப்-50' பட்டியலில் நடிகர் ரஜினி காந்த் இடம்பிடித்துள்ளார்.


ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் செல்வாக்கும் உயர்மதிப்பும் கொண்ட மிக முக்கியமான மனிதர் களை பட்டியலிடுவது 'இந்தியா டுடே' பத்திரிகையின் வழக்கம். இந்த வருடமும் அவ்வாறான தொரு பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் தமிழ் நாட்டின் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை கடந்த இரு ஆண்டுகளாக அவர் நடித்த படங்கள் எதுவும் வெளிவரவில்லை. உடல் நலக்குறைவு, 'ராணா' தள்ளிப் போனமை என்று பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் செல்வாக்கு, ரசிகர்களின் அபிமானம், வரவிருக்கும் 'கோச்சடையான்' மீதான எதிர்ப்பார்ப்பு போன்றவற்றால், அவரே செய்திகளின் நாயகனாகத் திகழ்கிறார்.

'இந்தியா டுடே' கடந்த வாரம் வெளியிட்டுள்ள அந்த 'டொப்- 50 'பட்டியலில், அன்னா ஹசாரே, ரத்தன் டாடா, முகேஷ் அம்பானி, அனில் அம்பானி, அமிதாப் பச்சன், ஏ.ஆர். ரஹ்மான், யுவ் நாடார், சச்சின் டெண்டுல்கர், அஜீம் பிரேம்ஜி என பல பிரபலங்கள் இடம் பிடித் துள்ளனர்.

'தென்னாட்டு சுல்தான்' என்ற தலைப்பில், ரஜினியின் செல்வாக்கு நிலைக்கான எட்டு காரணங்களை 'இந்தியா டுடே' பட்டியல் இட்டு இருக்கிறது. (வ)



டில்லியில் டிபன்ஸ் இன்டன்சிவ் விழா ராஷ்டிரபதி பவனில் நடந்து இந்நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன்சிங் ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, மத்திய அமைச்சர் அந்தோனி ஆகியோர் பங்கேற்றனர்.

## குருவாயூருக்குச் செல்ல ஜேசுதாஸுக்குத் தடை



பாடகர் ஜேசுதாசுக்கு குருவாயூர் கோயிலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

கேரளாவின் பிரதான இந்துக் கோயிலான குருவாயூர் கோயிலுக்குள் இந்துக்கள் தவிர யாரும் நுழையக் கூடாதென்ற விதிமுறை உள்ளது.

பிரபல தென்னிந்திய திரைப்படப் பாடகரும், ஆன்மிக பாடகருமான ஜேசுதாஸ் குருவாயூர் கோயிலுக்குள் செல்லக் கூடாதென்று இந்து அமைப்புகள் தடுத்து வந்தன.

இந்தநிலையில் ஜன சேவா என்ற முன்னணி அமைப்பு ஒன்று ஜேசுதாஸை கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக மே முதலாம் திகதி வரை காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (வ)

## காந்தியின் தண்டிப் பாலம் தீயில் எரிந்து சேதம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காந்தியின் 'தண்டிப் பாலம்' தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

குஜராத் மாநிலம் தண்டியில் உள்ள ஒரு மரப் பாலத்தில் இருந்தே மகாத்மா காந்தி தனது உப்பு சத்தியாகிரக யாத்திரையை மேற் கொண்டார்.

இதனால் அந்த பாலம் 'தண்டி பாலம்' என்ற பெயருடன் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. நேற்று அந்த தண்டி பாலத்தின் அருகில் சிலர் குப்பை கூளங்களைப் போட்டு தீ வைத்துக் கொளுத்தினர்.

அப்போது அந்த பாலத்தின் அடிப் பகுதியில் உள்ள [illegible] தீப்பிடித்தது. இதில் பாலத்தின் அடிப் பகுதி சேதம் அடைந்தது. இது தொடர்பாக அகமதாபாத் மாநகர அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அயோத்தி ராமர் கோயிலுக்கு குண்டுத் தாக்குதல் மிரட்டல்

அயோத்தி ராமர் கோயிலைத் தகர்ப்போம் என்று வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப் பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் பிறந்த இடத்தில் ராம ஜென்ம பூமி கோயில் வளாகம் உள்ளது. நீதிமன்ற வழக்கு விவகாரம் காரணமாக கோயிலுக்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் அதிரடிப் படை பொலிஸாரின் காவலில் இந்த ஆலயம் உள்ளது. என்றாலும் வழக்கமான பூசை வழிபாடுகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே ராமர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. பைசாபாத் மாவட்ட நீதிபதி ராம் விரகாஷ் யாதவுக்கு இந்தக் கடிதம் சாதாரண தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அதில், ராமஜென்ம பூமி கோயில் வளாகத்தையும், மாவட்ட கோர்ட்டையும் குண்டு வைத்து தகர்ப்போம் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

மிரட்டல் வாசகங்கள் கையால் எழுதப்பட்டிருந் தன. உடனே அந்த கடிதம் பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்பட்டது. மிரட்டலைத் தொடர்ந்து ராமர் கோவில் மற்றும் அயோத்தி நகரின் முக்கிய இடங்களில் பொலிஸ் கண்காணிப்பு தீவிரப்படுத் தப்பட்டு அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய மதிப்பீடல்

(13)

### வஜ்ஜிராசனம்

எதையும் தாங்கும் வலிமையைக் கொடுக்கும் ஆசனம் இது. எனவே இந்தப் பெயர் பெற்றது. உணவு உண்டவுடன் செய்யக் கூடிய ஆசனம் இது.

விரிப்பில் மண்டியிட்டு அமரவும். உங்கள் குதிக்கால்களில் குதம் படும்படி கால் முட்டிகள் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும். கால் கட்டை விரல்களை ஒன்று சேர்த்து குதிக்கால்களை நன்கு விரித்து அதன் இடையில் புட்டத்தை வைக்கவும்.

இரு கைகளையும் கால்முட்டிகளில் வைத்து நேராக நிமிர்ந்து இருக்கவும். கண்கள் மூக்கு நுனியைப் பார்த்தபடி 2 நிமிடம் மெதுவாக மூச்சை இழுத்து மெதுவாக மூச்சை வெளியே விடவும். முதலில் இந்த ஆசனத்தில் 30 வினாடிகள் இருக்கவும். பின்னர் மெதுவாக நேரத்தை உயர்த்தவும். ஒருமுறை செய்யவும். முதலில் பழகும்போது குதிக்காலின் கீழ் தரையை ஒட்டும் பகுதியில் வலி ஏற்பட்டால் விரிப்பை மடித்து வைத்து அதன் மீது அமர்ந்து செய்யவும். தினமும் அரை மணி நேரம் இருந்து தியானம் செய்யலாம். இந்த ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்ய மன ஒருமைப்பாடு கிடைக்கும்.

### பலன்கள்

வஜ்ஜிராசனத்தைத் தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால் அஜீரணக் கோளாறுகள் நீங்கும். வாதநோய், கிட்னி நோய்களை விலக்குவதோடு நமது மனத்தில் நல்ல ஆற்றல்மிக்க சிந்தனைகள் உருவாகும். உடலும் வஜ்ஜிரம் போல மாறும்.

### சவாசனம்

விரிப்பின் மீது கால்களை நீட்டி அமரவும். மெதுவாக முதுகு தரையில் படும்படி படுக்கவும். உடலை இயல்பான நிலையில் வைத்துக் கொள்ளவும். முகம் மேல்நோக்கி வானத்தைப் பார்த்தபடி இருக்க வேண்டும். கைகளைச் சிறிது விரித்து அதாவது உடலை விட்டு விலகி இருக்கும்படி வைக்கவும். கால்களையும் சுமார் 2 அடி அகலம் விரித்து வைக்கவும்.

ஆழ்ந்த மூச்சை 5 அல்லது 6 முறை எடுத்துவிடவும். மூச்சை ஒரே சீராக எடுத்துவிட வேண்டும். (ஆழ்ந்த மூச்சு என்பது வெளிமூச்சை மூக்கின் வழியாக போதுமான அளவு உள்ளே இழுக்க வேண்டும். அப்போது வயிறு பலூன் போல உப்பி உயர வேண்டும். பின் மெதுவாக மூச்சை வெளியேற்ற வேண்டும். அப்போது வயிறு சுருங்கி இயல்பான நிலையை அடைய வேண்டும்.) உடல் உறுப்புக்கள் அனைத்தையும் தளர் வாக வைக்க வேண்டும். கண்கள், வாய் மூடி இருக்க வேண்டும். முதுகுத் தண்டு விரிப்பின் மீது நன்கு படிந்து இருக்க வேண்டும்.

### பலன்கள்

இதை சாந்தி ஆசனம் என்றும் கூறுவர். ஆசனங்களில் இது முக்கியமான ஆசனம் ஆகும். இந்த ஆசனத்தை முறைப்படி செய்து வந்தால் அதிக இரத்த அழுத்தம் சரியான நிலைக்கு வரும். உடல் பூரண ஓய்வு பெற்று உடல் ஆரோக்கியம் பெருகும். புத்துணர்ச்சி ஏற்படும்.

### யோக முத்திரைகள்

யோக முத்திரைகள் கைவிரல்களால் அமைக்கப்படும் ஒரு பயிற்சி முறையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தப் பயிற்சி உடல் ஆரோக்கியத்துக்காகவும் மன ஆரோக்கியத்துக்காகவும் நம் முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் தன்னம்பிக்கையை வளர்க்கும் சில யோகாசன முத்திரைகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைத் தினமும் பயிற்சி செய்து வந்தால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்பது உண்மை.

### சங்கு முத்திரை

இந்துக் கோயில்களில் 'சங்கு முத்திரை' பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்த முத்திரையில் விரல்கள் சங்கின் வடிவம் பெறுவதால் இந்தப் பெயர் பெற்றுள்ளது. இடதுகை கட்டைவிரலை வலது கையின் நான்கு விரல்களால் பற்றிக் கொள்ள வேண்டும். வலது கை கட்டை விரலின் முனையை இடது கை நடுவிரலின் முனையால் தொட வேண்டும். கைகளை நெஞ்சுக்கு முன்னே நீட்டியபடி கண்களை மூடிக் கொண்டு 'ஓம்' என்று உச்சரிக்கவும்.

இந்த முத்திரையை ஒரு நாளில் பதினைந்து நிமிடங்கள் வீதம், மூன்று முறை செய்யலாம். சங்கு முத்திரை தன்னம்பிக்கையை வளர்க் கிறது. எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் ஊக்கத்தைத் தருகிறது.

### பிருதிவி முத்திரை

இரு கைகளாலும் செய்யப்பட வேண்டிய முத்திரையாகும். கட்டை விரலின் முனையை மோதிர விரலின் முனையால் தொட வேண்டும். மற்ற மூன்று விரல்களைத் தளர்வாக நீட்டிக் கொள்ள வேண்டும். பிருதிவி முத்திரை முதல் சக்கரமாகிய மூலாதாரச் சக்கரத்தைத் தூண்டி விடுகிறது. உடலுக்கு அபாரமான ஆற்றலை அளித்து மன உறுதி, தைரியம், தன்னம்பிக்கையைப் பெருகச் செய்கிறது. மனிதரது உலகாதாய மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகிறது.

நோயுற்ற மனிதர்கள் குறைந்த சக்தியோடு காணப்படுகிறார்கள். இந்த முத்திரை அவர்களது சக்தியைப் பெருக்கி நோயைக் குணப்படுத்துகிறது. பிருதிவி என்பது நிலத்தைக் குறிக்கும். இந்த முத்திரையை நாற்காலியில் அமர்ந்தபடி செய்து, சுவாசத்தை ஆழமாக உள்ளிழுத்து வெளியேற்ற, நிலத்தின் சக்தி நம்முடைய உடலில் பாய்வதைக் கண்கூடாக உணர முடியும். நாள்தோறும் பதினைந்து நிமிடங்கள் வீதம் மூன்றுமுறை இந்த முத்திரையைச் செய்யலாம்.

### குபேர முத்திரை

செல்வத்தின் அதிபதியாக கருதப்படுபவர் குபேரன். அவரது பெயரால் இந்த முத்திரை அழைக்கப்படுகின்றது. இந்த முத்திரையை இரண்டு கைகளிலும் செய்ய வேண்டும். மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகிய இரண்டு விரல்களையும் மடக்கி கட்டைவிரலின் அடிப்பாகத்தைத் தொடும்படி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கட்டை விரல், ஆட்காட்டி விரல், நடுவிரல் ஆகியவற்றின் முனைகள் தொட்டுக் கொண்டிருக்கும்படி வைக்க வேண்டும்.

நமது விருப்பத்தை உறுதியாக மனதில் நினைத்தபடி குபேர முத்திரை செய்து வந்தால் அது நிச்சயம் நடக்கும். மாணவர்களுக்குத் தேர்வில் வெற்றி, தொழில் செய்பவர்களுக்குத் தொழிலில் வெற்றி என்று அனைத்துவித வெற்றியையும் தருவது குபேர முத்திரையாகும். குபேர முத்திரையிலிருந்து வெளிப் படும் அதிர்வு அலைகள் வெளியிலிருந்து நமக்குத் தேவையான உதவியைப் பெற்றுத்தரும். மேலும் நமக்குள்ளேயும் வெற்றிக்கான ஆற்றலை உருவாக்கித் தரும். நேர்மறைச் சிந்தனையோடும், உறுதியான நம்பிக்கையோடும் இந்த முத்திரையைச் செய்தால் நிச்சயம் பலனுண்டு. நமது குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு நாம் அடைவதுபோல் காட்சிப் படுத்திக் கொண்டு குபேர முத்திரையையும் பயிற்சி செய்து வந்தால் நம் குறிக் கோளை நாம் நிச்சயம் அடைவோம். இம்முத்திரை தலையின் முன்புறம் தேங்கியுள்ள சளியைக் கரைத்து வெளியேற்றுகிறது. இந்த முத்திரையை எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் செய்யலாம்.

### தியானி முத்திரை

இடது உள்ளங்கையை வலது உள்ளங்கையின் மீது வைத்து கட்டை விரல் முனைகளை இணைத்துப் பிடிக்க வேண்டும். இந்த முத்திரையை மடியின்மீது வைக்கப்பட்ட ஒரு கிண்ணத்தைப் போலச் செய்ய வேண்டும். தியானத்தின் நிலை இதுவாகும். மடியில் கிண்ணம் போல் அமைந்திருக்கும் உள்ளங்கைகள், எப்போதும் பிரபஞ்சப் பேராற்றலை ஏற்றுக் கொள்ளும்படி வெற்றிடமாக இருப்பதை உணர்த்துகிறது. இது ஒரு சமர்ப்பண முத்திரை ஆகும். நான் எப்போதும் 'ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன் என்பதை உணர்த்தும் முத்திரை. இந்த முத்திரையைப் பயிற்சி செய்து வருவதால் உங்கள் மனதின் எண்ணங்கள் தூய்மை அடையும். இறைவனின் பேரருள் உள்ளங்கைகள் வழியாக உள்ளுக்குள் நிறைந்து உங்கள் விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

-ஷிவேந்த்ரா *(முற்றும்)*



# திசை மாறும் இளையோரை நல்வழிப்படுத்த வேண்டும்

## பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

சமயம், பண்பாட்டை மறந்து வேறொரு கலாசார முறைகளுக்கு தம்மை மாற்றம் செய்து திசை மாறிக் கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலைகள் மற்றும் ஆலய சமூகத்தினரிடம் தங்கியுள்ளது.

பாடசாலைகள், ஆலயங்கள் என்பனவே எமது மதம், மொழி சார்ந்த பண்பாடுகளை இலகுவாகக் கற்றுத்தரும் கலைக் கூடங்கள். எனவே அவை, இத்தகைய பணிகளை சமூகத்தினர் செய்வதற்கு முன்வர வேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

வல்வை ஒன்றியத்தின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையின் திறப்பு விழா கடந்த 15 ஆம் திகதி ஆலய நிர்வாகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே ஜெயசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை மாணவர்கள் மதம் தொடர்பான பாரம்பரியங்களை அறிந்து கொள்வதற்கு அறநெறிப் பாடசாலைகள் கைகொடுக்கின்றன. அத்துடன் மத மாற்றங்கள் இடம் பெறாமல் தடுக்கும் பொறுப்பும் அறநெறிப் பாடசாலைகளில் தங்கியிருப்பதால் ஆலய நிர்வாகங்களால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலைகள் மதம், பண்பாடுகளை இளைய சமுதாயத்தினருக்கு எடுத்துக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

இதனைவிட ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அண்மையில் உருவாகும் மதுபானசாலைகள் இயங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொறுப்பு அந்தப் பகுதி சார்ந்த பொதுமக்களிடமே தங்கியுள்ளது.

எனவே மதம் சார்ந்த சிறந்த கருத்துக்களை ஆலயங்கள், பாடசாலைகள் ஆகிய துறை சார்ந்த சமூகத்தினர் இலகுவாகக் கற்றுக் கொடுக்க வேண்டும்-' என்றார்.

(எ-14-253)

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.19

கோண்டாவில் பொது நூலகத்தினால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் பின் வருமாறு.

பாலர் பிரிவில் சித்திரைப் புத்தாண்டு, நான் விரும்பும் பெரியார் ஆகிய தலைப்புகளில் உரையாற்றி முதலாம் இடத்தை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த இ.ஓவியா, இரண்டாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த சு.சுஜிதா, மூன்றாம் இடத்தை கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையைச் சேர்ந்த ச.தர்சன் ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

கீழ்பிரிவில் புத்தாண்டை வரவேற்போம், இந்து சமயப் பெரியார்' ஆகிய தலைப்புகளில் உரையாற்றி முதலாம் இடத்தை கொக்கு வில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த க.கல்பனா, இரண்டாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த சு.சுவேகா, மூன்றாம் இடத்தை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வ.சுவாதி ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மத்திய பிரிவில் புதிய எதிர்பார்ப்பும் புதுவருடமும், இந்துப் பண்டிகைகள் ஆகிய தலைப்புகளில் உரையாற்றி முதலாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.விஷ்ணுயன், இரண்டாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த க.சரண்யா, யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த த.காவேரி ஆகியோரும் மூன்றாம் இடத்தை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.நிஷானா ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேற்பிரிவில் உலக புத்தக தினம் எனும் தலைப்பில் உரையாற்றி முதலாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த க.பிரசன்னா, இரண்டாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த கு.குமணி, மூன்றாம் இடத்தை கோண்டாவில் இராம கிருஸ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.நளாயினி ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர். (எ-14)

# யாழ்ற்ரன் கல்லூரி முன்னிலையில்

யாழ்ப்பாணம், ஏப்.19

தீவக வலயத்தில் கடந்த வருடம் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி முன்னணியில் உள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 62 வீதமான மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் ஆங்கில மொழி மூலமான பரீட்சையில் தர்மலிங்கம் கௌரிதரன் 7ஏபிசி ஆகிய பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

(எ-14)

# சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணக் கல்வி அலுவலகத்தால் 2012 ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக நடத்திய சிறுவர் சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி நடத்திய சிறுவர் சித்திரப்போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:-

தரம் ஒன்றில் முதலாம் இடத்தை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.கிசாந்தன், இரண்டாமிடத்தை சென்.ஜேம்ஸ் வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.சிரோமியா, மூன்றாமிடத்தைக் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த க.கதிர்சன், நான்காம் இடத்தை கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரா.மகிந்தன், ஐந்தாம் இடத்தைப் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வித்தியாலயத்தைச் சேர்ந்த யூ.ஜோதினி ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தரம் இரண்டில் முதலாம் இடத்தை இந்து மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த இ.துஷ்யந்தி, இரண்டாம் இடத்தை சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த கி.துஸானி, மூன்றாமிடத்தை கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தைச் சேர்ந்த சே.வினுயா, நான்காமிடத்தை சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரா.மெரினா ஜெனந்தி, ஐந்தாம் இடத்தை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த சா.சிவானுஜா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

*(தொடரும்)* (எ)




கோண்டாவில் பொதுநூலகம் உலக புத்தக தினம் மற்றும் புதுவருட தினத்தை முன்னிட்டு கடந்த 16 ஆம் திகதி கோண்டாவில் பொதுநூலகத்தில் நடத்திய பேச்சுப்போட்டியை மதிப்பீடு செய்த ஆசிரியர்களும் பங்குபற்றிய மாணவர்களும். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா கிந்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கழிப்பிடங்கள் போதும்

வரலாற்றுப் புகழ் மிக்கதும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு முதல் பலியாக்கப்பட்டதுமான யாழ்ப்பாணம் பொது நூலகம் மீண்டும் சர்ச்சைகளின் மையமாகி உள்ளது.

தெற்காசியாவிலேயே மிகப் பெரியதும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நூல்களைக் கொண்டதுமாக ஒரு காலத்தில் விளங்கியது யாழ். பொது நூலகம். தமிழர்களின் அறிவுச் சொத்தாகவும் திகழ்ந்தது. அதனாலேயே தாக்குதல் இலக்காவும் இருந்தது. திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இன்று வரை தொடரும் வரலாற்றுக் கரும்புள்ளியாக அந்தச் சம்பவம் படிந்துள்ளது.

ஒரு நூலகம் பல பல்கலைக்கழகங்களுக்குச் சமம் என்கிறது முதுமொழி. நூல்கள் மனிதர்களிடம் பரந்த அறிவை வளர்க்கக் கூடியவை. அறிவு வளரும்போது பிரச்சினைகளை ஆராயக்கூடிய பக்குவமும் உணர்வுகளைப் புறம்தள்ளி வைத்து அணுகும் வித்தையும் மனிதர்களுக்குக் கிடைக்கும். முரண்பாடுகளில் விடுபடுவதற்கு அது உதவும். எனவே நூலகங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ளவை.

அதனால்தான் எரிந்து சாம்பராகிப் போன நூலகத்தை புனரமைக்க வேண்டும் என்ற போது தமிழ்ச் சமூகம் அதற்கு ஆதரவு காட்டி நின்றது. நினைவுச் சின்னமாக அது எரிந்தபடியே பேணப்படவேண்டும் என்று எழுந்த குரல்களை அன்று தமிழ்ச் சமூகம் புறந்தள்ளியமைக்கும் அதுவே காரணம்.

அப்படிப்பட்ட நூலகத்தில் நவீன மாநாட்டு மண்டபம் தேவை என்பதனால் அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக ஒரு கோடி ரூபா ஒதுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நூலகத்தில் தற்போது இருக்கும் சிறிய மாநாட்டு மண்பத்துக்கு நவீன கழிப்பிடம் தேவை என்று, அங்கிருந்த இணையப் பயன்பாட்டு அறையையும் காணொலி வசதியையும் அகற்றிவிட வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நடவடிக்கை எடுக்கிறார் என்று செய்திகள் வெளியானதன் பின்னர் இந்த அறிவிப்புக்கள் வந்திருக்கின்றன. விடுத்திருப்பவர் மஹிந்த அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நூலக ஆலோசனைச் சபையைக் கூட்டி, மாநாட்டு மண்டபத்தை நவீனமயப்படுத்திப் மெருகூட்ட அனுமதி பெற்றிருக்கிறார் அவர். ஆளுநர் நேரடியாகச் சொன்ன கழிப்பிடவசதியை, ''மாநாட்டு மண்டபத்தை நவீன மயப்படுத்தி, மெருகூட்டல்'' என்ற வார்த்தை விளையாட்டுக்களுக்குள் புதைத்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு மாநாட்டு மண்டபம் தேவை எனில் அதனைத் தனியே அமைத்துக் கொள்ளலாமே. எதற்கு பொது நூலகத்திற்குள் அதனை வைக்க வேண்டும்? எதிர்காலத்தில் நூல்கள் அதிகரித்து இடவசதி தேவைப்படும் போது என்ன செய்வார்கள்?

நூலகம் என்பது அமைதியாக இருந்து படிப்பதற்கும் ஆய்வதற்குமான இடம். அதில் எதற்கு ஒலிவாங்கி பொருத்தப்படும் மண்டபத்துக்கு அங்கென்ன வேலை? எதற்கு ஒரு கோடி ரூபா செலவிட்டு அதனை நவீனமயப்படுத்த வேண்டும்? பதிலாக அந்தப் பணத்தை கொண்டும் வேறு நிதி உதவிகளைப் பெற்றும் புதிய சிறந்த மாநாட்டு மண்டபத்தை அமைக்கலாமே.

பொது நூலகத்தை கழிப்பிடமாக்கும் கைங்கரியத்தை இந்த ஆளுநரையும் அமைச்சரையும் வைத்துக்கொண்டு இளையோரை நூலகங்களின் பால் ஈர்க்க நூலக வாரங்களையும் மாதங்களையும் ஒரு புறத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அது சரி! மக்கள் அறிவு பெற்றால் சிந்திப்பார்கள். பின்னர் எப்படி அரசியல் செய்வது? அதனால் நூலகங்களைவிட கழிப்பிடங்களே வசதியானவை. சொல்வதைக் கேட்டபடி எதிர்க் கேள்வி இன்றி இருப்பதற்கு அவையே சிறந்த இடம்.

# புலிகள் மீண்டும் புத்துயிர் பெறுவர்

> “
> இலங்கையில் தொடர்ந்தும் சட்ட ஆட்சி புறக்கணிக்கப்பட்டு, மிகப் பெரிய இராணுவ இயந்திரம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் அடக்கப்பட்ட மக்கள் போல் நடத்தப்படுகின்றனர்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் ஆகின்ற நிலையில், இலங்கையில் 25 ஆண்டுகளாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போர் தொடர்பாகக் கற்றறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அசட்டை செய்து வருகின்றார்.

இலங்கையில் தொடர்ந்தும் சட்ட ஆட்சி புறக்கணிக்கப்பட்டு, மிகப் பெரிய இராணுவ இயந்திரம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. போர்க் குற்ற மீறல்கள் விசாரணை செய்யப்படாது நிலுவையில் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் அடக்கப்பட்ட மக்கள் போல் நடத்தப்படுகின்றனர். அவசரகால பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் கூட ராஜபக்ஷ விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுகின்றார்.

இவ்வாறான காரணங்களுக்காகவே, தற்போது நடந்து முடிந்த ஐ.நா மனித உரிமைகள் சபையில் வழமையாக ஆதரவளிக்கும் இந்தியாகூட வழமைக்கு மாறான நகர்வை எடுத்திருந்தது.

கொழும்பில் போர்க்குற்ற மீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கான ஐ.நா. பணியகம் ஒன்று திறக்கப்பட வேண்டும் என சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் கோரப்பட்டது. இவ்வாறானதொரு கோரிக்கையைக் குறைத்து, பதிலாக வேறெதையாவது மேற்கொள்வதற்கான முயற்சியில் இந்தியா இறங்கியிருந்தது.

இருப்பினும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ தனது அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றை ஜெனிவாவுக்கு அனுப்பி, சபையில் முன்வைக்கப்படவிருந்த தீர்மானத்தை உறுப்பு நாடுகள் எதிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்கான முயற்சிகளை மேற்கெண்டார். இதன் ஒரு கட்டமாக ஜெனிவாவில் கூடியிருந்த மனித உரிமை ஆர்வலர்களின் செயற்பாடுகளைக் குறுக்கீடு செய்வதற்கான நடவடிக்கையில் இலங்கைப் பிரதிநிதிகள் குழு ஈடுபட்டது. இது அனைத்துலக சமூகத்தின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்திக் கொண்டது.

இதேபோன்று ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட போது உலக நாடுகளின் அதிருப்தியை இலங்கை அரசு பெற்றுக் கொண்டது. இலங்கையில் புலிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட உள்நாட்டு போரின் இறுதிக் கட்டத்தில் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகச் சவேந்திர சில்வா தலைமையேற்றிருந்தார்.

'வெள்ளைக் கொடி'படுகொலையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களாக இவரின் கீழ் இறுதிக் கட்டப் போரில் ஈடுபட்ட படையினர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கான கட்டளையை இலங்கை ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்பு அமைச்சர் கோத்தாபாய ராஜபக்ஷவிடமிருந்து சவேந்திர சில்வா பெற்றுக் கொண்டார் எனவும் அதன் பின்னரே அவரின் கீழ் செயல்பட்ட இராணுவத்தினர், சரணடைய முன்வந்த புலிகளின் தலைவர்களைக் குறிவைத்து தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இலங்கை அரசால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக இலங்கையின் உள்ளூர்ப் பத்திரிகைகளின் தலையங்கங்களில் ''இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு நாம் ஒருவரையும் அனுமதியோம்'', ''வெளிநாட்டு சதிகளை முறியடிப்பதற்கு எல்லோரும் ஒன்று சேர்வோம்'', ''இந்தியாவுக்கு இலங்கையில் எந்தவொரு பொருளாதார அங்கீகாரமும் வழங்கப்படக் கூடாது'', ''அமெரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் மிக ஆபத்தான ஒன்றாக காணப்படுகின்றது'' எனக் கூறப்பட்டிருந்தன.

இலங்கை அரசுக்குச் சார்பான செய்திகளைப் பிரசுரிக்காத பத்திரிகையாளர்களின் கால்கள் உடைக்கப்படும் என இலங்கை அமைச்சர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது, தமிழ்ப் புலிகள் எவ்வாறு சிறுவர்களைப் படையில் இணைத்தார்கள் என்பது தொடர்பாகவும், மக்களை மனிதக் கேடயங்களாக மக்களை அவர்கள் பயன்படுத்தியமை தொடர்பாகவும் புலம் பெயர் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர் எனவும், ஆனால் ஜெனிவாவில் கலந்து கொண்ட மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் இவ்வாறான புலிகளின் மீறல்கள் தொடர்பாகப் புலம் பெயர் தமிழ் மக்கள் கூறாது அமைதி காத்தனர் என்பதை இலங்கை அரசை ஆதரிக்காத இலங்கையர்கள் பலரும் கண்டு கொண்டனர் என கொழும்பின் சட்ட ஆய்வாளர் ஜெகன் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ராஜபக்ஷவின் நன்றி கெட்ட தனத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். ''விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு அனைத்துலக சமூகத்திடமிருந்து அரசியல் மற்றும் இராணுவ ரீதியான ஆதரவை இலங்கை அரசு பெற்றிருந்தது. இதில் தீர்மானம் நிறைவேற்ற பெரும் பங்காற்றிய அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் உள்ளடக்கம்'' எனவும் பெரேரா தெரிவித்துள்ளார்.

''போர் நிறைவுற்ற பின்னர் இலங்கை அரசானது தனது நாட்டில் நிலவும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவான அரசியல் தீர்வை எட்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே அனைத்துலக சமூகம் தனது இராணுவ மற்றும் அரசியல் ஆதரவை இலங்கைக்கு வழங்கியிருந்தது'' எனப் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட ஆஸ்திரேலிய குடிமகனான பிறேமகுமார் குணரட்னம் என்பவர் புதிய இடதுசாரி அரசியற் கட்சி ஒன்றை நிறுவி அதற்கு ஆதரவை வழங்குவதற்காக இலங்கைக்குச் சென்றிருந்த வேளையில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். இதேபோன்று இந்தக் கட்சியின் பிறிதொரு செயற்பாட்டாளரான திமுது ஆட்டிகெலவும் கடத்தப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கை அரசின் உயர் பீடத்துடன் தொடர்பு கொண்டு இவ்விருவரினதும் ஆள்கடத்தல்கள் தொடர்பில் தலையீடு செய்ததற்கு ஆஸ்திரேலிய அரசுக்கு எல்லோரும் நன்றி கூறவேண்டும். குணரட்னம் உடனடியாகவே இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார். இந்தக் கடத்தல் சம்பவமானது, இலங்கையில் அண்மைய மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட 60 வரையான ஆள்கடத்தல் சம்பவங்களை வெளிக்கொண்டு வருவதற்கு துணைபுரிந்துள்ளது.

அதாவது இவ்வாறான 'வெள்ளை வான்' கடத்தல்கள் தற்போது இலங்கையில் அதிகரித்து வருவதுடன், இது தொடர்பில் இலங்கை அரசு மீது பழிசுமத்தப்படுகின்றது. தன்னைக் கடத்திச் செல்லும்போது தனது இரு கண்களும் இறுகக் கட்டப்பட்டு வெள்ளை வான் ஒன்றில் கடத்தப்பட்டதாகவும், அவர்கள் காவற்துறை மொழியில் பேசிக் கொண்டதாகவும், தமது மேலதிகாரிகளை 'சேர்' என அழைத்ததாகவும் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட ஆட்டிகெல தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மார்ச் 26 அன்று, வர்த்தகரான சகார சேனாரத்ன வெள்ளை வான் கும்பலால் கடத்தப்பட்டு அவரிடம் 50 மில்லியன் ரூபா (370,000 அமெரிக்க டொலர்) கப்பமாக கோரப்பட்டது. ஆனால் இவரது மைத்துனர் ஒருவர் இலங்கை அரச அமைச்சராக பதவி வகிப்பதால் அவர் உடனடியாக இந்தக் கடத்தல் தொடர்பாக இலங்கை ஜனாதிபதியிடமும் பாதுகாப்பு அமைச்சரிடமும் தொடர்பு கொண்டு பேசினார். இதன் பின்னர் அந்த வர்த்தகரைக் கடத்திச் சென்ற வெள்ளை வானின் சாரதி தொலைபேசி அழைப்பொன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் வானிலிருந்தவர்களிடம் 'அவனை விடுவியுங்கள்' எனத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து இவ்வர்த்தகர் விடுவிக்கப்பட்டார்.

எனவே இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கடத்தல் சம்பவங்களுக்கும் அரச தரப்பினருக்கும் தொடர்பிருப்பது வெளிச்சத்தக்கு வருகின்றதல்லவா?

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் ஆன நிலையிலும் இது தொடர்பில் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு கூட இந்த அறிக்கையை மொழி பெயர்க்கவில்லை. இந்த நிலையில் பெரும்பான்மை சிங்களவர்கள் கூட சட்டப் பாதுகாப்பைக் கொண்டிருக்கவில்லை எனில், சிறுபான்மைத் தமிழ் மக்கள் எவ்வாறு சட்டப் பாதுகாப்பைப் பெறுவதற்கான நம்பிக்கையைக் கொண்டிருப்பார்கள்?

இதிலிருந்து தெரிவதெல்லாம் ஒன்றுதான். மீண்டும் தமிழ்ப் புலிகள் அமைப்பு புத்துயிர் பெறும் எனக் கருதுவதற்கான சந்தர்ப்பங்களை பார்க்க முடிகிறது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் போல் சமமாக நடத்தப்படாவிட்டால், இலங்கையில் மீண்டும் கிளர்ச்சி உருவாவதைத் தடுக்க முடியாமல் போகும். *(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாயைக் கட்டிவையுங்கள்

■ தமிழில்: விஎஸ்ரி

சில வாரங்களாக வாயை மூடிக்கொண்டு மௌனம் காத்து வந்த அமைச்சர் மேர்வின் சில்வா, தற்போது மீண்டும் வாய்ச்சவடால் அடிக்கப் புறப்பட்டுள்ளார். வாய் திறந்தது தான் தாமதம், வழக்கம் போன்று ஊடகவியலாளர்களைத் திட்டித் தீர்க்கும் கைங்கரியத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார் மனிதர்.

"ஊடகவியலாளர்களை அடித்து நொறுக்கி அவர்களின் கைகால்களை உடைத்து விடுவேன்" என்ற அவரது ஆக்ரோஷமான வார்த்தைகளை அதே விதத்தில் பிரசுரித்திருந்தன பெரும்பாலான ஊடகங்கள். அவர் தமது இஷ்டப்படி அடித்து நொறுக்கும் வரை ஊடகவியாலளர்கள் வெறுமனே கைகளைக் கட்டிக் கொண்டு வாங்கிக் கட்டிக் கொள்வார்கள் என்று அவர் நம்புகின்றார் போலும். 'விளைவு நல்லதாய் அமையவோ, கெட்டதாய் அமையவோ இந்த வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் தான் காரணம்' என்ற முதுமொழியை அவர் அறிந்திருப்பாரோ, என்னமோ?

அது ஒரு புறமிருக்க, ஊடகவியலாளர்கள் இந்த அளவுக்கு அவருக்கேன் கசப்பாயிகிறார்கள் என்பதைத் தான் எவராலும் புரிந்து கொள்ள இயலாது உள்ளது. அமைச்சர் மேர்வின் சில்வா மட்டுமல்ல, அரசியலில், பொதுத்துறையில் எவர் தவறிழைத்தாலும், அந்தத் தவறை வெளிக்கொணர்வது, வெளிக் கொணரவேண்டியது ஊடகவியலாளர்களது தொழிற்துறைசார் கடமையே. அந்த வகையில் ஓர் அரசியல் வாதியென்ற ரீதியில் அவரால் மேற்கொள்ளப்படும் தவறுகளை ஊடகவியலாளர்கள் வெளிக் கொணர்கின்றனர். அவர் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கத்தக்க செயற்பாடுகளை மேற்கொண்டால் அதுவும் கூட ஊடகவியாலளர்களது பாராட்டுகளைப் பெற்றிருக்கும்.

ஊடக நிறுவனங்களைக் கூட இந்த மனிதர் விட்டு வைப்பதாயில்லை. ஒரு தடவை இலத்திரனியல் ஊடக நிறுவனமொன்றினுள் அத்துமீறிப் பிரவேசித்து, தமது சண்டித்தனத்தைக் காட்டியிருந்தார். அவரது அந்த முரட்டுத்தனமான அடாவடிச் செயற்பாட்டை ஒளிப்பதிவு செய்து கொண்ட அந்தத் தொலைக்கட்சிச் சேவை அதனை ஒளிபரப்பி நாட்டு மக்களுக்குத் தெரியவைத்தமையை எம்மில் பலர் இன்னமும் மறந்திருக்கமாட்டார்கள். அதற்குப் பின்னரும் ஒரு தடவை 'சிரச' தொலைக்காட்சி நிறுவனத்திலும் அவர் அடாவடித்தனம் புரிந்துள்ளார்.

அவரது இத்தகைய நட்டாமுட்டித்தனச் செயற்பாடுகள், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற அவரது பதவியின் பிரதிபிம்பத்தைச் சிதைத்து, அவரது பெயருக்கு இழுக்கை ஏற்படுத்தியமையே அதன் பலாபலனாக அமைந்தது. ஆனாலும் அவரது பேயாட்டங்களுக்கு இலக்கான குறிப்பிட்ட அந்த ஊடக நிறுவனங்கள் இன்றும் கூட தமது ஊடக சேவையைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன.

முன்பொரு காலகட்டத்தில் இந்த மேர்வின் சில்வாவுக்கு 'ரோஸ் மீற் பிளேசிலு'ள்ள பண்டாரநாயகாவின் இல்லம் புகலிடம் வழங்கியிருந்தது. சிறிமாவோ பண்டாரநாயாகாவுக்குத் தேவைப்பட்ட அனைத்து பிரத்தியேக தேவைகளையும் கவனித்தார்.

அது மட்டுமன்றி சிறிமாவோவின் மகனான அனுர பண்டார நாயகாவின் பிரத்தியேக ஆலோசகராகச் செயற்பட்டவரும் இந்த மேர்வின் சில்வாவே. ஆனால் சந்திரிகா - விஜயகுமாரணதுங்க ஆகியோரை மண வாழ்க்கையில் இணைய வைப்பதில் முக்கிய பங்காற்றிய மேர்வின் சில்வா, அதன் காரணமாக அனுர பண்டார நாயகாவிடமிருந்து தூர விலகிச் செல்ல நேர்ந்தது.

முன்னைய வேளையில் அனுர பண்டாரநாயகாவும், மேர்வின் சில்வாவும் சந்தித்துக் கொள்ளாத நாள்களே இல்லை என்ற அளவுக்கு அவ்விருவர் மத்தியிலும் நெருக்கமான நட்பு நிலவியதுண்டு. சந்திரிகா - குமாரணதுங்க திருமணத்தின் பின்னர் அனுரவுடனான நெருக்கத்தைக் குறைத்துக் கொண்டு சந்திரிகா - குமாரணதுங்க தம்பதிகளுடனான நட்பில் இறுக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார் இந்த மேர்வின் சில்வா.

இத்தகைய போக்குடைய, சுயநலத்துக்காக எதையும் செய்யத் தயங்காத இந்த மேர்வின் சில்வாவுக்கு கலாநிதிப் பட்டத்தை எந்தப் பல்கலைக்கழகம் எப்போது வழங்கிக் கௌரவித்தது என்பதை எவரும் அறியார். அவரை நன்கறிந்தவர்கள் அவர் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் மட்டுமே சித்தியடைந்தவர் எனக் கூறுகின்றனர். வெறும் க.பொ.த.சாதாரணப் பரீட்சைச் சித்தியுடன் கலாநிதிப் பட்டம் வழங்கும் பல்கலைக்கழகம் எதுவேனும் இந்நாட்டில் இயங்குகின்றதா?

அமைச்சர் மேர்வின் சில்வாவை இந்த அளவுக்குக் கெடுத்தவர்கள் களனிப் பிரதேசசபை உறுப்பினர்களே என்பது ஒரு தரப்பினரின் குற்றச்சாட்டு. இல்லையில்லை, களனிப் பிரதேச சபை உறுப்பினர்களைக் கெடுத்தவர் இந்த மேர்வின் சில்வாவே என்பது மற்றொரு தரப்பினரின் வாதம், எது எப்படியோ, புனித நகரான களனியைக் கப்பப் பிரதேசமாக்கியவர்கள் எவராயிருப்பினும் சரி, அவர்கள் தெய்வக் குற்றத்துக்கு ஆளாக நேரிடும் என நம்புகின்றனர் உண்மையான பௌத்தர்கள்.

களனிப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் அவரது ஆதரவாளர்களால் மேர்வின் சில்வாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து உரிய ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுமெனச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன திரும்பத் திரும்ப பல தடவைகள் தெரிவித்து வந்துள்ளார்.

ஆயினும் மேர்வின் சில்வா மீதுள்ள அச்சம் காரணமாகவே அத்தகைய ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள மைத்திரிபால சிறிசேன பின்னடித்து வருவதாக ஒரு தரப்பினர் கேலி செய்ய, மறுதரப்பினரோ மேர்வின் சில்வாவுக்கென்ன, பிசாசுக்கும் கூட மைத்திரிபால சிறிசேன பயப்படமாட்டார் என மைத்திரிபால சிறிசேனவுக்காக வக்காலத்து வாங்கி வருகின்றனர்.

ஒரு அரசு, பொது மக்கள் மத்தியில் செல்வாக்கு இழப்பதற்கு இந்த மேர்வின் சில்வா போன்றதொரு அமைச்சர் அமைச்சரவையில் அங்கம் வகித்தாலே போதும் என்பது ஒரு சிலரது கருத்தாகும். ஒரு அமைச்சர் பதவியின் பொறுப்பையும் மேன்மையையும் அறியாத ஒருவருக்கு அமைச்சர் பதவியொன்றை வழங்கினால் அது கடைசியில் உறங்கும் மன்னனுக்கு ஊறு எதுவும் நேராது காவல் காக்க முயன்ற குரங்கின் கதைபோன்று கடைசியில் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நிலையைத் தோற்றுவிக்கக் காரணமாகி விடும்.

இலங்கையின் ஆரம்ப காலத்தில் முதலியார்கள் கிராமங்களின் அதிகாரிகளாக இருந்தனர்.

அத்தகைய முதலியார்களில் ஒருவரது வீட்டில் வளர்ந்த முரட்டு நாயொன்று முதலியார் வீட்டுக்கு வருபவர்களை மட்டுமன்றி வெளியில் தெருவில் போவோர் வருவோரையும் கடித்துக் காயப்படுத்தி வந்தது.

அது குறித்து ஊர் மக்கள் முதலியாருக்கு பல தடவைகள் முறையிட்ட போதிலும் அதனால் பலனேதும் கிட்டவில்லை. பொறுமை இழந்த ஊர்மக்கள் " நாயைக் கட்டி வளர்க்கவும்'' என அட்டையொன்றில் எழுதி முதலியார் வீட்டு வெளிவாசலில் தொங்கவிட்டும் கூட அதனாலும் பலனேதும் கிட்டவில்லை.

சில நாள்கள் கழித்து ஒரு நாள் தன்னைக் கடிக்க முயன்ற அந்த நாயைத் தெருவால் சென்ற ஒருவன் பொல்லால் தாக்கியதில் கால்கள் முறிந்து பரிதாபமாக ஓலமிட்டபடி அந்த நாய் தெருவோரத்தில் வீழ்ந்து கிடந்தது. ✱

# வியூகம் அமைக்கும் முஸ்லிம் காங்கிரஸ்

முஸ்லிம் காங்கரஸின் அஸ்தமனம் நெருங்கிக்கொண்டிருக்கையில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்குக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கின்றார்.

ஒரு காலகட்டத்தில் சிங்கள அரசியல் வாதிகளின் அரசியல் இருப்பையே தீர்மானிக்கும் சக்தியை இந்தக் கட்சி கொண்டிருந்ததை இன்றும் கிழக்கு வாழ் முஸ்லிம்கள் மாத்திரமின்றி ஏனைய இனத்தவர்களும் நினைவிற்கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறு தனித்துவமான அரசியலை முன்னெடுத்த கட்சி இன்று தேய்வடைந்த நிலையில் கிழக்கின் கிராமங்களுக்கு வருகை தருகின்ற நிலைமையைப் பார்த்தால் அந்தக் கட்சி ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதா என எண்ணத் தோன்றுகிறது

இந்தப் பின்னடைவுக்கான காரணங்கள் என்ன என்பது மக்களுக்கு தெரியாமலும் இல்லை. தலைமைப்பீடத்திற்குத் தெரியாமலும் இல்லை.

கடந்த பிரதேச சபைத் தேர்தலின்போது ஊருக்கொரு மேடைபோட்டு பேசப்பட்ட வீர வசனங்களும், அபிவிருத்திக்கான திட்டங்களும், ஆளும் அரசுடன் கைகோர்த்துள்ளன. அத்தனையும் பெற்றுத்தருவோம் எனக் கூறி வாக்குகளை பெற்ற பின்னர் எந்த அபிவிருத்திகளையும் மேற்கொள்ளாது இப்போது மறுபடியும் வந்திருப்பதானது மாகாண சபைத் தேர்தலுக்காக மட்டுமே என மக்கள் விசனப்படாமல் இல்லை.

அண்மைக்காலங்களில் பத்திரிகையில் பல்வேறு அரசியல் விடயங்கள் அலசப்பட்டு வருகின்றன. அதில் குறிப்பாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் முதலமைச்சுப் பொறுப்பைப் பெற்றுக்கொள்வதில் ஆளும் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஸ்ரீ.ல.மு.கா. கட்சியின் தலைவருக்குள்ள உடன்பாடுகளும் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

இவ்வேளையில் கட்சித் தலைவரின் கருத்துகளும் பலவிதமாக வெளியாகிவருகின்றன. "கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும், முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவது தொடர்பாகவும் தீவிரமாக ஆலோசனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே அதனைத் தீர்மானிக்க முடியும்'' என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார் என ஊடகங்கள் கூறுகின்றன.

"வெறுமையான கேள்விகளுக்காகவும், பத்திரிகைகளில் பரபரப்புத் தகவல்களுக்காகவும் மாத்திரம்தான் விழுந்தடித்துக்கொண்டு பதில்கூறவேண்டிய அவசியம் இல்லை என்பதே எனது நிலைப்பாடு'' என்றும் கூறியுள்ள தனித்துவத் தலைவர், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்கு இராக்காலங்களிலும், இரகசியமாகவும் செல்வதற்கான காரணங்கள் தான் என்ன என்பதை புரிந்துகொண்டால் சரி.

அண்மையில் மருதமுனையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் மு.கா. தலைவர் பேசிய விடயங்கள் தமிழ்ப்பேசும் சமூகங்களுக்கிடையில் முறிவை ஏற்படுத்தக்கூடிய அளவு இருந்தது எனப் பலரும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக அமைச்சர் ரவூப் ஹக்கீம், "தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் அதிகூடிய ஆதரவைப் பெற்ற ஸ்ரீ.ல. மு.கா. கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தலைமைத்துவ மட்டத்தில் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை இயன்றவரை தவிர்த்துக்கொள்வது இரு கட்சிகளுக்குமிடையிலான உறவை பேணிக்கொள்வதற்கும் தமிழ்ப்பேசும் இரு சமூகங்களின் எதிர்கால கூட்டு முயற்சிகளுக்கு இன்றியமையாததுமாகும்'' எனத் தெரிவித்துள்ளார்.

"எனக்கெதிராக அறிக்கைகள் விடுபவர்களைப் பற்றி நான் அலட்டிக்கொள்வதே இல்லை'' என்று கூறும் தலைவர், "சிறுபான்மையினராகிய நாம் பல சவால்களை எதிர்கொள்கின்றோம். அவற்றுக்கான தீர்வுகளைக் காணும் முயற்சியில் எமக்கிடையே அணுகுமுறைகளில் வித்தியாசம் காணப்பட்டாலும், இலக்குகளில் பாரிய வித்தியாசம் இல்லை'' என்றும் கூறியுள்ளார்.

அப்படியானால் நாட்டில் சிறுபான்மையினராகக் காணப்படும் தமிழ், முஸ்லிம்கள் இந்நாட்டின் மற்றொரு தேசிய இனமாகும். பேச்சில் ஒரேயினமாகக் காணப்படுவதால் பேரினவாதிகளிடமிருந்து வருகின்ற சவால்களைச் சமாளிக்க ஒற்றுமையுணர்வுகள் ஓங்குவதற்கு இவ்வாறான மேடைப்பேச்சுகள் தடையாக அமையும் என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் களமிறங்கினால் அது தமிழ்ப்பேசும் இனத்திற்குள் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் கூறப்படுகிறது. ஏனெனில், கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் தெரிவு கிடைக்கவேண்டிய தருணம் இருந்தபோதிலும், இறுதிக் கட்டத்தில் கைமாற்றப்பட்டது என அப்போது பலராலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் தேர்தலிலும் அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்றால் - ஜனாதிபதி தலையிட்டு மீண்டும் சகோதர இனத்தின் சகோதரர் ஒருவருக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால் அந்த நிலைப்பாட்டின் காரணமாக இனத்திற்குள் வேற்றுமை தோன்றி இனங்களுக்கிடையில் சச்சரவுகளையும் ஏற்படுத்தலாம். இதனைக் கவனத்திற்கொண்டுதான் களமிறங்கவேண்டிய நிலைக்குள் மு.கா. தலைமைப்பீடம், "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி'' என்கிற நிலையில் உள்ளது எனக் கூறப்படுகின்றது.

தலைமைப்பீடத்தின் முன்னே அண்மைக் காலங்களில் பல்வேறு முறைப்பாடுகளும், பிரச்சினைகளும் எழுந்துள்ளன எனக் கூறப்படுகின்றது. அவற்றில் முக்கியமானது ஒலுவில் அஸ்ரப் நகரத்து மக்களின் பிரச்சினையாகும். சுமார் ஒருவருடத்துக்கும் மேலாக அந்த மக்களின் காணிகள் இராணுவத்தினர் வசமுள்ளது. அந்த மக்கள் அகதிகளாயுள்ளனர்.

பல தடவைகள் இந்தப் பிரச்சினை தொடர்பாக மு.காவுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதில் மக்கள் மனம் நொந்துபோயுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் முஸ்லிம்களின் காணிகள் பேரினவாதிகளால் அடாவடித்தனமாக பிடிக்கப்பட்டுள்ளதைப் பெற்றுத்தரமுடியுமாக இருந்தால் அதனை நேரடியாகப் பேசிப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலே போதுமானதாக இருக்கும். அது நடைபெறாது என்பது வெள்ளிடைமலை.

மு.கா. ஊடாக எந்தவிதமான அபிவிருத்திகளோ, பதவிகளோ, தீர்வுகளோ அற்ற நிலையில் மக்கள் சோபையிழந்து நம்பிக்கையற்றுப் போயுள்ள நிலையில் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால் மக்கள் அபிவிருத்திக்குத்தான் வாக்கு என்பதில் குறியாய் இருப்பார்கள். அதேவேளை இன்னொரு விடயமும் இதில் புதைந்துள்ளது.

அதாவது மு.கா. கட்சித் தலைவர் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுகிறார் என்றால், அது கிழக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்ட கட்சிகளுக்கு வைக்கப்படும் ஆப்புத்தான் எனக் கருதப்படுவதாகவும் கூறப்படுகின்றது. உதிரிக் கட்சிகளாக தற்போது ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற சிலரை மட்டம் தட்டுவதற்காகவும் இந்தக் கோரிக்கை உயர்பீடத்தில் முன்வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

ஆளும் கட்சியிலிருந்துகொண்டு கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெவ்வையும், அவரது தலைமைப்பீடமும் இணைந்து பாரியளவிலான அபிவிருத்திகளைச் செய்து வருகின்றன. இது அரசியல் மட்டத்தில் அடுத்த தேர்தலின் போது குதிக்கவிருக்கும் மாற்றுக் கட்சிகாரர்கள் பலரையும் கிலி கொள்ளசெய்யவே செய்துள்ளது.

இவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு விழாது என்பது திண்ணம். அமைச்சர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணசபையில் களமிறக்கப்பட்டால் முஸ்லிம்களின் வாக்குகள் பலகூறாகப் பிரிக்கப்பட்டு இறுதியில் தமிழ் சகோதரர் ஒருவரே மீண்டும் கிழக்கின் முதலமைச்சராக வரக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படலாம்.

வெறுமனே அபிவிருத்திகளைச் செய்வோம் என்று மார்தட்டிக்கொண்டு தேர்தல் காலத்தில் மாத்திரம் வருகின்ற தலைவர்களையும், அவர்களது அடியாள்களையும் கண்டறிந்து, நாட்டின் மாற்றத்திற்கேற்ப அபிவிருத்திகளைச் செய்கின்றவர்களையும், செய்ய முயற்சிக்கின்றவர்களையும் சமூகம் இனங்கண்டு அவர்களுக்கே தமது வாக்குகளை அளிக்க முற்படுவார்கள் என்பதுதான் இன்றைய யதார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரை நம்பி நான் பிறந்தேன்

அசைவம் சாப்பிடும் பலர் சைவம் சாப்பிடுபவர் தன்னைக் குறைவாக எண்ணிவிடக் கூடாதே என்று அசைவத்தில் தனக்கு ஏதோ விருப்பமே இல்லாதபடி நடிப்பார்கள். சிலர் காலையில் குளிக்காவிட்டாலும் குளித்துவிட்டவர் போல் காட்டிக்கொள்ள பட்டையாகத் திருநீறு பூசிக்கொண்டு பசப்புவார்கள். இந்தப் போலி நாடகங்கள் எதற்கு? பிறர் மதிப்பில் நாம் உயர்வாகத் தெரிய வேண்டும் என்கிற முயற்சிகள் முடிவில் அவமானத்தில் ஆழ்த்திவிடும்.

வெயில் காலத்தின் வியர்வைப் பெருக்கிலும் சிலர் கோட்டுக்குள் புழுங்கிச் சாகிறார்கள் ஏன்? பிறர் தம் பதவியையும் அந்தஸ்தையும் அறியவேண்டும் என்பதற்காக. மகாத்மா காந்தி பிரிட்டிஷ் மகாராணியைப் பார்க்கப் போனார்... தமது வழக்கமான எளிய உடையுடனேயே பார்க்கச் சென்றார். ஆனால் அரசியரைப் பார்க்க வருபவர்கள் ஆடம்பரமாக உடை அணிய வேண்டும் என்றார்கள்... ''ஏன் எனக்கும் சேர்த்துத்தான் உங்கள் ராணியார் உடை உடுத்துக் கொண்டிருக்கிறார்களே...'' என்று கேலி பேசினார். விதியைத் தளர்த்திக் கொண்டு மகாராணி சந்தித்தார்.

பிறர் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்கின்ற கவலையோ குழப்பமோ இன்றி சரியான செயலைச் சரியாகச் செய்ய துணிவும் தெளிவும் தேவை. ஓர் அழகான முல்லாவின் கதை... ஞானிக்குள்ள துணிவும் தெளிவும் சொல்லும் கதை இது.

டர்கிஷ் குளியல் அரங்குக்கு ஒருமுறை போனார் முல்லா. கிழிந்த உடை...நீளத் தாடி... ஏழ்மைத் தோற்றம்... ஒருத்தரும் அவரை மதிக்கவில்லை. துடைப்பதற்குக் கூட பழைய துண்டு கொடுக்கப்பட்டது... இந்த ஏழை மனிதன் என்ன பெரிய பணம் தந்துவிடப் போகிறான் என்று எல்லா நிலைகளிலும் அவருக்கு அவமதிப்பே தரப்பட்டது. கொஞ்சமும் கவலையின்றி குளித்து உடை உடுத்துக் கொண்டு வெளியில் புறப்பட்ட முல்லா சில தங்க நாணயங்களை ஊழியர்கள் வாழ்க்கை முழுதும் பார்த்திருக்காத அளவில் டிப்ஸாக வீசிவிட்டு வெளியேறினார். ஊழியர்களுக்கு நெஞ்சே நின்று விட்டது... 'கவனிக்காத போதே இவ்வளவு தங்க நாணயங்களா? அடடா கவனித்திருந்தால் எவ்வளவு கிடைத்திருக்கும்' என்று எல்லோரும் பொருமித் தீர்த்தார்கள்.

சில நாள்கள் கழித்து முல்லா மறுபடியும் அங்கு வந்தபோது அளவுக்கு அதிகமான உபசரிப்பு தடல்புடலான கவனிப்பு... நிதானமாகக் குளித்து அலங்கரித்துக் கொண்ட முல்லா மிகக் குறைந்த பித்தளைக் காசுகளைக் கொடுத்தார். ''இவ்வளவு குறைவாகவா?'' என்று ஊழியர்கள் வருத்தப்பட்டதும்...''இந்தப் பணம் அன்று நீங்கள் கவனித்த லட்சணத்திற்கு.. அன்று கொடுத்தது... இன்று நீங்கள் செய்த உபசரிப்புக்கு...'' என்றபடியே மிடுக்காக நடையைக் கட்டினார். பிறர் மதிப்பில் தான் பெரிதாகத் தெரிய வேண்டும் என்கிற கவலை எவனுக்கு இல்லையோ அவனே ஞானி!

பிறர் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்பட வேண்டியதுதான். ஆனால் அதற்காக நம்மை ஏன் துன்புறுத்திக் கொள்ள வேண்டும். உலகத் தலைவர்கள் பலர் கலந்துகொண்ட விருந்தில் பங்கேற்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் இந்திய வழக்கப்படி நிதானமாகத் தமது கையால் உணவை எடுத்து உண்டார். அருகில் இருந்த மற்றொரு தலைவர் பதறிப் போய், ''இந்தக் கரண்டிகள் நன்கு சுத்தம் செய்யப்பட்டவை. அதனால் சாப்பிடுங்கள்'' என்றார். இராதாகிருஷ்ணனோ சிரித்தபடி ''இந்தக் கைகள் அதைவிட சுத்தமானவை. காரணம் இதன் மூலம் என்னைத் தவிர வேறு யாரும் சாப்பிட்டதே இல்லை'' என்று சொல்லிவிட்டு தம் கைகளாலேயே சாப்பிட்டார்.

இன்று நம்மவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று சொல்லட்டுமா?

ஒரு அலுவலகத்தில் மூன்று பேர் மதிய நேரத்தில் ஒன்றாக உட்கார்ந்து மதிய உணவு சாப்பிடுவார்கள். ஒருவரின் சாப்பாட்டுப் பெட்டியில் காய்ந்த இட்லி, அடுத்தவரது பெட்டியில் பிட்டு, மற்றவருக்கோ காய்ந்த ரொட்டி. தினமும் அதே சாப்பாட்டை மூவரும் ''தினமும் இதையே செய்கிறாளே'' என்று மனைவியை நொந்துகொண்டே சாப்பிடுவார்கள். ஒருநாள் வைராக்கியமாக ''நாளை மட்டும் இதே சாப்பாட்டை என் மனைவி கொடுத்தால் இந்த அலுவலகத்தின் பத்தாவது மாடியில் இருந்து விழுந்து இறந்துவிட வேண்டியதுதான்'' என்று ஒப்பந்தமும் செய்துகொண்டு வீட்டுக்குப் போனார்கள். ஆனால் மறுநாளும் அதே சாப்பாடு. சொன்னபடி மூவரும் மாடியில் இருந்து விழுந்து இறந்து விட்டார்கள்.

இட்லி கொடுத்த மனைவி அழுதபடியே ''இவ்வளவு நிஜமாகச் சொல்கிறார் என்று நான் நம்பவே இல்லை'' என்றாள். பிட்டுக் கொடுத்த மனைவி ''கண்டிப்பாக இப்படிச் செய்து கொள்வேன் என்று கூறியிருந்தால் நான் மாற்றி வேறு ஏதாவது சாப்பாடு செய்திருப்பேன்...ஏமாந்துவிட்டேனே'' என்று அழுதாள். ரொட்டி கொடுத்த மனைவியோ ''எனக்குப் புரியவேயில்லை... நாள் தோறும் சாப்பாடு தயாரித்து எனக்கும் கட்டித் தருபவரே அவர்தான்... அவரே மாற்றிச் செய்திருக்கலாமே...அதைவிட்டு அவரும் இப்படி ஏன் செய்து கொண்டார்? என்பதுதான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது'' என்றாள்.



பிறர் தம்மை என்ன நினைப்பார்களோ என்ற கவலை ஒருவரை எந்தளவுக்கு கொண்டுவந்து விட்டு விடுகிறது.

சுகி.சிவம்



# அற்புதத்தால் பக்தனை அசர வைத்த மண்கும்பான் வீரகத்தி விநாயகர்



லக்ஸ்மன்

சித்திரைப் புத்தாண்டு தினத்தில் தேரேறி மண்கும்பான் மக்களுக்கு மட்டுமன்றி தீவுப் பகுதி மக்களுக்கும் அருள்பாலித்து அந்தப் பிராந்தியத்தின் மக்களைக் காத்துவரும் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அனைத்து மக்களின் பெரும் தெய்வமாக வணங்கப்பட்டு வருபவர்.

உற்சவ காலங்களில் மட்டுமன்றி தினமும் இந்தப் பாதையைப் பயன்படுத்துபவர்கள் விநாயகரைத் தரிசிக்க மறப்பதில்லை. ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள் கூட வெள்ளைப்புற்றடி, ஸ்ரீ வீரகத்தி விநாயகரை வணங்கி அருள் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

''தீவகத்தில் இருந்து மாற்று மதத்தைச் சேர்ந்த ஒருவர் மாடுகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். அவர் அப்படிச் செல்லும் போது ஆலயம் அமைந்துள்ள வீதியில் வாகனத்தை நிறுத்தி விநாயகரை வழிபடாமல் சென்று விட்டார். அன்றிரவு அவரது மாடுகள் காணாமல் போய் விட்டன. பல இடங்களில் தேடியும் அவரால் மாடுகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது தான் ஆலயத்தில் நிற்காமல் வந்ததே மாடுகள் தொலைந்து போனதுக்குக் காரணம் என்று எண்ணினார். பின்னர் விநாயகருக்கு நேர்த்தி வைத்து ஆலயத்துக்கு வந்து அதனை நிறைவேற்றி வீடு திரும்பினார். அப்போது மாடுகள் வீட்டில் நிற்கக் கண்டு விநாயகரின் அற்புதத்தைத் தெரிந்து கொண்டார்'' என மண்கும்பானைச் சேர்ந்த மூத்தவர்கள் சொல்வதுண்டு.

பண்டைக் காலத்தில் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக ஊர்காவற்றுறை துறைமுகமும் இருந்துள்ளது. இந்தத் துறைமுகத்தினூடாக வைத்திலிங்கச் செட்டியார் என்பவர் யாழ்ப்பாணக் கோயில்களுக்காக விக்கிரகங்களை எடுத்து வரும் வழியில் களைப்பு மிகுதியால் ஓய்வு எடுப்பதற்காக மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் வைத்து விட்டு இளைப்பாறியுள்ளார். பின்னர் களைப்பு நீங்கி எழுந்து விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு செல்வதற்காக அதைத் தூக்கிய போது பிள்ளையாரைத் தூக்க முடியாமல் போனது. அதனால் விக்கிரகத்தை அங்கேயே வைத்து விட்டு காவோலையால் நிழல் அமைத்து ஊரில் உள்ளவர்களிடம் அவரைப் பராமரிக்குமாறு கூறிச் சென்றதாகவும் வீரகத்தி விநாயகர் அங்கு குடி கொண்டமை பற்றிச் செவிவழிக்கதைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

> 1990 ஆம் ஆண்டு வரை ஆலயத்தின் பொற்காலம் எனக் கூறப்படுகின்றது. உள்வீதி மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா இடம்பெறத் தொடங்கியது இந்த காலப்பகுதியிலே ஆகும்.

அதைத் தொடர்ந்து ஊர்மக்கள் இணைந்து சிறுகுடிசை ஒன்றை அமைத்து ஆலயமாக்கி வழிபட்டு வந்ததாகவும் சொல்லப்பட்டது. இந்த ஆலயத்தின் தொன்மை குறித்த கோயில் பதிவேடுகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்துள்ளது. 1769-1832 ஆம் ஆண்டுப் பதிவேடுகளில் இந்தக் கோயில் பதியப்பட்டுள்ளமை இதன் தொன்மை மிக்க வரலாற்றைத் தெரியப்படுத்துகின்றது. ஆலயம் அமைந்துள்ள காணி உறுதி விநாயகர் பெயரிலேயே தோம்பில் இருப்பது அதன் சான்றாகும்.

ஆலயம் அமைந்துள்ள சூழல் வெண்மணல் கும்பிகளாக இருந்துள்ளது. அந்த மணற் கும்பிகளில் எலிகள், உடும்புகளால் நிறைய புற்றுக்கள் காணப்பட்டன. வெண்மணலில் இந்தப் புற்றுக்கள் எழுப்பப்பட்டிருந்தன. அங்கே அமைந்திருந்த இந்த ஆலயத்தை வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் என ஊர்மக்கள் பெயரிட்டு வழிபட்டிருக்கலாம் எனவும் சிலர் கூறுவது ஏற்புடையதாக இருக்கலாம்.

இந்த ஆலயத்தின் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுபவர் சுப்பிரமணியம் விநாசித்தம்பி என்று தான் கூற வேண்டும். ஓலைக் குடிலாக இருந்த கோயிலைக் கற்களால் அமைத்து, கிணறு வெட்டி, உள்வீதியைச் சுற்றி சுண்ணாம்புக் கற்களாலான மதிலைக் கட்டி அதன் இன்றைய நிலைக்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் இவரே. அதைத் தொடர்ந்து அர்த்த மண்டபத்தை வெள்ளை வைரக் கற்களால் அமைத்து மூலஸ்தானத்தைக் கட்டியும் இதன் சிறப்புக்குக் காரணராக விளங்கினார். 1951 ஆம் ஆண்டில் அனைவராலும் பேசப்படும் வகையில் மகா கும்பாபிஷேக நிகழ்வு உன்னதமாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வந்தனை வழிபடுவோர் சபை அமைக்கப்பட்டு 1982 இல் ஆலய நிர்வாகம் பொறுப்பேற்கப்பட்டது. குறிப்பிடத்தக்க வளர்ச்சி அதன் பின்னர் இடம் பெற்றது. 1990 ஆம் ஆண்டு வரை ஆலயத்தின் பொற்காலம் எனக் கூறப்படுகின்றது. உள்வீதி மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா இடம்பெறத் தொடங்கியது இந்தக் காலப்பகுதியிலேயே ஆகும்.

1991 இல் ஏற்பட்ட இடம் பெயர்வுகாரணமாக ஆலயம் சேதமுற்றது, எனினும் 2000 ஆம் ஆண்டில் மீளக் குடியமர்ந்த பின் ஆலயத்திருப்பணியில் மக்கள் அக்கறை கொண்டு செயற்பட்டனர். ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவலோகநாதன் தலைமையிலான நிர்வாகிகள் குழு வசந்த மண்டபம் தேர் முட்டி போன்றவை அமைப்பதற்கு எடுத்த முயற்சியின் பயனாக தேர்முட்டியை மைதிலி நகை மாடத்தின் உரிமையாளர் ஐயம்பிள்ளை நடராசா குடும்பத்தினர் கட்டி வழங்கினார்கள். இவர்கள் புதிய சித்திரத் தேர் ஒன்றையும் கட்ட முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்-தீவுப்பகுதிக்கான பிரதான வீதியில் அமைந்துள்ள ஆலயம் என்பதால் ஒரு முக்கியத்துவம் மிக்க வழிபாட்டுத் தலமாக இது விளங்குகின்றது. இந்த வீதியால் பயணிக்கும் தமிழ் மக்கள் மட்டுமன்றித் தென்பகுதியைச் சேர்ந்த மக்களும் ஆலயத்தைத் தரிசித்துச் செல்வதைக் காணமுடிகின்றது. எஸ்.வர்ணகுலசிங்கம் தலைமையில் பரிபாலனசபை ஆலய திருப்பணியைச் சிறப்பாக செய்யவும் விசேட தினங்களில் பூசை வழிபாடுகளைச் சிறப்பாக மேற்கொள்ளவும் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. உற்சவ காலங்களில் விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறத் திரளும் அடியார்களின் நலன்கருதி அன்னதானம் வழங்கப்படுகின்றது. இதற்கான மண்டபத்தை நதியா நகைமாடத்தினர் கட்டி வழங்கினார்கள். இந்தப் பகுதியில் உள்ள வர்த்தகப் பிரமுகர்கள் இதற்கு உதவுகின்றனர். புலம் பெயர்ந்து வாழும் மண்கும்பான் மக்களும் ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளதுடன் உற்சவ காலங்களில் வருகை தந்து விநாயகரைத் தொழுது மன நிறைவு பெறுகின்றனர். போரால் இழந்துபோன பெருமைகளை மண்கும்பான் மீண்டும் பெற்றுக் கொள்ள அருள்மிகு வீரகத்தி விநாயகரின் திருவருள் நிச்சயம் என்ற துணிவுடன் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் மக்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருப்பதுதான் நிஜம். *

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## இனந்தெரியாத குழுவால் பஸ் தீக்கிரை

கண்டி,ஏப்.19

கண்டி, மதுரட்டவில் தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி. ரட்நாயக்கவின் மைத்துனருக்கு சொந்தமான பஸ் ஒன்று குழுவொன்றினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

40 லட்சம் ரூபா பெறுமதியான இந்த பஸ் தீக்கிரையாக்கப்பட்டமை குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. தனிப்பட்ட பகைமையே இந்தச் சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் வடமத்திய மாகாண சபை தவிசாளரும் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவின் சகோதரருமான சாலிய திஸாநாயக்கவுக்கு சொந்தமான இரு பஸ்கள் இனந்தெரியாத குழுவொன்றினால் தீக்கிரையாக்கப்பட்டன. (ச)

# விசாரணைகளை நடத்துக; அல்லது விடுதலை செய்க

## மட்டு. தமிழ் அரசியல் கைதிகள் அரசிடம் வேண்டுகோள்

எருவில், ஏப்.19

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் எவ்வித விசாரணைகளுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசு விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என்று மட்டக்களப்பு தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு பிறந்துள்ள நிலையில் தமது நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாம் நீண்டகாலமாக எவ்வித விசாரணைகளுமின்றி 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

எம்மை ஒன்றில் அரசு விசாரணை செய்யவேண்டும். அல்லது விடுதலை செய்யவேண்டும். இதுவே எமது விருப்பமாகும்.

நாம் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் எமக்கு எதிராகக் குற்றப்பத்திரிகைகளை அரசு தாக்கல் செய்ய வேண்டும். அல்லது எம்மை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

இறுதிப் போரில் கைது செய்யப்பட்ட 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிப் போராளிகளில் அதிகமானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர் என அரசு சர்வதேசத்துக்கு கூறி வருகின்றது. ஆனால், தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். இது அரசின் கண்களுக்குத் தெரியவில்லையா?

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எம்மைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல தடவைகள் வந்து பார்வையிட்டுள்ளனர். அத்துடன், எமது விசாரணை மற்றும் விடுதலை தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் அரசிடம் வேண்டுகோள் பலவற்றை விடுத்தும் உள்ளனர். ஆனால், அரசு எந்தவித நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. இது எமக்குப் பெரும் கவலையைத் தருகின்றது - என்றனர். (ச-31)

## கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டன

நுவரெலியா, ஏப்.19

மேல் கொத்மலை நீர்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை திறக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக இந்த வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று நுவரெலிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் ஹெரந்தன ஹேமவர்தன தெரிவித்தார்.

இதனால் நீர் தேக்கத்தின் கீழ் பகுதியில் குடியிருக்கும் பொதுமக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## டிராக்டர் தடம்புரண்டு சாரதி சாவு

எருவில், ஏப்.19

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேசத்தில் ஆற்றுப்பகுதியில் டிராக்டர் தடம்புரண்டு அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்றுள்ளது. பழுகாமம், காந்திநகரை சேர்ந்த சிவநேசராசா கோகுலராஜா (வயது-27) என்ற குடும்பஸ்த்தரே உயிரிழந்துள்ளார்.

கற்சேனை பகுதியில் உள்ள ஆறு ஒன்றில் டிராக்டர் தடம்புரண்டபோதே நீரில் மூழ்கி குறித்த நபர் மரணித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரி சோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



ஓட்டமாவடி, மாஞ்சோலைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட தாய் - சேய் நலன் காப்பகத்தைக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் நடாவெட்டித் திறந்து வைத்தார்.

## கஞ்சாப் பொதியுடன் பெண் அக்கரைப்பற்றில் சிக்கினார்

மட்டக்களப்பு, ஏப்.19

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கஞ்சா பொதி வைத்திருந்த பெண் ஒருவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் அம்பாறை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அக்கரைப்பற்று, 4 ஆம் பிரிவு பழைய சினிமா வீதியில் உள்ள வீடு ஒன்றைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் சுற்றிவளைத்து சோதனையிட்ட போதே கஞ்சாவுடன் பெண் கைது செய்யப்பட்டார். அக்கரைப்பற்று பொலிஸாரிடம் அவரை ஒப்படைத் தனர்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-25-31)

## சுத்தமற்ற நீரைப் பருகிய இருவர் சாவு

நேற்றுமுன்தினம் தலவாக்கலை, லிந்துலையில் அசுத்தமான நீரைப் பருகியதால் உடல் நிலை பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட 40 பேரில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குடி தண்ணீர் மூலமே இந்த நோய் பரவியுள்ளதாக லிந்துலை கொட்டகல வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணரட்ன தெரிவித்தார்.

கொதித்தாறிய நீரைப் பருகுதல், கைகளை சுத்தமாக கழுவுதல் உள்ளிட்ட சுகா தாரப் பழக்க வழக்கங்களின் மூலம் நோய் பரவுவதனை தடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தடைசெய்யப்பட்ட சிகரெட் விற்ற இருவர் கைது

மட்டக்களப்பு, ஏப்.19

அக்கரைப்பற்று பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட கோல்சர் சிகரெட்டுகளை கடைகளில் விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் இருவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அம்பாறை போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். சிகரெட்டுக்களும் பறிமுதல் செய்யப்பட்டன என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று, 5 ஆம் பிரிவு பிரதேசத்தில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களைப் போதைப்பொருள்தடுப்புப் பிரிவினர் சுற்றி வளைத்துச் சோதனையிட்டனர்.

இந்தச் சோதனையின் போதே தடைசெய்யப்பட்ட 10 கோல்சர் சிகரெட்டுகளை கடைகளில் வைத்து விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளையும் அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் (ச-25-31)

## வேறொருவரின் பெயரில் வாழ்ந்த நபர் கைது

கண்டி, ஏப்.19

40 வருடங்களாக வேறொருவரின் பெயரில் தொழில் செய்து வந்த ஒருவரை கேகாலைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

மாவனெல்லை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சீ.ஆர்.பெலிகம்மனவிடம் தொழில்வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக வந்த சமரதிவாகர ஜயக்கொடி என்பவரின் பிறப்புச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் காணாமல் போயிருந்தன.

இந்தச் சான்றிதழ்களைக் கண்டெடுத்த மேற்படி நபர், சான்றிதழ்களுக்கு சொந்தமான சமரதிவாகர ஜயக்கொடி என்பவரின் பெயரில் போலி அடையாள அட்டை தயாரித்து அப்பெயரில் கண்டி, தெல்தெனிய போக்குவரத்து டிப்போவில் தொழில் வாய்ப்பையும் பெற்று இது வரை காலமும் வாழ்ந்து வந்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் இச்சான்றிதழ்களுக்குச் சொந்தமான கலகெடிஹேன பிரதேசத்தைச் சேர்ந்த சமரதிவாகர ஜயக்கொடி என்ற நபர், வங்கிக் கணக்கொன்றை புதிதாக ஆரம்பிப்பதற்காக வங்கிக்கு சென்றுள்ளார். இதன்போது, தனது பெயரில் கேகாலை வங்கியில் கணக்கொன்று இருப்பதாக தெரியவந்தது.

இது தொடர்பில் அவர் கேகாலை பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மேற்படி சந்தேநபர் கைதுசெய்யப்பட்டார்.

40 வருடங்களுக்கு முன்னர் இந்தச் சான்றிதழ்கள் தனக்கு கிடைத்தன என்றும் இந்தச்சான்றிதழ்களைப் பயன்படுத்தி அப்பெயரில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தான் வாழ்ந்து வந்தார் என்றும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

## தீயில் எரிந்து 10 வீடுகள் நாசம்

லிந்துலை,ஏப்.19

லிந்துலை - வோல்ட்ரீம் தோட்டத்தில் உள்ள தோட்டக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன.

இந்தத் தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக நேற்று புதன்கிழமை காலை ஏற்பட்டது.

தீ விபத்தில் 10 வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செல்வகுமார் தெரிவித்தார்.

இந்தத் தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மாற்று இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## அஷ்ரப் நகர் மக்கள் பிரச்சினை நீதி அமைச்சரின் கவனத்துக்கு

அம்பாறை, ஏப்.19

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அஷ்ரப் நகர் பகுதியில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அஷ்ரப் நகர் குடியிருப்பாளர் அமைப்பின் தலைவர் இப்ஹாலெவ்வை அலியன் தலைமையிலான குழுவினர் அமைச்சர் ஹக்கீமுடனான சந்திப்பில் கலந்து கொண்டு ஜனாதிபதி மட்டத்துக்குத் தமது பிரச்சினைளைக் கொண்டு சென்று தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

நில ஆக்கிரமிப்பு, இராணுவ கெடுபிடிகளால் 69 முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

யானை வேலி என்ற பெயரில் நடத் தப்பட்டு வரும் நில ஆக் கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், இராணுவக் கெடுபிடிகளைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் என்று அவர்கள் அமைச்சர் ஹக்கீமிடம் வலியுறுத்தி யுள்ளனர்.

அஷ்ரப் நகர் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அமைச்சர் ஹக்கீம், அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்வதாகவும், விரைவில் அங்கு வந்து நிலைமைகளை நேரில் கண்டறிவதாகவும் உறுதியளித்தார். (ச-30)

## காயத்திரி பீடத் தலைவர் திருமலை வருகை

திருகோணமலை,ஏப்.19

தென்ஆபிரிக்கா நாட்டின் காயத்திரி பீட தலைவர் சுவாமி சங்காரானந்தா நேற்று புதன்கிழமை திருகோணமலை, கன்னியாவில் அமைந்துள்ள காயத்திரிபீட ஆத்ம யோகஞான சபாவுக்கு வருகை தந்தார். திருகோணமலை மாவட்டத்திலுள்ள காயத்திரி பக்தர்கள் சுவாமியை தரிசித்து அருளாசிகளைப் பெற்றுக் கொண்டனர் என்று திருகோணமலையிலுள்ள காயத்திரி பீடம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** பல பணிச்சுமைகளுக்கு இடையில் மகிழ்ச்சியும், ஓய்வும் கிடைக்கப் பெறுவீர்கள். நிதி நிலையில், தாங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சிற்சில மாற்றங்கள் தொந்தரவுகளைக் குறைக்கும். குடும்பத்தில் கோபதாபங்களைத் தவிர்த்து, முடிந்த அளவுக்கு அமைதியான பேச்சை மேற்கொள்வதால், சந்தோஷங்கள் கூடுதலாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகம் அதிகரித்த நாள். எதிர்பார்த்த தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் ஏமாற்றம் தந்தபோதும், கையிருப்பைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடனுக்காக கொடுக்கப்படும் தவணைகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சில உருப்படியான காரியங்களுக்கு வழிவகைகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**மிதுனம்:** பல பணிகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்த முயற்சிப்பீர்கள். பண நிலையில், கையிருப்புக்குத் தகுந்த திட்டங்களும் செலவுகளும் நல்லது. கடன் இருந்தபோதும் தொந்தரவு தராது. குடும்பத்தில் வழக்கமான உற்சாகத்துக்கும், சந்தோஷத்துக்கும் குறைவிருக்காது. பெற்றோரின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கும்.

**கடகம்:** புதிய அறிமுகங்களால் கூடுதலான பயன் ஏற்படும். ஆரம்பித்து இடையில் கைவிட்ட பணிகளைச் செய்து முடிக்க வாய்ப்பு உண்டு. கொடுக்கல், வாங்கல் நிலைகளில் எதையும் சற்று போராடி செய்ய வேண்டியிருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகத்தர்கள், பணியில் முழு மனதுடன் செயற்படுங்கள்.

**சிங்கம்:** ஒவ்வொரு செயற்பாடுகளிலும் தாமதத்தைச் சந்திக்க வேண்டியிருக்கலாம். பண நிலையில், வரவுகள் சற்று குறைவாக இருந்த போதும் அதற்குள் செலவுகளை அமைத்துக் கொள்வீர்கள். கடன்கள் சிலவற்றை மாற்றி அமைத்துக் கொள்ள முயற்சிப்பீர்கள்.

**கன்னி:** சில காரியங்களுக்கு தீவிரமான சிந்தனை மற்றும் திட்டத்தோடு செயல்படுவீர்கள்; வெற்றியும் காண்பீர்கள். எதிர்பாராத வகையில், சில பயணங்கள் ஏற்பட்டபோதும் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. கொடுக்கல், வாங்கல் வகையில் சற்று கவனம் நல்லது.

## நாளை

சித்திரை 08 வெள்ளிக்கிழமை 20.04.2012
திதி: சதுர்த்தசி மு.ப 11.32 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.ப 10.16 வரை
சுபநேரம்: 06.01- 07.31 வரை
ராகு காலம்: 10.31-12.01 வரை

**துலாம்:** தங்களின் பேச்சால் சில காரியங்களை எளிதாகச் செய்து முடிப்பீர்கள். சில விடயங்கள் தங்கள் எண்ணப்படி நடந்தேறும். அரச விவகாரங்கள் அனுகூலமாகும். முக்கியஸ்தர்களின் சந்திப்புகள் சற்று தாமதமானபோதும் பயன் உள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். பண நிலையில் வரவுகள் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** காரணமற்ற பதற்றம் சற்று அதிகமாகவே இருக்கும். பண நிலையில் பற்றாக்குறை வரவுகள்தான் என்பதனால், செலவுகளில் சிக்கனம் இருக்கட்டும். கடன் கவலை தரும். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் வீண் தொல்லைகள் ஏற்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி சற்று குறைவு தான். எதிர்பாராத பயணம் ஒன்று ஏற்படும்.

**தனுசு:** உடனடியாக மற்றும் விரைவாக சில காரியங்களில் செயற்பட வேண்டியிருக்கலாம். எதையும், யோசிக்கக்கூட நேரமில்லாத சூழ்நிலையாகவே இருக்கும். கடன்களின் தொந்தரவு மனக்கவலையை ஏற்படுத்தும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில், அவ்வளவாக நன்மையை எதிர்பார்க்க முடியாது.

**மகரம்:** நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் காரணமற்ற தயக்கத்தால், பல நல்ல வாய்ப்புகளை தவறவிடலாம். எனவே, எதிலும் சற்று முன்னெச்சரிக்கையோடு செயற்படுதல் நல்லது. பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் வரும். செலவுகள் சற்று அதிகமாகவே ஏற்பட்டபோதும், சிரமமின்றி சமாளிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

**கும்பம்:** நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் அவசரம் காரணமாக யோசனை அற்று செயற்படலாம், கவனம். தொழில் தொடர்பான விவகாரங்கள் மற்றும் குடும்பம் சம்பந்தப்பட்ட காரியங்களில் எடுக்கும் முடிவுகளில் மறு பரிசீலனை தேவைப்படும்.

**மீனம்:** சற்று அலைச்சலோடு தங்களின் எந்தவொரு பணியையும் நிறைவேற்ற வேண்டியிருக்கும். முக்கியஸ்தர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்புகள் பயன் உள்ளதாக இருக்கும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் இருக்கும். குடும்பத்தில் சில பணிகளைச் செய்து முடிக்க நிர்பந்தங்கள் ஏற்படலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | | | | 6 | | |
| 7 | | 2 | | 1 | 8 | | | 5 |
| | 9 | 5 | | 4 | | | | 8 |
| | 2 | 7 | | | 3 | | | 1 |
| | 5 | | 1 | | 2 | | 8 | |
| 6 | | | 5 | | | 7 | 3 | |
| 5 | | | | 3 | | 2 | 7 | |
| 2 | | | 4 | 9 | | 8 | | 3 |
| | | 6 | | | | 1 | 5 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 6 | 7 | 9 | 8 | 4 | 5 | 2 |
| 2 | 9 | 7 | 5 | 1 | 4 | 8 | 3 | 6 |
| 4 | 5 | 8 | 6 | 2 | 3 | 1 | 7 | 9 |
| 6 | 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 1 | 7 |
| 5 | 2 | 9 | 1 | 4 | 7 | 6 | 8 | 3 |
| 7 | 8 | 1 | 3 | 5 | 6 | 9 | 2 | 4 |
| 1 | 6 | 5 | 4 | 3 | 2 | 7 | 9 | 8 |
| 9 | 7 | 2 | 8 | 6 | 5 | 3 | 4 | 1 |
| 8 | 3 | 4 | 9 | 7 | 1 | 2 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
03.02.1935

ஆண்டவன் அடியில்
19.04.2011

## திருவிளங்கம் சபாரத்தினம்

காலன் வந்து கவர்ந்து சென்று – ஓராண்டு ஆனதையா.....
ஆண்டொன்று கடந்தென்ன
ஆயிரம் உறவு இருந்தென்ன
ஆறவில்லை நம் துயரம்
நேற்றுப்போல் இருக்கிறது
இன்று உங்கள் இழப்பை
என் மனம் ஏற்கவில்லையே அய்யா!
உங்கள் உயிர் எம்மைவிட்டு ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயரில் காலனவன் காற்றாய் கவர்ந்து
சென்ற தென்ன மாயமோ?
என்றும் உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!
என்றும் உங்கள் நினைவில்

ஆருயிர் மனைவி
திருமதி கமலாதேவி சபாரத்தினம்
பிள்ளைகள்: சுரேஷ், ரமேஷ்
மருமக்கள்: சிவமதி உஷேனி, ஜெயினா தர்ஷினி
பேரப்பிள்ளைகள்: சைந்தவி, தனுஷ், ரனேஷ், ராக்கேஷ்.

சண்வியு, பெரியவிளான்,
இளவாலை. (17096) (2-9-7)

# முதலாம் ஆண்டு நினைவலைகள் நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலராக.... 10 ★ 08 ★ 1952

சருகாக.... 02 ★ 05 ★ 2011

தோற்றம் 17 ★ 12 ★ 1988

மறைவு 20 ★ 02 ★ 2008

(பலாலிவீதி கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வடமராட்சி கரவெட்டி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட)

புன்னகை அரசி
திருமதி
சுசிலா வைகுந்தநாதன்
(ரீச்சர் அம்மா)

செல்வன்
வைகுந்தநாதன்
மதியாபரணம் (பிரபு)

அன்பினால் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்புக்கோர் இலக்கணமாய், வாழ வழிசெய்து
அயராது எனக்கு உணவு தந்து
என்னை பல்கலைக்கழகம் வரை
படிப்பித்து பாடுபட்ட என் அம்மா - மகன்

ஆண்டொன்று போனாலும்
மனைவியை நான் பிரிந்து
மாண்டழிந்து போனாலும்
மறக்க மாட்டேன் என் துணைவியை
உன்னை நினையாத நாளுமில்லை
உன்னை மறந்தாலே

கூடுகட்டி உன் நினைவில் உயிர் வாழ்ந்த
கிளிகள் எல்லாம் தனிமரமாய் போனதம்மா
விதியின் விளையாட்டோ இல்லை
காலனின் சூழ்ச்சியோ
புன்னகை பூத்த உன் முகம் எங்கள் மனதில்
அணையாத தீபமாய் என்றும்
இருப்பீர்கள் ஓர் தெய்வமாக.

உங்கள் பிரிவால் வாடும்
துன்னாலை வடக்கு, கரவெட்டி. திரு.கே. ஏ. வைகுந்தநாதன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழருக்கு அதிகாரப் பகிர்வை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

நுவரெலியா, ஏப்.19

அதிகாரப் பகிர்வை வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் மலையகத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இந்திய சர்வகட்சி நாடாளுமன்றக் குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வைத்து இந்திய குழுவினரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் குறித்தும் இந்தியா அக்கறை காட்ட வேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு கூட்டமைப்பினதும் அரசினதும் பேச்சில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை.

அதிகாரப் பகிர்வு வடக்கு, கிழக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் தமிழர்கள் வாழும் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் மலையக சமூகத்தினரின் தற்போதைய நிலைமை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது வறுமையிலும் சுகாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களுக்குத் தேவையான உரிமைகளை உறுதிப்படுத்தப் பட வேண்டியது அவசியம் என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான சிறுபான்மை இன மக்கள் பிரச்சினைகளை உறுதிப்படுத்தியுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டியது இந்தியாவின் பொறுப்பு- என்றார். (ச)

# அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கவும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.19

அதிபர் சேவையில் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத அதிபர்களுக்கு கல்விஅமைச்சு உடனடியாக நியமனங்களை வழங்கவேண்டும். இல்லையெனின், இதற்கெதிராக நீதிமன்றம் செல்வோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிபர் சேவை தரம் இரண்டு ஒன்றில் 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ள அதிபர்களுக்கு, தரம் ஒன்று அதிபர் பதவி உயர்வுகள் எவையும் இதுவரையில் வழங்கப்படவில்லை.

1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு, அதிபர் சேவை இரண்டிலிருந்து அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. பல தடவைகள் சேவைகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போதும் இவர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப் படவில்லை.

இதனால் இவர்கள் பல்வேறு விதத்திலும் பாதிக்கப் பட்டுள்ளனர். அதிபர் சேவை தரம் ஒன்றில் மூன்று வருடங்கள் கடமையாற்றினால் கல்வி நிர்வாக சேவையில் இணைந்துகொள்வதற்கான போட்டிப் பரீட்சை வாய்ப்பு உள்ளது.

இதேபோல் உரிய காலப் பகுதியில் இவர்களுக்குரிய பதவி உயர்வுகள் வழங்கப் பட்டிருந்தால் இவர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருக்கும். ஆனால் இவர்கள் இவற்றை இழந்துள்ளனர்.

> அதிபர் சேவை தரம் இரண்டு ஒன்றில் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ள அதிபர்களுக்கு, தரம் ஒன்று அதிபர் பதவி உயர்வுகள் எவையும் இதுவரையில் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு கல்வி அமைச்சு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கின்றபோதும், இதுவரையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை. இவர்களுக்குச் சம்பளஅதிகரிப்பு, பதவிஉயர்வுகளை உடனடியாக கல்வி அமைச்சு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு மேற்கொள்ளாதுவிடின் இதற்கெதிரான நடவடிக்கையில் இலங்கை ஆசிரியர் சங்கம் ஈடுபட்டு, நீதிமன்றம் வரை செல்லும்- என்றார். (ச)

# மின்னல் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஏப்.19

மாத்தளை - இரத்தோட்டை பகுதியில் மின்னல் தாக்கி தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்குப் பின்னால் உள்ள மரமொன்றிற்கு அருகில் நின்றிருந்த போது அவரை மின்னல் தாக்கியுள்ளது.

வேலுப்பிள்ளை அருணாச்சலம் (வயது-60) என்பவரே உயிரிழந்தார். (ச)



இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கும் மலையகக் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தசந்திப்பில் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

# சிறைச்சாலையில் கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.19

நீர்கொழும்பு சிறைச்சாலையில் மேற்கொள்ளப் பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது 28 கையடக்கத் தொலைபேசிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சிறைக் கைதிகள் கைத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகச் சிறைச்சாலை பாதுகாப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் கைத் தொலைபேசிகளைக் கைப்பற்ற முடிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

கைப்பற்றப்பட்டுள்ள கைத்தொலைபேசிகளில் சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சொந்தமான பல தொலைபேசிகள் இருந்துள்ளன.

இந்தக் கைத் தொலைபேசிகள் எவ்வாறு இவர்களுக்குக் கிடைத்தது என்பது தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை அண்மையில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது 46 கைத்தொலைபேசிகள் கைப் பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கருத்து முரண்பாட்டால் சட்டத் திருத்தம் தாமதம்

கொழும்பு, ஏப்.19

திறைசேரி மற்றும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகள் காரணமாக சிறுகடன் வழங்கும் நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் செயற் படுத்தப் பட்ட கிராமிய நிதித்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் தமது நிதித் தேவைகளுக்கு முறைசாராத துறையில் தங்கியிருப்பதை கருத்தில் கொண்டு இலங்கையின் சிறுகடன் முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கான இந்த ஆலோசனையை ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வைத்துள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

சிறுகடன் வழங்கும் நிறுவனங்கள் பல உள்ளன. இந்த நிறுவனங்கள் மக்களுக்கு உயர்வட்டி வீதத்தில் கடன் வழங்குகின்றன. இந்த நிறுவனங்களை கட்டுப் படுத்துவது முக்கியமானது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போதைய நிதிச் சட்டம் மற்றும் வங்கியியல் சட்டத்தின் கீழ் இவற்றை கட்டுப்படுத்துவது சிரமமானது. எனவே இவற்றை கண்காணிக்க ஒரு சுயாதீன அமைப்பை நிறுவுவது அவசியம் என்று தீர்மானிக்கப் பட்டது.

சிறுகடன்களுக்கு 240 சதவீதமளவில் உயர் வட்டி அறிவிடும் நிறுவனங்கள் தற்போது உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்களைக் கட்டுப்படுத்தவென யாரும் இல்லை. சிறு கடன்களை வழங்க முறைசார்ந்த வங்கி துறையில் ஏற்பாடு இல்லாத காரணத்தால் கிராம மக்கள் இவ்வாறான முறைசாராத நிறுவனங்களை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தில் கிடப்பில் உள்ள இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கான திட்டம் தயாரிக்கப் பட்டு வருவதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கட்டட நிர்மாணங்களில் ஈடுபடுபவர்கள் நிலநடுக்கம் குறித்து கவனிப்பது அவசியம்

## தேசிய கட்டட ஆய்வு அமைப்பு தகவல்

கொழும்பு,ஏப்.19

கட்டட நிர்மாணத்தில் ஈடுபடுவோர் பூமியதிர்வு குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய கட்டட ஆய்வு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பூமியதிர்வுகளினால் கட்டடங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை உள்ளிட்ட உலகின் எந்தவொரு பாகத்திலும் பூமியதிர்வு ஏற்படக் கூடும். இதனால் பூமியதிர்வு குறித்து எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இந்தோனேஷியாவில் இடம்பெற்ற பூமியதிர்வின்போது நாட்டின் பல பாகங்களில் அதிர்வு ஏற்பட்டிருந்தது. கட்டட நிர்மாணப் பணிகளின் போது புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என்று தேசிய கட்டட நிர்மாண ஆய்வு அமைப்பின் மண்சரிவு பிரிவுத் தலைவர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்தார்.

ஜப்பான் போன்ற பூமியதிர்வு அதிகளவில் இடம் பெறக் கூடிய சாத்தியம் அதிகமான நாடுகளில் இந்தத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டே கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அதிர்வுகளைத் தொடர்ந்து சில பகுதிகளில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் நிலவி வருவதாக அவர் தெரிவித்தார்.(ச)

# சமாதானத்தில் வெற்றியை மஹிந்த அடையவில்லை

## சஜித் கவலை



கொழும்பு, ஏப்.19

அரசு போரில் வெற்றி கண்டபோதும் சமாதானத்தில் வெற்றியடையவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கவலை தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் புலிகளைப் போன்றதொரு புதிய இயக்கம் உருவாவதற்கான விதைகளே விதைக்கப்படுகின்றன என்றும் அவர் கவலை தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடைபெற்ற போரை முடிவுக்குக் கொண்டுவந்தபோதும் சமாதானத்தை உருவாக்குவதில் அரசு வெற்றி காணவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக நியாய பூர்வமான தீர்வு காணப்பட வேண்டும். தமிழ் மக்கள் அரசியல், சமூக ரீதியாக வலுவூட்டப்பட வேண்டும்.

இன, மத ரீதியான பாரபட்சங்களை முழுமையாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ச)

# புதையல் தோண்டிய 8 பேர் கைது

கொழும்பு,ஏப்.19

புத்தளம் - பாலாவி பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் நேற்று புதன்கிழமை அதிகாலை 2.10 மணிக்கு சந்தேகநபர்களை கைது செய்தனர்.

புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட பெக்கோ இயந்திரம், கார், உபகரணங்களை புத்தளம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர்.

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மக்களின் பங்களிப்பு அவசியம்

கொழும்பு, ஏப்.19

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த பொதுமக்களின் பங்களிப்பு அவசியமானது என்று தேசிய சமாதானச்சபை வலியுறுத்தியுள்ளது

போரின் பின்னர் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் மக்களின் பங்களிப்பு முதன்மையானது என்று சமாதானச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் அரசின் முனைப்புக்களில் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசும் சர்வதேச சமூகமும் மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்று சமாதானச் சபை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் கொடுத்த செய்தியை இலங்கையால் நிராகரிக்க முடியாது

## ஐ.நா. தீர்மானம்பற்றி சட்டத்துறை மாணவி வாணி விளக்கம்

சர்வதேசம் முதற்தடவையாக கடுமையான செய்தி ஒன்றை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அந்தச் செய்தியை இலங்கையால் நிராகரித்துச் செயற்பட முடியாது என்று ஜெனிவாவில் ஒரு மாத காலத்துக்கும் மேலாகத் தங்கியிருந்து புலம்பெயர் தமிழர் சார்பில் பரப்புரைச் செயற்பாடுகளை ஒருங்கமைக்கும் பணியில் ஈடுபட்ட செல்வி வாணி செல்வராசா தெரிவித்தார். தனது நேரடி அனுபவங்களை கனேடிய தமிழ் காங்கிரஸ் ஊடகப் பிரிவுக்கு வழங் கிய செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.



பல தடைகளுக்கும் இடையூறுகளுக்குமிடையில் ஐ.நா. மனித உரிமைகள் அவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதன்முறையாக இலங்கைக்கு எதிராக பல நாடுகள் வாக்களித்தமைக்குப் பின்னணியில் உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்திருந்த செயற்பாட்டாளர்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். கனேடியத் தமிழர் பேரவையின் சார்பில் கரி ஆனந்த சங்கரியும் செல்வி வாணி செல்வராசாவும் சட்ட வல்லுநர் உரிமை பேணும் கனடா அமைப்பினூடாகக் கலந்து கொண்டு இலங்கைக்கு எதிரான கருத்துருவாக்கல் மற்றும் பரப்புரைச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

கனேடிய தமிழ் காங்கிரஸ் ஊடக பிரிவைச் சேர்ந்த சாருயன் கணபதிப்பிள்ளையுடனான தனிப்பட்ட நேர்காணலில் தனது ஐ.நா. செயற்பாட்டு அனுபவங்கள் மற்றும் இலங்கையின் தற்போதைய அரசியல் ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கும் அழுத்தங்கள் பற்றியும் வாணி குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஒரு சட்ட பயிற்சி மாணவியான வாணி எதிர்வரும் ஜூன் மாதம் ஒன்ராறியோ சட்டத்தரணிகள் கூட்டமைப்பில் இணைந்து கொள்வார். கனேடியத் தமிழர் பேரவையின் இயக்குநர் சபையிலும் அங்கம் வகிக்கிறார். அண்மையில் 'சிறிலங்கா கண்காணிக்கப்படுகிறது இங்கிருந்து நாம் பயணிப்பது எங்கே' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை ரொறன்ரோ இசுரார் பத்திரிகையில் வெளியானது.(வ)

# கோண்டாவில் பொது நூலகத்தால் அடுத்த மாதம் விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

கோண்டாவில் பொது நூலகம் 2012 இன் நூலக வலுவூட்டல் செயற்பாடுகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மற்றும் போட்டி நிகழ்வுகளை அடுத்த மாதம் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக கோண்டாவில் பொது நூலகர் செல்வி கி.அனிதா தெரிவித்தார்.

மே மாதம் ஒவ்வொரு வாரமும் பிரதி வெள்ளிக் கிழமைகள் தோறும் கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

முதல்வார நிகழ்வில் 'நீரிழிவு நோயாளர்களுக்கான பாத பராமரிப்பு' தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கையும், இலவச இரத்தப் பரிசோதனையையும் டாக்டர் யோ.யதுநந்தன் நிகழ்த்தவுள்ளார்.

இரண்டாம் வார நிகழ்வில் 'இன்றைய காலத்தில் நமது பண்பாடு நம்மிடையே காணப்படுகிறதா' எனும் தலைப்பில் சின்மயா மிஷன் ஜாக்ரத் சைத்தன்யா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

மூன்றாம் வார நிகழ்வில் நுண்கலைகள் தொடர்பான போட்டிகளும், ஐந்தாம் வார நிகழ்வில் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கௌரவிப்புச் செய்தலை நோக்கமாகக் கொண்டு நூல்களை விளம்பரப்படுத்தல், தொல்பொருள்கண்காட்சி, மற்றும் மாற்று வலுவுடையோர்களின் கைப் பொருள் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

பாடசாலை மாணவர்கள், மற்றும் வளரும் இளம் சமுதாயத்தினர் மத்தியில் ஆளுமையை ஏற்படுத்தல், விழிப்புணர்வை உண்டு பண்ணல், வாசிப்புத் திறனை ஊக்குவித்தல் போன்ற செயற்றிட்டங்களை நோக்காகக் கொண்டு இந்த நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

(வ-14)

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கழகங்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு ரூபா 2 லட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 22 விளையாட்டு கழகங்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களுக்கும் சுமார் ரூபா 9 ஆயிரம் பெறுமதி மிக்க வலைப்பந்து, கிரிக்கெட் உபகரணங்கள், கூடைப்பந்து, செஸ்போட், கரம்போட் உட்பட தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சபையின் மாநாட்டு மண்டபத்தில் வைத்து விளையாட்டுக் கழக உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டன. (வ-13)

# மாற்றுவலுவுடையோர் புகைப்படம் எடுத்தல்

தென்மராட்சி, ஏப்.19

தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுவில் பிரதேச மாற்று ஆற்றல் உடையோருக்கான நலன்புரி அடையாள அட்டைகளுக்கான புகைப்படங்கள் எடுக்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை கைதடி நுணாவில், தென்மட்டுவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கைதடி நுணாவில் முன்பள்ளியிலும், மட்டுவில்-நுணாவில், மட்டுவில் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுவில் மத்தி கிராம அலுவலர் அலுவலகத்திலும், மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்திலும் படப்பிடிப்புகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# இலங்கைக்குக் கடத்தவிருந்த கடலட்டைகள் பறிமுதல்

இலங்கைக்கு கடத்துவதற் காக, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே, முள் ளி முனை கடற்கரை ஓரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த, கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி கென்னடி, எஸ்.ஐ., கணேசமூர்த்தி தலைமையில் பொலிஸார், கடந்த திங்கட்கிழமை இரவு, தொண்டி அருகே ரோந்து சென்றனர். முள்ளிமுனை கடற்கரையில் உள்ள சுடுகாடு அருகில் அவிக்கப்பட்ட நிலையில் ரூ.3 லட்சம் மதிப்புள்ள 125 கிலோ, கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையைக் கண்டு பிடித்தனர். இவற்றை பறிமுதல் செய்து ராமநாதபுரம் வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். தலைமறைவாக உள்ள கடத்தல்காரர்களைத் தேடி வருகின்றனர். (வ)


## மரண அறிவித்தல்

### செல்வன் தியாகராசா பிரபாகரன்



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மோதரையை வசிப்பிடமாகவும், கொண்ட செல்வன் தியாகராசா பிரபாகரன் (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுகன்யா (கனடா), வசீகரன், பாஸ்கரன், சதீஸ்கரன், திவாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அகிலதரன் (கனடா), பத்மினி ஆகியோரின் மைத்துனரும், தில்லையம்பலம் (கனடா), தியாகலிங்கம், இராசேஸ்வரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பூமணி, நாகேஸ்வரி மற்றும் சிந்தாமணி, திருநாவுக்கரசு (பிரான்ஸ்), திருச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், சினேகா, கிசானா, தேனுகா ஆகியோரின் மாமனும், கோபிகா, அபிசா, கவினயா ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இன்பம் மலர்ச்சாலையில் (மானிப்பாய் வீதியில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு அருகில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தி.லோகேஸ்வரி,
897, 6/5, அழுத்மாவத்தை வீதி,
மோதர, கொழும்பு - 15.

(17198) (2-9-6)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### தவமணி நேசம்மா

சமரபாகு, சிவரந்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்த தவமணி நேசம்மா (17.04.2012) செவ்வாய்க் கிழமை, மாலை 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னாச்சி தம்பதியரின் அருமை மிகு மகளும், சகோதரர்களின் ஆசை மிகு அக்காவும், தவமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் தவராசா (பிரான்ஸ்), தவேந்திரராஜா, குபேந்திரராஜா (லண்டன்), தவனேஸ்வரி, மகேந்திரராஜா (லண்டன்), தவஈஸ்வரி, சுதாமதி, சிவச்செல்வன், நிஷாந் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், மருமக்களின் உறுதுணை மாமியும், பேரப்பிள்ளைகளின் பாசமிகு பாட்டியும் மற்றும் பூட்டப்பிள்ளைகளின் அருமைமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை அவருடைய இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவரந்தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை

(12749) (8-9-6)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## விபத்தில் கால் முறிவு

யாழ்ப்பாணம், ஏப்.19

மோட்டார் சைக்கிள்- 'ஹன் ரர் படி' வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காலில் எலும்பு முறிவுக்கு உள்ளாகி சிகிச்சைகாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் யாழ். ஐந்து சந்தியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ். ஓட்டுமடத்தைச் சேர்ந்த கி.தயானந்தன் (வயது-40) என்பவரே காயமடைந்தார். (ந-4)

# தாய்லாந்துப் பெண்கள் இருவருக்கு விளக்கமறியல்

**இரு பெண்களினதும் வயிற்றுக்குள்ளிருந்து 162 கொக்கெயின் மாத்திரைகள் படிப்படியாக வெளியேற்றப்பட்டுள்ளன.**

கர்ப்பிணிகள் போல் வேஷமிட்டு பெருந்தொகை கொக்கெயின் போதை மாத்திரைகளை விழுங்கிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட தாய்லாந்துப் பெண்கள் இருவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு வைத்திய சாலையில் சுமார் ஏழு நாள்களாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி இரு பெண்களினதும் வயிற்றுக்குள்ளிருந்து 162 கொக்கெயின் மாத்திரைகள் படிப்படியாக வெளியேற்றப்பட்டுள்ளன.

இருவரினது வயிற்றுக்குள்ளிருந்தும் மீட்கப்பட்ட கொக்கெயின் மாத்திரைகளின் நிறை ஒரு கிலோ 425 கிராம் என்பதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அத்தியட்சகர் அஜித்ரோஹண உறுதிப்படுத்தினார்.

டோஹா கட்டாரிலிருந்து பாங்கொக் செல்லும் வழியில் மேற்படி தாய்லாந்து நபர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய் யப்பட்டனர். 20 மற்றும் 33 வயதுடைய பெண்கள் கர்ப்பிணிகள் போல் வேசமிட்டு டோஹாவிலிருந்து இலங்கையூடாக பாங்கொக் சென்றடையத் திட்டமிட்டிருந்தனர். இவர்களுள் ஒருவர் 88 கொக்கெயின் மாத்திரைகளையும் மற்றவர் 74 கொக்கெயின் மாத்திரைகளையும் கடத்த முயற்சித்திருந்தனர்.

டோஹா விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்குவதற்கு முன்பாகவே இவர்களுள் ஒருவர் உடல் உபாதைகளால் அவதியுற்றுள்ளார். விமானத்திலேயே குறித்த பெண்ணின் உடல் உபாதைகள் குறித்து அறிவிக்கப்படிருந்ததால் விமானம் தரையிறக்கப்பட்டதும் அந்தப் பெண் அம்புலன்ஸ் வாகனத்தில் உடனடியாக நீர்கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கே ஸ்கான் மற்றும் கதிர்வீச்சு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணின் வயிற்றுக்குள் இருப்பது சிசு அல்ல; அளவுக் கதிக மான கொக்கெயின் மாத்திரைகளே என்பதை வைத்தியர்கள் நிரூபித்தனர்.

போதைப்பொருள் கடத்தல் விவகாரம் தெரிய வந்ததையடுத்து உஷார் அடைந்த மற்றப் பெண் உடனடியாக பாங்கொக் செல்வதற்குத் தயாரானார். இதையறிந்த பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர், அவரை பாங்கொக் நோக்கி செல்வதற்குத் தயாராக இருந்த விமானம் ஒன்றில் கைது செய்தனர். மருத்துவப் பரிசோதனைகள் மூலம் அவரது வயிற்றுக்குள்ளிருப்பதும் கொக்கெயின் மாத்திரைகளென்பது உறுதி செய்யப்பட்டது. இவற்றின் பெறுமதி சுமார் 22.5 மில்லியன் ரூபாவெனக் கூறப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து மேற்படி இரு பெண்களுக்கும் நீர்கொழும்பு வைத்திய சாலையில் ஏழு நாள்களாக வழங்கப்பட்ட தீவிர சிகிச்சையின் மூலம் வயிற்றுக்குள்ளிருந்த போதை மாத்திரைகள் படிப்படியாகவெளியேற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு நீதவானின் உத்தரவின் பேரில் இந்த இரு பெண்களும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கு கொக்கெயின் கடத்தும் கும்பலுடன் இவர்களுக்குத் தொடர்பு இருக்கலாமெனச் சந்தேகிக்கும் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந)

## எமது மனோ பிராந்தி அல்லது சிந்தை மயக்கத்தின் விளைவு யாது?

மனோ பிராந்தியின் விளைவு எம்மை நாமே தான் உடம்பு என எண்ண வைக்கின்றது. பெய்யான 'நான்' என்றதில் கொண்ட நம்பிக்கையாலும் உண்மையான 'நான்' என்பதை மறந்து விடுதலாலும் நாம் தான் உடம்பு எனத்தொடர்ந்து எண்ணிக் கொள்வதாலும் நாம் எமது அகங்காரத்தை வீணாகப் பெருக்கிக் கொள்கிறோம்.

எம்மிலிருந்து வேறுபட்டது வேறு உண்டு என நாம் எண்ணிக்கொள்ளும் வரை நாம் அறியாமையில் மூழ்கிக் கிடப்போம். எம்மிலிருந்து வேறுபட்டதும் எமக்குத் தெரியாததும் நாம்பெற வேண்டியதுமான, பெரிய சக்தி ஒன்றுமில்லை. இரகசியமானதும், புனிதத்தன்மை வாய்ந்ததுமான தெய்வீக சக்தியென்று எம்மிலிருந்து வேறுபட்டது ஒன்றுமில்லை. இத்தகைய எண்ணங்களெல்லாம் அறியாமையினால் ஏற்பட்டனவாகும். இது ஒரு கனவு போன்றது. இந்தப் பிரபஞ்சத்தில் 'தான்' என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். மேலும் 'தான்' என்பதற்கு மேலானதும் ஒன்றுமில்லை.

இந்த நுண்ணிய சிறிய உண்மையை நாம் அறிந்து கொண்டால் எமது எண்ணங்கள், உணர்வுகள் ஆகியனவற்றின் எல்லையை வேண்டிய அளவுக்கு விரிவாக்கிக் கொள்ளலாம்.

நன்றி: ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்




# ஆழிப் பேரலை எச்சரிக்கை கோபுரங்கள் 10 செயலிழப்பு

இந்தோனேஷியாவை அண்மித்த பகுதியில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து இலங்கையில் பொருத்தப்பட்டிருந்த 10 ஆழிப்பேரலை எச்சரிக் கைக் கோபுரங்கள் செயலிழந் துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இந்த விடயம் தெரிய வந்தது என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஊடக விவகாரங்கள் தொடர்பான பிரதிப்பணிப்பாளர் சரத்லால் குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை எச்சரிக்கைக்கென பொருத்தப்பட்டிருந்த 74 கோபுரங்களில் 64 கோபுரங்கள் உரிய முறையில் செயற்பட்டன.

செயலிழந்த 10 கோபுரங்களில் 5 கோபுரங்கள் ஏற்கனவே செயலிழந்திருந்தன என்பது தெரியவந்துள்ளது. ஏனைய ஐந்து கோபுரங்களும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்தன. இடர் முகாமைத்துவ நிலையம் அண்மையில் புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டதால் அவற்றை மீளமைப்பதில் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ந)

**தவறிவிட்டது**

பிரம்படி லேன், கொக்குவில் எனும் முகவரியுடைய சரவணபவன் கடம்பமலர் என்பவரின் தேசிய அ.அட்டை (588500721 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 707 1761

**வாகனம் விற்பனைக்கு**

டிமோ பட்டா NP-LH -36-45, ரக வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு : 077 8446089

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
சம்பளம்: ரூபா 10,250/=
தொடர்பு: 077-3765628

**சாரதி தேவை**

கொழும்பில் கடமையாற்ற கனரக வாகன சாரதிகள் தேவை. பொலிஸ் நற்சான்றிதழுடன் நேரில் வரவும்.
( மாதாந்த வருமானம் 75,000/= ரூபாவிற்கு மேல்)
தொடர்புகளுக்கு : T.P : 021 2230397,
AMT Transport Service
இருபாலைச் சந்தி, கோப்பாய்

**வேலை ஆள்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
( அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
தொடர்புக்கு : 077 7488093, 072 7122944




தொழில் வாய்ப்பை நோக்கியதொரு கற்கை நெறி

வரையறையற்ற செய்முறை நேரம். இலகு நடையில் விளக்கக்குறிப்புகள் மற்றும் அங்கீகாரமுடைய சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சி நெறி முடிவில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் உண்டு.

Gateway
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5550 Fax: 021 222 7...
E - mail : gatewayjfn@sltnet.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக மனித நேயத்துடன் அர்ப்பணிப்புடனும் சமூக சேவையை ஆற்றிவரும்

**லயன் வல்லிபுரம் பரமசிவம்**

அவர்களுக்கு சமஸ்த லங்கா ஒல்கொட் உப்பாதி சறசவி நிறுவனம் சிறீலங்கா பௌத்த கல்வியில் அதி உத்தம எனக் கணிக்கப்படும் ஸ்ரீ மத் ஸ்ரீல் ஒல்கட் அவர்களால் சமாதான நீதிபதியும் அரச சேவையில் ஓய்வு பெற்றவருமான லயன் வல்லிபுரம் பரமசிவம் அவர்கட்கு அவரது திறமைக்கும், சமூக ஈடுபாட்டு மேம்பாட்டிற்குமாக தேசமானிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

நலன்புரி சங்கம், மக்கள்வங்கி
பல்கலைக்கழகக் கிளை,
சேவைநிலையம்
கல்வியங்காடு, திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கேர்டின் மகால்
# New Curtain Mahal

சகல
விதமான
கேர்டின்
ஸ்டைல்கள்



★ விடுகள், ★ ஹோட்டல்கள், ★ அலுவலகங்கள்
அனைத்திற்குமான Curtain, Blinds வகைகள் மற்றும்
Bed Sheets, Pillows, Kitchen and Loop Curtains
என்பனவும் Tailoring and Railing ஆகியவற்றையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



# 7 1/1, Mill Road, Vavuniya.
Tel: 024-3248391, 077-6441909.


ஈரவிழிகளுடனும் வாடிய இதயத்தோடும்
சொரிகின்ற கண்ணீர்ப் பூக்கள்

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின்
மடியில்
27.06.2003

இறைவனின்
இல்லத்தில்
19.04.2008

### செல்வி இந்துஜா விஜயகுமார்

மகளே இந்துஜா
உன் புன்னகையாலும் மிடுக்கு தனத்தாலும்
எம்மையெலாம் - பிரமிக்க வைத்தாயம்மா
எம்மை விட்டு நீ ஓடிச் சென்று
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவாய் செத்துப் பிழைக்கின்றோம்
மீண்டும் எம்மிடம் வருவாய் என
எதிர்பார்த்தோம் - இதுவரை
நடக்கவில்லை.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

அம்மா, அப்பா
மற்றும் குடும்பத்தினர்.

(17168) (2-9-7)

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
15 ★ 01 ★ 1944

இறைவன் அடியில்
19 ★ 04 ★ 2003

திருமதி
### கந்தசாமி சிவநாயகி
(கிளி)
(திருநெல்வேலி, கிழக்கு)

அன்போடு அரவணைத்து
பண்போடு எமை வளர்த்த
அன்புத்தெய்வமே !
உணரவில்லை நாம்
இன்னும் உணரவில்லை
உங்களை இழந்து ஒன்பது
ஆண்டுகள் ஆகியும்
ஒரு நொடியும் உணரவில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காக
வெள்ளைப் பிள்ளையாரை
பிரார்த்திக்கின்றோம்

இல : 20, முதலாம் ஒழுங்கை
சின்னப்புதுக்குளம்
வவுனியா
024 4925686

கணவன், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்: S. சாம்பவி
S. சாகித்தியன்
S.பானுஜா

# முன்பள்ளிகளின் சிறாருக்கு சத்துணவு

பளை,ஏப்.19

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள 21 முன்பள்ளிகளைச் சேர்ந்த 440 சிறார்கள் இந்தத் திட்டத்தால் பயனடையவுள்ளனர்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பதினமான எதிர்வரும் 23 ஆம் திகதி சகல முன்பள்ளிகளிலும் சிறார்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது. இதற்கான சத்துணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பளை முல்லையடியில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை மண்டபத்தில் இடம்பெறும்.

முதல் கட்டமாக இரு வாரங்களுக்குரிய சத்துணவுப் பொருள்கள் முன்பள்ளி ஆசிரியைகளிடம் பேரவையினரால் கையளிக்கப்படவுள்ளன.

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினரின் கல்வி நிதியில் முன்பள்ளிச் சிறார்களுக்கு தினமொரு போசாக்கு உணவு என்னும் திட்டத்தின் கீழ் வழங் கப் படவுள்ளது.

திங்கட்கிழமை கடலை, செவ்வாய், வியாழக்கிழமைகளில் கௌபி, புதன் கிழமை பயறு, வெள்ளிக்கிழமை பொங்கல் என்னும் அடிப்படையில் சத்துணவு வழங்கப்படவுள்ளதாக பேரவைச் செயலாளர் ச.சண்முகதாஸ் தெரிவித்தார்.

நாளை நடைபெறும் சத்துணவுத் திட்ட ஆரம்ப நிகழ் வில் பிரதேசத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

தென்மராட்சி,ஏப்.19

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகார பிரிவுக்குட்பட்ட மட்டுவில், சரசாலை பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் நிறைவடைந்ததும் கைதடி, நாவற்குழி பிரதேசங்களில் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இடங்களின் விவரங்கள் அந்தந்தப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவிக்கப்படும் எனவும் அந்த இடங்களுக்கு தமது வளர்ப்பு வாய்களை கொண்டு சென்று தடுப்பூசி ஏற்றுமாறு கூறப்பட்டுள்ளது. (ம-9)

# உரிமை கோரப்படாத பொருள்கள் ஏலத்தில்

கொடிகாமம் பகுதியில் அனாதரவான நிலையில் காணப்பட்டு கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத பொருள்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பகிரங்க உள்ளக ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. (ம-9)


## வீடு வாடகைக்கு

கொடிகாமம் வீதி, புலோலி மந்திகையில் 8 பரப்புடன் கூடிய பெரிய வீடு "பூரண கலசம்" வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 021 226 4359, 0774682684

## விற்பனைக்கு

வல்லிபுர குறிச்சிறை சோழியாவற்றையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
021 226 4359, 0774682684

## தேவை

சாவகச்சேரியில் புடைவை நிலையத்துக்கு விற்பனையாளர் தேவை
சாவகச்சேரியில் இயங்கும்
"அபிஷா ரெக்ஸ்" புடைவை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி.
இல.9, நவீன சந்தை.


## 6 ஆம் ஆண்டு நினைவில்



மண்ணில்
24 ★ 02 ★ 1988

விண்ணில்
19 ★ 04 ★ 2006

அமரர்
### நவரத்தினம் பிரகாஸ்
(மு/மல்லாவி ம.க கணித பிரிவு மாணவன்)
(திதி : 11.05.2012)

ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறவில்லை உன் துயரம்
மீண்டும் நீ வரும் வரைக்கும்
அழிவதில்லை உன் நினைவு

வாகையடிசந்தி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

குடும்பத்தினர்

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னத்தம்பி கந்தையா
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம்
14 ★ 07 ★ 1930

மறைவு
15 ★ 04 ★ 2007

ஐந்து ஆண்டுகள் ஆனாலும் - எப்பொழுதும்
உங்கள் நினைவுடன் இருக்கின்றோம் ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

இந்திரன், ஜெயம்
குடும்பத்தினர்.

புலவனார் வீதி, கல்வியங்காடு. (17192) (2-9-7)

# மரண அறிவித்தல்கள்



### V.K. இராசேந்திரா
(முன்னாள் பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான V.K. இராசேந்திரா (14.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு முதலியார் - கனகரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், சகுந்தலா (கனடா), நளாயினி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராமா (கனடா), ஆனந்தக்குமாரசாமி (UK) ஆகியோரின் மாமனும், கலைவாணி (கனடா), சங்கீதா (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசசிங்கம், இராசசேகரம் மற்றும் இராசகோபால், காலஞ்சென்றவர்களான இராசலெட்சுமி, இராசநாயகி, இராசேஸ்வரி மற்றும் இராசசுந்தரி (நியூசிலாந்து), இராசயோகம் (UK) இராசபாலாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.04.2012) வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 2 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 3 மணிக்கு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கு. நந்தகுமார்
ச. இராசபாலாம்பிகை
(சகோதரி -பாலிரீச்சர்)

79, செட்டித்தெரு,
நல்லூர். (ச/063) (48-7-9)

### திருமதி குகமூர்த்தி சிவாஜினி



நல்லூர் செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகமூர்த்தி சிவாஜினி நேற்று (18.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், ச. குகமூர்த்தி (முறிவு நெறிவு வைத்தியர்) யின் அன்பு மனைவியும், யோகேஸ்வரனின் (1ஆம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்) அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. குகமூர்த்தி (கணவர்)
K. யோகேஸ்வரன் (மகன்)

20, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதை மரக்கறிகள் அள்ளிச் செல்லப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப்.19

திருநெல்வேலிச் சந்தையில் நடைபாதையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மரக்கறிகளை நல்லூர் பிரதேச சபை உழவு இயந்திரத்தில் அள்ளிச் சென்றது. திருநெல்வேலி சந்தைப் பகுதிகளில் நடைபாதைகளில் வைத்து மரக்கறிகளை விற்பனை செய்ய வேண்டாம் என்று பிரதேச சபையால் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டு வந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழனீம நடைபாதையில் வியாபாரம் வழமை போன்று இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரிசாந்த சீலனின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த பகுதிகளில் இருந்த மரக்கறிகள் உழவு இயந்திரத்தின் மூலம் அகற்றப்பட்டன.

நடைபாதைகளில் மரக்கறி வியாபாரம் இடம்பெறுவதால் சந்தைக்குச் செல்லும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். (ம-7)



நியு பிரியங்கா
நகைமாளிகை

அக்ஷய திருதியையில் தங்கத்தை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அக்ஷய திருதியை தினமான எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் நகை கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறப்புமிக்க அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

தரமான 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களிலும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

நியு பிரியங்கா நகை மாளிகை

2G ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 5644

இல.69, யாழ் வீதி, (A9)
(கிளிநொச்சி கச்சேரி முன்பாக)
கிளிநொச்சி.
021-2285433 / 0777175059.



ஜெய் குருதேவ்
ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்
வாழும்கலை பயிற்சி

மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், சுதர்சன கிரியா, யோகா, தியானம்,

இடம்: மகேஷ்வரன் மணிமண்டபம் (நல்லூர்)
திகதி : 20.04. 2012 - 22.04.2012
நேரம்: பிற்பகல் 2 - 4.30 Pm
5 - 7.30 Pm

தொலை பேசி இல.
077 0474757
077 7740 593

(17117) (43-0-7)

தங்கத் திருநாளான
அக்ஷய திருதியை தினத்தில்

காலை 7.00 மணிமுதல்
மாலை 9.30 மணி வரை திறந்திருக்கும்







தங்கத் திருநாளான எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்.



தரம், நாணயம்,
உத்தரவாதம் கொண்ட நகைகளைக் கொள்வனவு செய்ய நாட வேண்டிய ஒரே இடம்

மைதிலி நகைமாடம்
89 V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902

யாழ் மைதிலி ஜுவலரி
79 Z, செட்டியார் தெரு, கொழும்பு-11
0112396239

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## விபத்தில் காயம்

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

வன்னிப் பகுதிக்கு சென்று விட்டு திரும்புகையில் இந்த விபத்து இடம் பெற்றது.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த புண்ணிய மூர்த்தி றொடிந்தன் (வயது 27) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து வந்ததாகவும் விபத்தின் போது தூக்கி வீசப்பட்டதில் தலை நிலத்தில் மோதுண்டதால் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிவிரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (ம-8)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

தென்மராட்சி,ஏப்.19

சாவகச்சேரி கெருடாவில் பகுதி கிணறொன்றில் காணப்பட்ட ஆணின் சடலம் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த இராசரத்தினம் ஆனந்தன் (வயது-52) என்பவேர சடலமாக மீட்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். நீதவான் [illegible] மேற்கொண்டார். (ம-9)

தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

### பயிற்சிக் கிளை முகாமையாளர்கள்

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப்பரப்பிலுள்ள சேவைமனப்பான்மையுடைய முழுநேரமாக உழைக்கும் ஆர்வமுடைய தகைமையுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ வயதெல்லை

18 - 40 வரை விண்ணப்பம் முடிவுறும் திகதியன்று இருத்தல் வேண்டும்

★ தகைமை

கூட்டுறவுப்பணியாளர் (சா/த) பத்திரம் / க.பொ.த (சா/த) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/ தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புப்படி வழங்கப்படும்

★ கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் றொக்கப்பிணையினையும், ஆதனப்பிணையினையும் வழங்கத்தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்புதல்

சங்கத்தலைமையகத்தில் ரூபா 20.00 செலுத்தி விண்ணப் பப்படிவங்களைப்பெற்றுக்கோள்ளலாம். விண்ணப் பப்படிவத்துடன் கல்வித்தகைமைச்சான்றிதழ் அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் போட்டோ பிரதிகள் இணைக்கப்படவேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்கள் 04.05.2012 ஆம் திகதிக்கு முன்பதாக "பொது முகாமையாளர் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், கொடிகாமம்" எனும் முவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிற்சிக்கிளை முகாமையாளருக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ,
ப.நோ.கூ.சங்கம்
கொடிகாமம்.
19.04.2012

பொதுமுகாமையாளர்.

(சி/959) (45-7-9)

தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
கொடிகாமம்

## விற்பனை உதவியாளர் பதவி வெற்றிடம்

1. சம்பள அளவுத்திட்டம் 8950 - 10300 (கூட்டுறவு வேலையாளர் 65×10-70×10 ஆணைக்குழுச்சுற்று நிருபம் 66/2006 இன்படி)
2. சம்பளக்குறியீட்டு இல - 308/17
3. வயது : 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
4. விண்ணப்ப முடிவுத்திகதி - 04.05.2012
5. பிணை - தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் காசுப்பிணையினை செலுத்துவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
6. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
7. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் -
   (அ) கூட்டுறவுப் பணியாளர் (கனிஷ்ட) தராதரம்
   அல்லது
   (ஆ) 8 ஆம் வகுப்பிலான சித்தியும், விற்பனைத்தொழிலில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவமும்
8. நிபந்தனைகள்-
   (அ) நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தினூடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்கவேண்டும்.
   (ஆ) விண்ணப்பப்படிவத்துடன் பாடசாலை விடுகைப்பத்திரம், அனுபவச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதிகள் என்பன இணைக்கப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமையுண்டு.
9. விண்ணப்பப்படிவங்களை சங்கத்தலைமைப் பணிமனையில் ரூபா 20,00 செலுத்தி பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவங்கள் யாவும் "பொதுமுகாமையாளர் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் (வ-து), கொடிகாமம்" எனும் முகவரிக்கு விற்பனை உதவியாளர் 308/17 பதவிக்கான விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ,
ப.நோ.கூ.சங்கம்
கொடிகாமம்.
19.04.2012

பொதுமுகாமையாளர்.

(சி/958) (45-7-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்கான காரணம் என்ன?



அண்மையில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந் தமைக்குப் பல காரணங்கள் உள்ளன.

ஆண்கள் விளையாட்டுச் சிந்தனை உடையவர்கள். கல்வியையும் விளை யாட்டாக எடுத்துவிட்டார்கள். மேலும் நாகரிக மோகத்தில் வீழ்ந்துவிட்டார்கள்.

மது, புகைத்தல் போன்ற செயற் பாடுகளுக்கும் அடிமையாகிக் கொண்டுள்ளனர். ஆனால் கல் விக்காகத் தம்மை ஈடுபடுத்து வதற்குப் பொறுமை அவர் களிடம் சிறிதளவு கூட இல்லை. ஒரு சில ஆண்கள் மனோதிடத் துடன் பொறுமையுடன் தம் மைக் கல்விக்காக அர்ப்பணிக் கின்றனர்.

## விமர்சனப் பகுதி

இதனால் கல்வியில் அதீத புள்ளிகள் பெறுகின்றனர். முற்றுமுழுதாகத் தங் களை கல்விக்காக அர்ப்பணிக்கும் ஆண்களாலேயே நாளைய தலைவர் களாக மிளிர முடியும்.

கல்வியின் ஊடாக வாழ்க்கையை அறிய முடியும். கல்வி கற்றால்தான் சிறந்த குடும்பத் தலைவனாக மிளிர முடியும்.

பாடசாலையில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும் பெண் களோ எப்போதும் தம்மைக் கல்விக்காக அர்ப்பணிக்கின்றனர். எந்த நேரமும் புத்தகத்துடன் காணப்படுவார்கள். அதுமட்டுமல்ல பெண்கள் பொறுமைக் குணம் படைத்தவர்கள். ஆகையால் இவர் களது கல்வித் தரம் முன்னேறியுள்ளது.

ஆண்கள் கைத்தொலைபேசியுட னும் கணினியுடனும் காலத்தை ஓட்டப் பெண்கள் கல்வியில் அக்கறை செலுத் தினர். கல்வி இல்லாதவை நடைபிணம் என்று கூறுமளவுக்கு கல்வியின் பயன் வலியுறுத்தப்படுகிறது. அதாவது 'கற்க' என்று கல்வியைத் தேடி வலியுறுத்தும் வள்ளுவர் ''கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்று கூறுவதன் மூலம் கற்றவர்கள் பண்புடையவர்களாக வாழ வேண்டும் என்று கூறுகிறார். பெண்கள் கல்வியில் முன்னேறிவிட்டோம் என்று இருக்காது பண்புடனும் வாழ வேண்டும். இன்று ஆண்கள் பல காரணங்களால் கல்வியை இழந்துவிட்டு தம் ஜீவனோபாயம் கருதி தொழில் வாய்ப்பை தேடுவதற்கு அலை கின்றனர். இதனால்தான் எம்முன்னோர்கள் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று கூறினார்கள்.

எனவே கல்வியில் சிறந்த ஒருவனை நாடும் ஏடும் போற்றும். ''கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்பது பொய்யான வார்த்தை அல்ல. ஆகவே பெண் களைப் போல் ஆண்களும் கல்வியை விரும்பிக் கற்க வேண்டும்.

ஜெனன் மோகனதாஸ், கிளி/உருத்திரபுரம் ம.வி.

## கண்ணீர்



உன்னுடன் பேச முன் நான்
விட்ட கண்ணீர் துளியின்
எண்ணிக்கையைவிட
என் இதயம் துடித்த துடிப்பின்
வலியை விட- நான்
உன்னுடன் பேசிய பிறகு
விட்ட கண்ணீர் துளியின்
எண்ணிக்கை கோடி - என்
இதயத் துடிப்பின் வலி அதிகம்
இதெல்லாம் நீ என்னைப்
பிரிந்து சென்றதால் தான்
சிரிப்பின் ஒலியை விட
அழுகையின் கண்ணீருக்கே - காதலில்
அதிக சக்தி என்று தெரிந்தும் ஏன்
என்னை அழவைக்கிறாய்......
நம் காதலுக்கும் ஓர் கண்ணீர் கதை
வேண்டும் என்பதற்காகவா? சொல்
உன் நினைவுகளுடன்.....

*க.சுகி, சங்கத்தான்னை.*

## உன்னால் முடியும்



மனிதா! - நீ
சாதிக்கப் பிறந்தவன் - தடைகள்
அவை; சோதிக்க எழுபவை
உலகின் எட்டாவது அதிசயம் தேடி
உலகெல்லாம் அலையாதே
நீ தான்
உனக்கு இன்னமும் தெரியாது
கூனல் விழுந்த முதுகை நிமிர்த்து
குறிக்கோளை நோக்கி வாழ்வை நகர்த்து
பிறப்பில் வருவது உயர்வல்ல
உழைப்பில் வருவதே உயர்வு
முன்னேறு... தொடர்ந்து முன்னேறு
முன்னால் கால்கள் நகரட்டும்
எறும்புக்குக் கூட இலட்சியம் இருக்கிறது
தேனீக்குக் -கூட நேரசூசி இருக்கிறது
பதினான்கு மில்லியன் நரம்புக் கலன்களாலான
உன் மூளையில் என்ன இருக்கிறது
முடியாது என்பது முயலாத வரைக்கும் தான்
முதலாம் அடி எடுத்தால் தொடங்கிவிடும்
உன் பயணம்
வெற்றி ஒரு போதும் வீடு தேடி வந்திடாது
வெற்றியை நோக்கி நீ தான்
விரைந்திட வேண்டும்.

கற்களும் முட்களும் கால்களில் இடறலாம்
காயமும் சோகமும் பரிசாகக் கிடைக்கலாம்
எந்தப் பாதையில் தான் தடைகள் இல்லை
எந்த நதிகள் வளைவின்றிப் பாய்கின்றன
முட்கள் இல்லாமல் ரோஜாக்கள் இல்லை
முயற்சி செய்யாத ராஜாக்கள் இல்லை
தடைகள் இல்லாத வெற்றிகளும்இல்லை
தளர்ச்சி இல்லாமல் உழைத்திடு முடிவோடு
கேவலம்........
மரங்கள் கூட தளபாடம் ஆகிவிடும்
மனிதன் நீ என்னவாய் ஆகலாம்
வாழ்ந்து மறந்ததை வரலாறு சொல்லட்டும்
வாழ்ந்தவர் வரிசையில் ஒருவராய் ஆகிவிடு.

*போ. சித்திரா*
*மானிப்பாய்.*

## போராளி

இறுகிய முகத்துடன்
இவன் தேடுகிறான்
தன் தேசத்தில்
மரிக்காத
புன்னகையை!

காயங்களின்
வலிகளில்
இவன் தேடுகிறான்
திடமான
மனோபலத்தை!

திசைகள்
இருண்ட பின்பும்
இவன் தேடுகிறான்
விடியலின்
அஸ்தமிப்பை

எதிரியின்
கண்களில்
இவன் தேடுகிறான்
இயலாமையின்
பரிதவிப்பை!

தோல்வியின்
விளிம்பிலும்
இவன் தேடுகிறான்
வெற்றின்
ஆவேசத்தை!

சதிராகும்
வாழ்க்கையில்
இவன் தேடுகிறான்
ஓயாத
தேடலை!

*தி.வைதேகி*
*யாழ்ப்பாணம்.*

# "சாதனைகள் பல விதம் அதில்............. குடும்ப சாதனை ஒரு விதம்"



*2001.01.04* அன்று இசைஞானியின் இசையில் 'ப்ரண்ட்ஸ்', இவரது மூத்த மகன் கார்த்திக் ராஜாவின் இசையில் 'வாஞ்சிநாதன்' மற்றும் இன்றைய இசையுலகின் ராஜாவாகத் திகழ்ந்துகொண்டிருக்கும் யுவன் சங்கர் ராஜாவின் இசையில் 'தீனா' ஆகிய படங்கள் வெளிவந்தன.

உலக அளவில் அப்பா, மகன்கள் இசையமைத்த படங்கள் ஒரே நாளில் வெளியானது இதுவே முதல் முறை. அத்துடன் இசைஞானியின் மகள் பவதாரணி ஓர் இசையமைப்பாளர்தான். ஆனால் அவர் அந்தத் துறையில் பெரிதாக முத்திரை பதிக்கவில்லை. ஆனால் தந்தையின் இசையில் அமைந்த 'பாரதி' படத்தில் பாடியமைக்காக பவதாரணிக்குச் 'சிறந்த பாடகி' என்ற தேசிய விருது கிடைத்தது என்பது பலர் அறியாத விடயம்.

அத்துடன் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் இசைஞானி வேறு யாருடைய இசையமைப்பிலும் பாடியதில்லை. ஆனால் தனது மகன்களின் இசையமைப் பில் முதன்முறையாகப் பாடியுள்ளார். 'உல்லாசம்' படத்தில் 'யாரோ... யாரோ... என்ற பாடலை மூத்த மகன் கார்த்திக் ராஜாவின் இசையிலும் 'நந்தா' படத்தில் 'தாலாட்ட அன்னையில்லாத பிள்ளைகள்' என்ற பாடலை யுவனின் இசையிலும் பாடிக் கலக்கியுள்ளார்.

காரை. ரி.கஜேந்திரன், பலகாடு, காரைநகர்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந் தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங் கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களை யும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

### இளவல்கள் வட்டம்

### விமர்சனம்



*அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறி யமைக்குமான காரணம் என்ன? உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.*

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராப்பின் அறிக்கை குறித்து மன்னிப்புச் சபை அதிருப்தி

லண்டன்,ஏப் 19

அமெரிக்க நாடாளுமன்றத்தில், போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்ரீபன் ராப் இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

ஸ்ரீபன் ராப் தலைமையிலான பூகோளக் குற்றவியல் நீதிப் பணியகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில், நல்லிணக்க ஆணைக் குழு பதிலளிக்கத் தவறிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசு சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி விசாரிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்தப் பரிந்துரையைக் கடுமையாக விமர்சித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க அமெரிக்கா ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கை தொடர்பான வல்லுனர் ஜிம் மக் டொனால்ட் கருத்து வெளியிடுகையில்,

போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசு சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைமீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இலங்கையின் நீண்ட கால வரலாற்றில் உண்மையான பொறுப்புக் கூறுதலுக்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும் இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை நீதியை வழங்கும் என்று இனிமேலும் எதிர் பார்த்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இருதரப்பும் மேற்கொண்ட மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு முதற்படியாக அனைத்துலக சுதந்திர விசாரணைக்குழுவை உருவாக்க வேண்டும்-என்றார்.

அதேவேளை, மனித உரிமைகள் கண்காணிப்பகமும் போர்க்குற்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஐ.நா. நிபுணர்குழுவின் பரிந்துரைகளின்படி, சுதந்திரமான அனைத்துலக போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

அத்துடன் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட தமிழர்களின் இனப்படுகொலைக்கு எதிரான அமைப்பும், அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஸ்ரீபன் ராப் சமர்ப்பித்த அறிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. (த)

## முல்லைத்தீவில் 50 வீடுகளை இந்தியக் குழு கையளித்தது

முல்லைத்தீவு, ஏப். 19

இந்திய அரசின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளில் 50 வீடுகளை இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜ் நேற்றுப் பயனாளிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3.20 மணியளவில் முல்லைத்தீவு பொன் நகரில் இடம்பெற்றது.

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது.

நேற்றுப் பிற்பகல் 2.40 மணியளவில் முல்லைத் தீவைச் சென்றடைந்த இந்தக் குழுவினர் முதலில் மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் வைத்தியசாலைக்கு 89 மில்லியன் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களையும் கையளித்தனர். இதன் பின்னர் அங்கிருந்து பொன் நகருக்குச் சென்ற அவர்கள் அங்கு இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட 50 வீடுகளைப் பயனாளிகளிடம் கையளித்தனர்.

இதன் பின்பு தண்ணீரூற்று இ.த.க. பாடசாலைக்குச் சென்ற இந்தக் குழுவினர் அங்கு இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டகட்டடத்தைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வுகளில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, றிஷாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எனினும் முல்லைத்தீவில் இந்தியக் குழுவைச் சந்தித்துப் பேசுவதற்குப் பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-435)

## புலிகளின் வீடியோ வைத்திருந்த நால்வர் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மேன்மைப்படுத்தும் நோக்கத்துக்காக இந்த இயக்கம் கடந்த காலங்களில் போர்முனையில் வெற்றி பெற்ற காட்சிகளையும் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட போர் பயிற்சிக் காட்சிகளையும் கொண்ட வீடியோ படத்தை காட்டிக் கொண்டிருந்த 4 பேரைச் சேருநுவரப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஈச்சிலம்பற்றில் முகத்துவாரத்தில் ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## இலங்கைப் பெண் மீது சைப்பிரஸில் வன்புணர்வு

நிக்கோசியா,ஏப் 19

இலங்கைப் பெண் ஒருவர் சைப்பிரஸின் தலைநகர் நிக்கோசியாவில் வைத்துப் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நிக்கோசியாவின் சப்ரப் அக்லன்ஜா பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த வேளையில் காரில் வந்த ஒருவர் காருக்குள் ஏறுமாறு தன்னை வற்புறுத்தினார் என்று இலங்கைப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் இருந்து தான் தப்பிக்க முயன்ற வேளை, காரில் வந்த நபர் தன்னைப் பலாத்காரப் படுத்திக் காருக்குள் ஏற்றியதாகப் பெண் கூறியுள்ளார்.

பின்னர் நிக்கோசியாவில் கைவிடப்பட்ட இடமொன்றுக்கு தன்னை அழைத்துச் சென்ற அந்த நபர் புணர்வுக்கு அழைத்தார் என்றும் அதற்கு தான் மறுப்புத் தெரிவித்ததாகவும், வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர் தன்னை ஓர் ஆளில்லாத இடத்தில் இறக்கிவிட்டுச் சென்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸின் அத்தலஸ்ஸா பூங்கா பகுதியில் வைத்து குறித்த இலங்கைப் பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் லிமாசோல் அவனியூ பகுதியில் இறக்கிவிடப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் விசாரணைகள் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட இலங்கைப் பெண்ணின் உடலில் வெட்டுக் காயங்களும் எரி காயங்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகவும் சந்தேகத்தின் பேரில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (த)

## யாழ். முஸ்லிம்களுக்கும் இந்திய வீடுகள் தேவை

### அஸ்வர் எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு,ஏப் 19

இந்திய உதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் வீடுகள் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்குப் பயணம் செய்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினருடனான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் குழு அறையில் நடைபெற்றது.

அதில் அஸ்வர் மேலும் தெரிவித்ததாவது:-

48 மணித்தியாலங்களில் யாழ். குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் இன்னமும் சிங்கள கிராமங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர். இந்த இனச் சுத்திகரிப்புக்கு எதிராக எந்தவொரு தமிழ்த் தலைவர்களும் குரல்கொடுக்கவில்லை.

இந்த நிலையில் இந்திய வீட்டுத்திட்டத்தில் முஸ்லிம்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து மனு ஒன்றைக் கைச்சாத்திட்டு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக். கே. காந்தாவிடம் கையளித்திருந்தோம்.

இந்திய வீட்டுத்திட்டங்கள் முஸ்லிம்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தத் தற்பொழுது இலங்கைக்கு வந்திருக்கும் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்-என்றார். (த)

## மரண அறிவித்தல்கள்

### சின்னட்டி தர்மலிங்கம்



செந்தாவத்தை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் தற்போது பொன்னையா வீதி, பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி தர்மலிங்கம் நேற்று (18.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் பாசமிகு கணவரும் கருணாகரன், மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
பன்னாலை.

தகவல்:
கருணாகரன் (கருணா)

### திருமதி குகமூர்த்தி சிவாஜினி



11/14, A.P.C. லேன், முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும், 20, செம்மணி வீதி, முத்திரைச் சந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகமூர்த்தி சிவாஜினி நேற்று (18.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா - நாகேஸ் வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சம்மந்தர் தம்பதியரின் அன்பு மருமகளும், குகமூர்த்தியின் பாசமிகு மனைவியும், யோகேஸ்வரனின் (குட்டி) அன்புத் தாயும், மீனலோஜினி (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), ஸ்ரீதரன் (அமெரிக்கா), முரளிதரன் (சவுதி), பாஸ்கரன் (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி), குமுதினி (கனடா), நாகலோஜினி (பபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்கர் (கனடா), மயூரன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூத வுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, செம்மணி வீதி,
முத்திரச் சந்தை.

தகவல்:
சகோதரி
யோ. நாகலோஜினி (பபி)

### கந்தசாமி சுபாஸ்கரன் (குவைத்)



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது குவைத்தில் வசித்து வந்தவருமான கந்தசாமி சுபாஸ்கரன் கடந்த (16.04.2012) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சிவேற்திராதேவி தம்பதியரின் அன்பு மகனும், சிவகுமார் (குவைத்), ஜெயந்தினி (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகநந்தினியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.


## வாடகைக்கு

சுண்டுக்குளிப்பகுதியில் இரண்டு பேர் தங்கக்கூடிய அறை வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும் வேலைபார்ப்பவர்கள், படிப்பவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு:- 0758255439

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:-
0752430841

## இலங்கை நிர்வாக சேவை SLAS
## இலங்கை திட்டமிடல் சேவை SLPS

திறந்த போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டிக்கருத்தரங்கு

ஆரம்பம்:- 22.04.2012 சனி காலை 9.00 மணி
(ஒவ்வொரு சனியும் காலை 9-3 மணி வரை)

விரிவுரை:- திரு. P.உமாசங்கர்
திரு. P.கமல்தாசன்

(கடந்தகால, மாதிரி வினா விடைகளும் ஆராயப்படும்)

... நிலையம்
... TP:-0718130390


## மரண அறிவித்தல்

### திருமதி வைரமுத்து சிவபாக்கியம்

வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து சிவபாக்கியம் நேற்று (18.04.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் வைரமுத்துவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், பிரசித்த நொத்தாரிசு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ர புதல்வியும், காலஞ்சென்ற கனகரத்தினம் (ஓய்வு பெற்ற கணக்காளர்), நல்லம்மா மற்றும் செல்வரத்தினத்தின் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) பாசமிகு சகோதரியும், சபாநாதன் (ஓய்வு பெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி), சத்தியவதி, காலஞ் சென்ற பாலச்சந்திரன் (இரசாயன பொறியியலாளர்), கலாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), சுந்தரேசன் (ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழ கம்), ரேவதி (ஆசிரிய ஆலோசகர், மன்னார்), சிவாஜி (பொறியியல் உதவி யாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), புனித வதி (தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சூரியபுத்திரி, தவரத்தினராசா (ஓய்வுபெற்ற முகாமையாளர், தென்னை ஆராய்ச்சி நிலையம், லுனுவில), நவயோகம் (லண்டன்), குலநாயகம் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், (இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர்) செல்வமலர் (அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), எம்.எம். சியான் (கல்விப் பணிப்பாளர், மன்னார்), கலாவதி, கஜேந்திரன் (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை உபஅலுவலக கம் பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2012) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வலுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை வடக்கு,
சித்தங்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட மகளிர் கிரிக்கெட்

# சங்கானை சம்பியன்



துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் பானுப்பிரியா கலக்க, சங்கானைப் பிரதேச செயலக அணி இலகுவாக நல்லூர் அணியை வீழ்த்தி சம்பியனானது.

வலி.வடக்கு ஏப்.19

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே யாழ் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு நடத்திய பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆறு பேர் பங்கு பற்றும் 05 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சங்கானைப் பிரதேச செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சங்கானைப் பிரதேச செயலக அணி 05 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 62 என்ற இமாலய இலக்கை எதிரணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

சங்கானைப் பிரதேச செயலக அணி சார்பில் எஸ்.பானுப்பிரியா 30 ஓட்டங்களையும், கே.சுகன்யா ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 08 ஓட்டங்கள் பெறப்பட்டன. இந்தப் போட்டியில் அதிரடியாக ஆடிய பானுப்பிரியா இறுதிப்பந்தில் மூன்றாவது ஓட்டத்தைப்பெற எத்தனித்தபோது 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார்.

62 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி 05 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 29 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நல்லூர் பிரதேச செயலக அணி சார்பில் என்.கௌதமி17 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். இதனால் 33 ஓட்டங்களால் வெற்றியீட்டி மாவட்டச் சம்பியன் பட்டத்தை சங்கானைப் பிரதேச செயலக அணி சுவீகரித்துக்கொண்டது.

சங்கானைப் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த எஸ்.பானுப்பிரியா ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

சகல துறைகளிலும் பிரகாசித்து, போட்டியின் ஆட்ட நாயகி விருதை சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.பானுப்பிரியா தனதாக்கினார். (ங-86)

## தென்மராட்சி கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

தென்மராட்சி, ஏப்.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டப் பெருவிளையாட்டுக்களின் முடிவுகள் வருமாறு:-

**எல்லே**

**19 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:- வரணி மகாவித்தியாலயம்

3ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

**19 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

2ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:-வரணி மகாவித்தியாலயம்

**கபடி**

**15 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

2ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**19 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

3ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

**15 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

2ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

3ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**19 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

3ஆம் இடம்:-சாவகச்சேரி மகளிர்

**பட்மின்ரன்**

**15 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:-கச்சாய் க.த.க.பாடசாலை

**19 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

3ஆம் இடம்:-வரணி மகாவித்தியாலயம்

**15 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

2ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

3ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

**19வயது பெண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி மகளிர்

2ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

**மேசைப் பந்து**

**19 வயது ஆண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:-மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி

3ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க்

**19 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-சாவகச்சேரி மகளிர்

2ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

**வலைப்பந்து**

**15 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

2ஆம் இடம்:- வரணி மகாவித்தியாலயம்

3ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**17 வயது பெண்கள்**

1ஆம் இடம்:-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

2ஆம் இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:- வரணி மகாவித்தியாலயம்

**19 வயது பெண்கள்**

1ஆம் இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2ஆம் இடம்:- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

3ஆம் இடம்:- சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (9)

## இளைஞர் கழக கிரிக்கெட் போட்டி மானிப்பாயை வீழ்த்தியது சுதுமலை

பண்டத்தரிப்பு,ஏப்.19

வலிகாமம் தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் சுவீகரித்துக்கொண்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தச் சுற்றுத் தொடரில் பிரதேசத்தில் உள்ள 9 இளைஞர் கழக அணிகள் பங்கு பற்றியிருந்தன. ஆரம்பப் போட்டிகளின் அடிப்படையில் இறுதி ஆட்டத்துக்கு சுதுமலை வடக்கு இளைஞர் கழகமும் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் தகுதி பெற்றிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் 8 பந்துப் பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய துவாரகன் 6 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய்மேற்கு இளைஞர் கழக அணித் தலைவர் சுபாகர் மற்றும் கபிலன் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சினால் 41 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் சுபாகர் 4 இலக்குகளையும் கபிலன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். இதனடிப்படையில் சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-130)



## ஹொக்கிப் போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் ஹொக்கி அணி வீரரும் நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியருமான எஸ்.சிவாணந்தா கலந்து கொள்வார். இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதுகின்றது. (ங-23)

## 20/20 சுற்றுப்போட்டி இன்று

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை 5 ஆவது வருடமாக அகில இலங்கை ரீதியாக 'நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்துக்காக' நடத்தும் 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது

இன்று ஆரம்பமாகும் சுற்றுப் போட்டி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் 16 பாடசாலைகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ங-23)

## படையினர் நடத்திய புத்தாண்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள 513 ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் புத்தாண்டு விழாவையொட்டி கடந்த வியாழக் கிழமை 12 ஆம் திகதி பகல் யாழ்.மாவட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான 26 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப்போட்டி மானிப்பாய் மருதடி ஆலய முன்றிலில் ஆரம்பமாகி அதே இடத்திலேயே முடிவுற்றது.

இந்த மரதன் ஓட்ட நிகழ்வில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

முதலாம் இடம்-ஜெ. ஜெயந்தன்,

இரண்டாம் இடம்-எஸ். ஞானேஸ்வரன்,

மூன்றாம் இடம்-எஸ். தனிஸ்டன்,

நான்காம் இடம்-வி.நிஷாந்தன்,

ஐந்தாம் இடம்-எம்.பி. ரூவான் பிரதீப்,

ஆறாம் இடம்-பி.ஜெயந்தன்,

ஏழாம் இடம்-கே.ரவீந்திரன்,

எட்டாம் இடம்-மு.பிறேம்,

ஒன்பதாம் இடம்-எஸ்.யசிந்தன்,

பத்தாம் இடம்-கே.பிரதீபன்.

பெண்களுக்கான 15 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

முதலாம் இடம்-ஜே.மறியகொறற்றி,

இரண்டாம் இடம்-என். சுமதி,

மூன்றாம் இடம்-எம். தாரணி,

நான்காம் இடம்-பா.தனுசேந்தினி,

ஐந்தாம் இடம்-யு.கே.ரட்நாயக்கா,

ஆறாம் இடம்-இ.தமிழரசி,

ஏழாம் இடம்-எம்.எ.டி. எல்.முதமாரி,

எட்டாம் இடம்-கே.யு. என்.வீரசிங்கா,

ஒன்பதாம் இடம்-வி.தினோபா,

பத்தாம் இடம்-கு.சஜீபா.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை 513 ஆவது படைகளின் கட்டளைத் [illegible] வழங்கி கௌரவித்தனர். (த-86)

## மெதுவாக இன்னும் மெதுவாக...



புத்தாண்டை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலகம் நடத்திய ஆண்களுக்கான 'மெதுவாக சைக்கிளைச் செலுத்தும்' போட்டியில் பங்குபற்றிய சிறுவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்ல் சிக்ஸர் மழை பெங்களூருக்கு வெற்றி



ஐ.பி.எல். 5ஆவது தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 183 ஓட்டங்களைத் துரத்திய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி கடைசிவரை போராடி, 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றது.

ஐ.பி.எல். 5ஆவது தொடரின் 21ஆவது லீக் போட்டி பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் புனே வாரியர்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற புனே வாரியர்ஸ் அணியின் தலைவர் சௌரவ் கங்குலி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இதனையடுத்து தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஜெஸி ரைடரும், ரொபின் உத்தப்பாவும் அணிக்கு சிறப்பான தொடக்கத்தை அளித்தனர். 22 பந்துகளை சந்தித்த ஜெஸி ரைடர் 1 சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடித்து 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

ரொபின் உத்தப்பா தனது அதிரடியைத் தொடர்ந்து நடத்தி அரைச்சதம் கடந்தார். அவருக்கு ஒத்துழைப்பு அளித்த அணித்தலைவர் சௌரவ் கங்குலி 6 ஓட்டங்களில் வெளியேறினார். 2 சிக்ஸர், 9 பவுண்டரிகளை விளாசிய ரொபின் உத்தப்பா 69 ஓட்டங்கள் எடுத்து வெற்றோரியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அதன் பிறகு சாமுவேல்ஸும், ஸ்மித்தும் ஜோடி சேர்ந்து அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர். ஆனால் முதலில் ஸ்மித்தும், அவரை தொடர்ந்து சாமுவேல்ஸும் அடுத்தடுத்து எதிர்பாராத வகையில் ஆட்டமிழந்தனர். கடைசிக் கட்டத்தில் அதிரடியாக ஆடி 10 ஓட்டங்கள் எடுத்த அஞ்சலோ மத்யூஸ் பிடி கொடுத்து வெளியேறினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் புனே வாரியர்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களை குவித்தது. வினய் குமார் சிறப்பாக பந்து வீசி 2 இலக்குகளை வீழ்த்தினார்.

183 ஓட்டங்களை துரத்திய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி தொடக்கத்திலேயே டில்ஷானின்(4) இலக்கை இழந்தது. அதன்பிறகு வந்த அகர்வாலும்(9) ஏமாற்றினார். அணியின் வெற்றிக்காக பொறுப்பாக ஆடிய விராத் கோஹ்லி 16 ஓட்டங்களில் வெளியேறினார்.

இலக்குகள் ஒருபுறம் வரிசையாக வீழ்ந்து கொண்டே இருக்க தொடக்க வீரர் கிறிஸ் கெய்ல் தொடக்கத்தில் பொறுமையாகவும், பின்னர் அதிரடியாகவும் ஆடினார். 13ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சரவெடியாக வெடித்தார் கெய்ல். ராகுல் சர்மாவின் பந்துகளில் தொடர்ச்சியாக 5 சிக்ஸர்களை அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். (இதில் ஒரு சிக்ஸருக்குச் சென்ற பந்து சிறுமி ஒருத்தியின் மூக்கைப் பதம் பார்த்து அவளை வைத்திய சாலைக்கு அனுப்பியது) அத்தோடு ஆட்டத்தின் போக்கையும் தனது அணியின் பக்கம் திருப்பினார்.

அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்த கிறிஸ் கெய்ல் 48 பந்துகளைச் சந்தித்து 8 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உட்பட 81 ஓட்டங்களைக் குவித்து நெஹ்ராவின் பந்தின் இலக்குத் தகர்ந்து வெளியேறினார். இறுதிக் கட்டத்தில் வந்த டி வில்லியர்ஸ், திவாரி ஜோடி அணியின் வெற்றிக்காக அதிரடியாக ஆடினர்.

கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த டி வில்லியர்ஸ் 14 பந்துகளைச் சந்தித்து 3 சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடித்து 33 ஓட்டங்களை எடுத்தார். அவருக்கு ஒத்துழைப்பு அளித்த திவாரி 33 ஓட்டங்களை எடுத்தார். கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பரபரப்பான இந்த நிலையில் சிக்ஸர் அடித்த திவாரி அணியின் வெற்றியை உறுதி செய்தார். போட்டியில் சிக்ஸர் மழை பொழிந்து வெற்றியை பறித்த கெய்ல் ஆட்டநாயகனானார். (ந)



# சங்காரமானது சங்காவின் அணி



ஐ.பி.எல்., லீக் போட்டியில், கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் அசத்திய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில், டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது. டெக்கான் அணி, 'ஹாட்ரிக்' தோல்வியைச் சந்தித்தது.

ஜெய்ப்பூரில் நேற்றுமுன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 20ஆவது லீக் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டெக்கான் அணித் தலைவர் சங்கக்கார, துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

டெக்கான் அணிக்கு சங்கக்கார, ஷிகர் தவான் ஜோடி அசத்தலான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. பங்கஜ் சிங் வீசிய ஆட்டத்தின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சங்கக்கார, அமித் சிங், போத்தா, ஹொட்ஜ் ஆகியோரது பந்துகளிலும் தலா ஒரு பவுண்டரி அடித்தார். முதல் இலக்குக்காக இந்த இணை 94 ஓட்டங்கள் சேர்த்த போது, ஹொட்ஜ் சுழலில் சங்ககரா (44) சிக்கினார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்பு தந்த ஷிகர் தவான், ஐ.பி.எல்., அரங்கில் தனது 9ஆவது அரைச்சதம் அடித்தார். இவர் 52 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, திரிவேதி பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் கிறிஸ்டியனுடன் இணைந்த டுமினி, அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார். ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சை வெளுத்துவாங்கிய டுமினி, அந்த அணியின் திரிவேதி, பங்கஜ் சிங், அமித் சிங் ஆகியோரது பந்துகளை சிக்ஸருக்குப் பறக்கவிட்டார். அபாரமாக ஆடிய இவர், 24ஆவது பந்தில் அரைச்சதம் அடித்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த கிறிஸ்டியன், ஹொக் பந்தில் ஒரு சிக்ஸர் அடித்து நம்பிக்கை அளித்தார். டெக்கான் அணி, 20 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குளை இழந்து 196 ஓட்டங்களைக் குவித்தது.



சவாலான இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு டிராவிட், ரகானே இணை பலமான அடித்தளத்தை அமைத்தது. ஸ்ரைன் வீசிய ஒரு பந்துப் பரிமாற்றத்தில் மூன்று பவுண்டரிகள் அடித்த டிராவிட், கிறிஸ்டியன், ஆனந்த் ராஜன் ஆகியோரது பந்துகளையும் விட்டுவைக்கவில்லை. முதல் இலக்குக்காக 62 ஓட்டங்கள் சேர்த்த போது, கிறிஸ்டியன் வேகத்தில் துரதிர்ஷ்டவசமாக டிராவிட் (42) போல்டானார். அடுத்து வந்த அசோக் மனேரியா (22) ஓரளவு நம்பிக்கை அளித்தார். மறுமுனையில் பொறுப்பாக ஆடிய ரகானே(44), அமித் மிஸ்ரா சுழலில் சிக்கி அரைச்சத வாய்ப்பை இழந்தார்.

அதன் பின் களமிறங்கிய ஓவைஸ் ஷா (12) பெரிய அளவில் சோபிக்கவில்லை. ஒரு சிக்ஸர் அடித்த போத்தாவும் (14) நிலைக்கவில்லை. அதிரடியாக ஆடிய ஹொட்ஜ், ஸ்ரைன் வீசிய பந்துப் பரிமாற்றத்தில் தொடர்ந்து நான்கு பவுண்டரிகள் அடித்தார். ஆனந்த் ராஜன் பந்தில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்த இவர், கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை 11 ஆகக் குறைத்தார்.

ஸ்ரைன் வீசிய இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் முதலிரண்டு பந்துகளில் ஹொட்ஜ் மூன்று ஓட்டங்களை எடுத்தார். அடுத்த இரண்டு பந்துகளையும் பவுண்டரிக்கு அனுப்பிய திஷாந்த் யாக்னிக், அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். ராஜஸ்தான் அணி 19.4 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. ஹாட்ஜ் (48), யாக்னிக் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகனாக ராஜஸ்தான் அணியின் ஹொட்ஜ் தேர்வு செய்யப்பட்டார்.(ந)

# முன்னிலை பெற்றது ஆஸி.

மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வீரர்களில் சந்தர்போல் மாத்திரம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட அந்த அணி முதலாவது இன்னிங்ஸில் 9 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலிய அணி தொடர்ந்தும் பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

ஆஸ்திரேலிய அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ரினிடாட்டில் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

வொட்ஸன், மைக் ஹஸி இருவரது அரைச்சதத்தின் உதவியுடன் முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 135 பந்துப் பரிமாற்றங்களைச் சந்தித்து 311 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் கெமர ரோச் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்திலிருந்து சரிவுகளை தொடர்ச்சியாகச் சந்தித்தது. நேற்றுமுன்தினம் ஆட்ட நேர நிறைவில் 25.3 பந்துப் பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. களத்தில் பிராவோ 16, சந்தர் போல் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் ஆரம்பிப்பதில் குழப்பம் ஏற்பட்டது. மைதானத்தில் மின்சாரத் தடை ஏற்பட்ட நிலையில் ஆட்டம் 20 நிமிடங்கள் தாமதித்தே ஆரம்பித்தது.

நேற்றைய நாள் ஆட்டம் 9.30 இற்கு ஆரம்பிக்கவிருந்த நிலையில் வீரர்களும், நடுவர்களும் மைதானத்தை நோக்கிச் சென்ற போதிலும், மைதானத்தில் மின்சாரத் தடை காணப்படுவதால் ஆட்டத்தை ஆரம்பிக்க முடியாது என்று ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டது. மின்சாரத் தடை காணப்படுவதால் [illegible] திட்டத்தைச் செயற்படுத்த முடியாது என்ற காரணத்தால் ஆஸ்திரேலிய அணி ஆட்டத்தில் பங்குபற்ற மறுத்தது என்று முதலில் தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், அது தவறான தகவல் எனப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின் படி மின்சாரத்தடை காரணமாக ஆட்டத்தை ஒளிபரப்ப முடியாத நிலையில், விளம்பரதாரர்களின் ஒப்பந்தத்தை மீறுவதாக அமையும் என்ற காரணத்தால் ஏற்பாட்டாளர்கள் ஆட்டத்தை ஆரம்பிப்பதற்கு தயங்கியுள்ளனர். எனினும் நடுவர்கள், அணித்தலைவர்கள், ஊழியர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து மின்சாரமில்லாத நிலையிலும் ஆட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சந்தர்போல், டரன் பிராவோ இருவரும் இணைந்து மேற்கிந்தியத்தீவுகளுக்கு சிறப்பான ஆட்டத்தை வழங்கினர். இவர்களது [illegible] நான்காவது இலக்குக்காக 62 ஓட்டங்கள் பகிரப்பட்டது. மைக் ஹஸியின் பந்து வீச்சில் டரன் பிராவோ 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் களமிறங்கிய டெனோ நரேன், சந்தர்போலுடன் இணைந்து தனது பங்களிப்பை வழங்க மேற்கிந்தியத்தீவுகளின் ஓட்ட எண்ணிக்கை வலுவான நிலைக்குச் சென்றது. சந்தர்போல் தனது 57 ஆவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். 130 ஓட்டங்கள் 5 ஆவது இலக்குக்காக பகிரப்பட மேற்கிந்தியத்தீவுகள் அணி 230 ஓட்டங்களைப் பெற்றது.


சந்தர்போலுடன் நின்றாடிய டெனோ நரேன் தனது 3 ஆவது அரைச்சதத்தை கடந்த நிலையில் நதன் லயோன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். லயோனின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் சந்தர்போல் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்டம் முடிவுக்கட்டத்தை நெருங்கியது.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர நிறைவில் 104 பந்துப் பரிமாற்றங்களில் 252 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்துள்ளது. களத்தில் போச் 17, பிடல் எட்வேட்ஸ் கணக்கை ஆரம்பிக்காத நிலையிலும் உள்ளனர். பந்து வீச்சில் லயோன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டியதால் திருப்பித் திட்டினேன்



புனே வாரியர்ஸ் அணியின் வீரர் ஸ்ரீவ் ஸ்மித் தன்னை திட்டியதாக சென்னை சூப்ப கிங்ஸ் அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

ஐந்தாவது ஐ.பி.எல். 'ரி-20' கிரிக்கெட் தொடரின் புனே வாரியர்ஸ், சென்னை சூப்ப கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான 16 ஆவது லீக் ஆட்டம் கடந்த சனிக்கிழமை புனேயில் உள்ள சுப்ரதாராய் சகாரா மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் புனே வாரியர்ஸ் அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது 15 ஆவது பந்துப் பரிமாற்றத்தை ரவிச்சந்திரன் அஸ்வின் வீசிக் கொண்டிருந்தார். அப்போது பந்துவீச்சாளரின் பகுதியில் ஸ்டீவ் ஸ்மித் நின்று கொண்டிருந்தார்.

பந்துவீச்சாளர் பந்துவீசும் வரை மறுமுனையில் நிற்கும் துடுப்பாட்ட வீரர் கோட்டை விட்டு வெளியேறக்கூடாது என்ற ரீதியில் ஸ்டீவ் ஸ்மித் கோட்டை விட்டு வெளியேறி விட்டார் எனத் தெரிவித்த அஸ்வின் அவருக்கு எச்சரிக்கை வழங்கினார். எனினும் அஸ்வின் எச்சரிக்கை வழங்கிய போது ஸ்மித் கோட்டுக்கு உள்ளேயே நின்று கொண்டிருந்தார். அதன் காரணமாக இரண்டு வீரர்களுக்குமிடையில் வாய்த் தகராறு ஏற்பட்டிருந்தது.

ஸ்டீவ் ஸ்மித்தை நோக்கி அஸ்வின் விரலை நீட்டித் தொடர்ந்தும் தர்க்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஆனால் ஸ்மித்தின் மீதே தவறு எனத் தெரிவித்த அஸ்வின், விதிகளை அறியாமல் அவர் தன்னைத் திட்டியதாவும், அதன் காரணமாகத் தான் அவரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)

"முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் ........"
(ஆகாய் 2:9)

## பரிசுத்த ஐக்கிய உபவாச ஜெபம்

இடம்: AOG சபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
காலம்: 21.04.2012, சனிக்கிழமை
நேரம்: மு.ப. 9.00 - பி.ப. 2.00

குடும்பம் குடும்பமாக புறப்பட்டு வாருங்கள்
ஆகாய் 2:4

ஜெப இணைப்பாளர்,
யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்.

## யாழ் மண்ணின் மருத்துவ சேவையை பூர்த்தி செய்யும் வகையில்



★ வெளி நோயாளர் பிரிவு (MBBS வைத்தியர்களின் காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையான வைத்திய சேவை)
★ உள் நோயாளர் பிரிவு
★ அதி நவீன ஆய்வுகூட சேவை (உங்கள் முழு உடல், இரத்த, சல பரிசோதனைகள் அனைத்தும்)

போன்ற சேவைகளுடன் கூடிய யாழ் பிரபல வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனை மற்றும் சிகிச்சைகளும் தினமும் வழங்கப்படும்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படும்.

இலவசம் இலவசம் இலவசம்

சாந்தம் வைத்தியசாலை
3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 567 7756 / 021 567 6577

## வங்கித்துறைக்கான வகுப்புகள்

CBF - 3.00 pm
DBF - 4.00 pm
ஆரம்பம் 21.04.2012 (சனி)
அனைத்துப் பாடங்களும் ஆரம்பம்
CBM
இயக்குநர்
N. Umakanth (0777110756)
33, Temple Road, Kokuvil East, Kokuvil.

## யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்

இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல. : 15251

## மாபெரும் கருத்தரங்கு

வங்கியியல் கற்கைநெறிகளும், நிதி, கணக்கீட்டு கற்கையும்
CBF, DBF, ACCA
காலம் : சனி, ஞாயிறு மாலை : 2.00 pm - 3.00 pm

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:
இயக்குநர், யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனம்,
(ஆரியகுளம் சந்திக்கும் அப்பலோ வைத்தியசாலைக்கும் அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 5670345 Email - jtiedu@gmail.com.

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 21.4.2012 சனிக்கிழமை
ஆங்கிலம் | பிரெஞ்சு
பிரிவு 1 - காலை 8 - 9 | காலை 10 - 11
பிரிவு 2 : மாலை 3 - 4 | வெறும் 25 ஆம் கட்டணம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456

## மேலதிக ஆளணியினருடன் ஆஸ்திரேலியா திசைகாட்டியின் கிளை இன்று விஸ்தரிக்கப்படுகின்றது



எம்மிடம் இலங்கையில்
ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
Student Visa
ஆலோசனை பெற்றுச் செல்பவர்களை

★ ஆஸ்திரேலியாவில் விமான நிலையத்தில் இருந்து இலவசமாக அழைத்துச் செல்வதற்காகவும்.
★ குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும்.
★ பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைகளுக்காகவும்.

THISAIKADDI (Pvt) Ltd. (PV82703)
504, Hampton Street,
Malborne,
Australlia,
Land Phone : 0061390437100



எங்கள் கிளை எந்நேரமும் திறந்திருக்கும் என்பதை அனைத்து அன்புள்ளங்களுக்கும் பெரும் மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
தலைமைக் காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 2219016

இல. 115ஏ, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி 021 228 5544
இல. 22ஏ, பிரான்பெட் பிளேஸ்,
பம்பலப்பிட்டி 011 [illegible]

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 23.04.2012 | Batch II: 24.04.2012 | Batch III : 25.04.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Quick Learning Course (Spoken English with Grammar) 1 ½ Months

Diploma In English 2 ½ Months

✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்

A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 ½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.